Koviloor Digital Library

வாழ்க்கை வழிகாட்டி வீமீஸ்வரர்



Acc.No. 16579

செரப்பணஞ்சேரி வீமீஸ்வரமுடையான்

செரப்பணஞ்சேரி

Koviloor Digital Library

திருக்கைலாயம்

Koviloor Digital Library

இந்த இனிய,
என்றும் பயன் தரும்
நூலை பரிசாக
வழங்குவதில்
பெரு மகிழ்வு கொள்ளும்

[illegible]

P. லிங்கன்
லிங்கன் டீ கம்பெனி
சென்னை

[illegible]

Koviloor Digital Library

[illegible]
[illegible] 1st, 1st நகர்,
குரோம்பேட்டை, சென்னை-600044.
☎:[illegible]

[illegible]
[illegible] 1st, 1st நகர்,
குரோம்பேட்டை, சென்னை-600044.
☎:[illegible]

KOVILOOR
A. No. 16579
Q: 1
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

தினசரி வழிபாட்டு நூல்

பலன் தரும் திருமுறைப் பதிகங்கள்

வெளியிட்டோர் :

லிங்கன் டீ கம்பெனி

14, வ.உ.சி தெரு, மேற்கு தாம்பரம்,

சென்னை - 45.

போன் : 22260439,22266267

Koviloor Digital Library

நூல் குறிப்பு

தலைப்பு	:	**பலன் தரும் பதிகங்கள்**
முதல்பதிப்பு	:	ஆகஸ்ட் 2011 / 2500 பிரதிகள்
பத்தாம் பதிப்பு	:	டிசம்பர் 2012 / 5000 பிரதிகள்
மொத்த படிகள்	:	65000
அளவு	:	கிரவுன் 1/8
தாள்	:	11.6 Kg (60 gsm)
பக்கம்	:	224

இலவச வெளியீடு – விற்பனைக்கு அல்ல.

அச்சிட்டோர் : **ஸ்ரீ கைலாஷ் பிரிண்டர்ஸ்,**
32, பங்காரு நாயக்கன் தெரு,
மவுண்ட் ரோடு, சென்னை–600 002.
போன் : 9444089506 / 28611506.

நூல்கிடைக்குமிடம் : **லிங்கன் டீ கம்பெனி**
14, வ.உ.சி தெரு,மேற்கு தாம்பரம்,
சென்னை – 45.போன் : 22260439

வீமீஸ்வரமுடையன் ஆலய வழிதடம் மற்றும் ஆலய விபரம்

சூரியபகவான் மேற்கு நோக்கி வீமீஸ்வரமுடையனை வழிபடுகிறார்.இரண்டு புஷ்கரினி, சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பு கட்டியது. பழைமையான புராதான ஸ்தலம். தாம்பரம் – காஞ்சிபுரம் மார்கத்தில் படப்பையை தாண்டி 2 கி.மீ. தொலைவில் செரப்பணஞ்சேரி கிராமம். அதன் வடக்கு பக்கத்தில் வீமீஸ்வரமுடையான் ஆலயம் அமையப்பெற்றுள்ளது.

தாம்பரம், காஞ்சிபுரம், வாலாஜாபாத், வல்லக்கோட்டை ஆகிய அனைத்து பேருந்துகளும் வரும். இறங்குமிடம் செரப்பணஞ்சேரி. ஆலயம் தினமும் காலை 6.30 மணி முதல் 9 மணி வரை. விசேஷ தினங்களில் மாலை வேளையிலும் கூடுதல் நிகழ்ச்சிக்கு ஏற்ப திறந்திருக்கும். மேலும் ஆலயம் பற்றி விபரம் அறிய நேரில் வரவும்.

மக்களின் சங்கடம் தீர இலவசமாக வெளியிடுவோர்
லிங்கன் டீ கம்பெனி.

Koviloor Digital Library

உ

முன்னுரை

ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் இந்த ஒரு புத்தகத்தை தொடர்ந்து படித்தாலே அதுவே முத்திக்கு வழி.

சிவபெருமான் பாதங்கள் சரணடைவீர்
வாழ்க்கையில் துன்பம் நீங்கி பயனடைவீர்!

சிவபுராணம் ஸ்தோத்திரம்

எல்லாவுலகங்களுக்கும் தலைவனே! ஞான சொரூபியே! முதற் காரணனே! திரிகரணங்களுக்கும் எட்டாதவனே! உனக்கு வெற்றி உண்டாகுக! சமான ரஹிதனே எண்ணற்கரியவனே! முழுமங்கலஸ்வரூபியே! தாணுவே காரண ரஹிதனே! பரமானந்த ஸ்வரூபியே! அனந்த காரணனே! ஈஸ்வரனே! தலைவனே! திருவருள் ஸ்வரூபனே! உனக்கு ஜயமுண்டாகும். சர்வாண்டங்களிலும் வியாபித்து விளங்குபவனே யாவற்றுக்கும் மேலானவனே! உனக்கு மேலாக ஒன்றும் இல்லாதவனே! அழிவில்லாதவனே! உற்பத்தியில்லாதவனே மாயா அதீதனே! இந்தப் பூஜையை அடியேன் செய்ததனால் உண்டாகும் பயனை எளியேன் அடையும்படித் திருவருள் செய்ய வேண்டும்.

உலகங்கள் யாவற்றுக்கும் தாயாகியுள்ளவனே! உலக ஸ்வரூபியானவனே! பேரழகுடையவனே! மனதில் உண்டாகும் அஞ்ஞானத்தை ஒழிப்பவனே! எல்லாச் சமயங்களுக்கும்

Koviloor Digital Library

தலைவியே! குணஸ்வரூபியே! நிர்க்கண ஸ்வரூபியே ஞானிகள் இதயத்தில் எழுந்தருளியிருப்பவனே! ஜய!ஜய! சர்வ லோகங்களுக்கும் தலைவனாகிய சிவபெருமானுடைய மனைவியாக விளங்குபவளே! தேவர் முதலிய யாவரும் துதி செய்யப் பெற்றவளே! உலகத்தைப் படைப்பவளே! மங்கலயங்களையெல்லாம் உண்டாக்குபவளே! உன்னுடைய திருவடியை எனது இதயத்தில் இருத்தி என் ஆவலால் துதித்து, என் சிரத்தால் பணிகிறேன். தேவீ! உன்னிடத்திலேயே சர்வாண்டங்களும் லயமடைவன. சூலாயுதம் ஏந்திய எந்தையாகிய சிவபெருமான் உன்னையன்றிப் பயன் அளித்தது இல்லை. ஆதலின் அண்ட கோடிகளிலுள்ள ஆன்மாக்கள் யாவும் உன்னுடைய திருவடிகளுக்கே பணி செய்யும்.

உன்னுடைய திருவருளை எனக்கு அருள் செய்ய லேண்டும். ஐந்து திருமுகங்களும், பத்துத் திருக்கரங்களும் ஸபடிக நிறமும் உடைய அக்ஷர ரூபியும் பிரமரூபியும் காலரூபியும் ஆகிய சகல நிஷ்கன வபடிவமைந்த சிவமாய், சாந்தியாதீதத்தில் அமர்ந்தருளிய சதாசிவமூர்த்தி நன்றாகத் திருவருள் புரிவார். ஆகையால் அப்பெருமானின் திருத்தொடையின் மேல் இச்சா சக்தி வடிவாகப் பொருந்தி யாவற்றுக்கும் தாயாகியுள்ளவளே! என்னைப் பாவங்கள் அணுகாதவாறு விலக்கி அழியாத உயர்பதவியைத் தந்தருள வேண்டும். ஜடா முடியையுடைய சங்கர பகவானும் பர்வதராஜ புத்திரியாகிய உமா பிராட்டியாரும் அய்புடையவர்களாய் திருவாய் மலர்ந்தருளும் சிவஞானம் ஆகிய இனிய அமுதத்தை யருந்தும் பிரமதேவனும் திருமாலும் பணிந்து துதி செய்ய விளங்கும் விநாயகக் கடவுளும் முருகக் கடவுளும் எனக்குத் திருவருள் புரிய வேண்டும்.

ஒளிவீசும் ஸ்படிக நிறமுற்று, அடியார்கள் செய்யும் துதியையே ஆபரணமாக ஏற்கும் சதாசிவ வடிவமாய் பாலசூரியன் போன்ற நிறம் அமைந்த பகவன் சிரோமூர்த்தியாகக் கூறப்பட்டு,

Koviloor Digital Library

சாந்தியாதீதபதமாய் விண்ணிடைப் பொருந்தி அளவிடுவதற்கு அரிய பஞ்சாக்ஷரங்களில் இறுதியிலுள்ள யகாராக்ஷராமகிய ஐந்து கலைகளுடன் கூடி அறிவதற்கு அரியதாய் விளங்கும் ஈசானப் பிரம்ம உமாதேவியுடன் அடியேன் பூஜை செய்வதற்குத் திருஉள்ளம் இரங்கி என் பாவங்களை அகற்றியருள வேண்டும். பாலசூரிய வடிவமாக விளங்கித் தன்னருள் புரியும் சிவபெருமானின் கீழ் முகமாகி சாந்தீபமாக, ஆன்மாவாய் வாயுவில் வசிப்பதாய், பஞ்சாக்ஷரங்களில் நான்காவதாகிய வாகராக்ஷரமாய் நான்கு கலைகளுடன் கூடியமர்வதுமாய் விளங்கும் தற்புருஷப் பிரம்ம நெடிய கண்களையுடைய உமாதேவியுடன் கூடி அடியேன் மலர்தூவி அர்ச்சித்த பூஜைக்கு மனமகிழ்ந்து, என் மனமயக்கத்தை அறவே ஒழித்து மகிழ்ச்சியுடன் திருவருள் செய்ய வேண்டும். அஞ்சகிரி போன்ற ஆதாரம் உடையதாய் ஈஸ்வரனத தெற்கு முகமாகிக் கொடுமை வாய்ந்த அகோரமூர்த்தியாய் வித்தியாபதமாய் அக்கினியில் பொருந்தியதாய் பஞ்சாக்ஷரங்களில் மூன்றாவதாகிய சிகாராக்ஷரமாய் எட்டுத் தலைகளுடன் விளங்குவதாகவுள்ள அகோரப் பிரம்மம் எளியேனுடைய குற்றங்களை மன்னித்து உமாதேவியாருடன் என் பூஜையை ஏற்று மகிழ்ந்து, என் பாவங்களை ஒழித்துத் திருவருள் புரிய வேண்டும். குங்கும நிறமுடையதாய் ஈஸ்வரனுடைய வடக்கு மகமாய்ப் பிரதிஷ்டாபதமுடையதாய், ஜலத்தில் விளங்குவதாய், பஞ்சாக்ஷரங்களில் இரண்டாவதாகிய மகாராக்ஷரமாய் பதின்மூன்று கலைகளுடன் கூடி விளங்கும் வாமதேவப் பிரமம் உமாதேவியுடன் பொருந்தி அடியேன் புல்லறிவால் செய்த பூஜைக்கு மனங்களித்து என் பாபமாகிய கோடையைத் தணித்து அமுதமாரியைப் பொழிந்து என்னைக் கடைத்தேற்ற வேண்டும். தங்கம் போன்ற வண்ணமுடையதாய் சங்கு குண்டலங்கள்

Koviloor Digital Library

அடிணிந்த சிவபெருமானுடைய மேற்றிசை முகமாய், நிவர்த்திப் பதமுடையதாய்'' பூமியில் விளங்குவதாய், பஞ்சாக்ஷரங்களின் முதல் எழுத்தாகிய நகாராக்ஷரமாகிய எட்டுக் கலைகளுடன் விளங்கும் சத்தியோஜாதப் பிரமம் உமாதேவியுடன் பொருந்தி, நான் விதிமுறைப்படி செய்த அர்ச்சனைக்கு அக மகிழ்ந்து, என் வினைத் தொடர்பை ஒழித்துத் திருவருள் புரிந்து நல்ல பயனைக் கொடுக்க வேண்டும்.

சிவபெருமானும் உமாதேவியுமாகிய இருவரும் எனக்கு எப்போதும் நற்பயன்களையே வழங்குவார்களாக. குற்றம் இல்லாத வரத அபய கரங்கள் நற்பயன்களை நாள்தோறும் நல்குமாக! அவ்விருவருடைய சிகைகள் யான் விரும்பியவற்றைத் தந்திடுமாக! யாவராலும் துதி செய்யத்தக்க அவர்களுடைய கவசங்கள் குற்றமற்ற பயன்களை உதவட்டும். அவர்கள் திருவிழிகள் வேண்டிய பயன்களைக் கொடுக்குமாக, அவர்களுடைய ஆயுதங்கள் நற்பயனை அருளுக. வாமாதிதவாதி அஷ்ட ருத்திரங்களும் தந்தம் சத்தியருடன் சிறந்த பயனை வழங்குவராக அந்தனது அஷ்ட வித்யேசுவரர்கள் சக்திகளோடு நற்பயன்களை அளிப்பாராக. பவன் முதலிய எண்மரும் மாதேவன் முதலிய பதினொருவரும் தத்தம் சக்திகளுடன் நற்பயனை அருள்க. இடபதேவன் தன் எண்ணற்ற பயனை ஈயட்டும் நந்தி, மகாகாலன், சாத்தன், சப்த கன்னியர் விநாயகன், முருகன் இவர்கள் உயர்ந்த பயன்களை உதவுக. சேட்டை நற்பயன் தருக. கணாம்பிகை, சதி, மேனை, பார்வதி, உருத்திராணி முதலியோர் மிக்க பயன் தருக. சண்பன், இடபன், பிங்கலன், பிருங்கி வீரன் இவர்கள் எனக்கு மிக்க வல்லமையைத் தருக. கலைமகள்., திருமகள், மோகினி, துர்க்கை, உருத்திரர்கள், பிரமதகணங்கள், பூதங்கள், உமாதேவியின் தோழிகள் உருத்திர கன்னிகைகள் சூரியன்

Koviloor Digital Library

முதலிய இவர்கள் ஆவரணத்துடன் நற்பயனை விரைவில் அளிப்பார்களாக. பிரமதேவன், சூலப்படை தாங்கிய உருத்திரன், விஷ்ணு முதலியவர்கள் தம் ஆவரணத்துடன் அழியாப் பயன்களைக் கொடுத்தருள்க அவர்களது தேவிமார்கள் கெடாத பயன்களைத் தருவார்களாக. ஜனகர் முதலான முனிவர்கள் நால்வரும் தக்ஷன் முதலிய பதினோரு பிரமாக்களும் நற்பயன்களைக் கொடுப்பார்களாக. தர்மம், சங்கற்பம், வேதம், இதிகாசம்புராணம், சாஸ்திரங்கள், வித்தைகள், திசைகள், திக்குப் பாலகர்கள், சூலம் முதலிய ஆயுதங்கள், ஆகாயத்திலுள்ள கோமாதாக்கள், வடுகக் கடவுள் நான் விரும்பிய பயனைக் கொடுத்திடுக. அஷ்ட வயிரவர்கள், யோகியர்கள், நாரதன் முதலிய முனிவர்கள், சாத்தியர்கள், தேவர்கள், கந்தர்வர்கள், அக்கினிக் கொழுந்து போன்ற சிகையுடைய பேய்களீறாகிய தேவ யோனிகள், அசுரர்கள், அரக்கர்கள், நாகங்கள், கருடர்கள் இவர்கள் நற்பயனளித்திடுக. கடல்கள், தீவுகள் நதிகள், ஓடைகள், மலைகள், காடுகள், பசுக்கள், பறவைகள், மரங்கள், கிருமிகள், புவனங்கள், புவனபதிகள், அண்டங்கள், அண்டத் தலைவர்கள், பயனளிப்பாராக வர்ணங்கள், பதங்கள், மந்திரங்கள், தத்துவங்கள், தத்துவங்களில் விளங்கும் தலைவர்கள். பிரமாண்டத்தைக் காக்கும் உருத்திரர்கள் சிவவித்தை சிவ ஸ்தோத்திரம், சிவதர்மம், சிவபுராணம் என்பன எனக்கு மேம்பட்ட பயன்களைத் தரவேண்டும். சுவேதன் முதல் இலகுளிசன் ஈறாகவுள்ள குரவர்கள் அவர்களுடைய புதல்வர்கள் சைவர்கள் மஹேஸ்வரர்கள் வேதியர் முதலிய வருணத்தவர்கள், சாங்கியம் முதலிய சாஸ்திரத்தின் வழிப்பட்டவர்கள் இவர்கள் யாவருமே யான் நற்கருமஞ்செய்ய அருள் புரிவாராகுக கௌரம் முதலில் மதங்களில் உள்ளவர்களும் உயர்ந்த சைவ சித்தாந்த மார்க்கத்தில் ஒழுகியவர்களும்

Koviloor Digital Library

பாசுபதத்தில் இருப்பவர்களும், காபாலிகத்தில் பொருந்திய வர்களும் அடியேன் நற்கர்மம் செய்யக் கிருபை செய்வார்களாக, உத்திரதக்ஷிண நெறிகளில் உள்ளவர்கள் ஞானத்தை அருள்வாராக மோக்ஷலோகமும் ஈஸ்வரனும் இல்லை என்பவர்களும், செய்த நன்றி மறந்தவர்களும் பாஷாண்டிகளும் என்னைச் சேராமல் அகல்வார்களாக, தகுதியுடையவர்கள் அருள்வாராக நல்லோர் மங்கல வசனம் கூறுவார்களாக, உமாதேவியாரோடும் விநாயக கடவுளோடும் முருகக் கடவுளோடும் விளங்கும் சிவபெருமானே! திருவருள் புரிவாயாக!" என்று மிகவும் துதித்து அன்புடன் சாஷ்டாங்கமாகப் பணிந்து எழுந்து துதி செய்து பஞ்சாக்ஷரம் ஜபித்து, பிறகு உமாதேவியாருடைய மந்திரத்தையும் நன்றாக ஜபித்து, சிவபெருமானுடைய திருவடிக்குத் தன் பிராணனைச் சமர்ப்பித்து, அடியேன் தவறுற்ற குற்றங்களை மன்னித்து அருள் செய்ய வேண்டும் என்று புஷ்பாஞ்சலி சமர்ப்பித்து க்ஷமாபணஞ் செய்து பூஜையை முடிக்க வேண்டும். செய்நன்றி கொன்றவர்கள், கொலையை செய்தவர்கள், மன்னவரைக் கொன்றவர்கள், அடைக்கலம் புகுந்தவர்களை வதைத்தவர்கள் முதலிய பெரும் பாவிகள் இந்த ஸ்தோத்திரத்தைப் பாராயணஞ் செய்தாலும், கேட்டாலும் தங்கள் பாவத்தை ஒழித்துப் பரிசுத்தர்களாவார்கள். இந்தத் தோத்திரத்தைப் படிப்பவர்கன் பூஜை செய்யா விட்டாலும் தாம் அடையும் பயனை அளவிட்டுச் சொல்ல முடியாது. இந்த ஸ்தோத்திரத்தை வாயால் கூறும்போது சிவபெருமான் உமாதேவியோடும் பிரமதகண சமேதராய் ஆகாயத்திலிருந்து களிகூறுவாராகையால் இந்த ஸ்துதியை இடைவிடாமல் தியானஞ் செய்வது சிறந்ததாகும்.

Koviloor Digital Library

சிவமயம்

பொருளடக்கம்

	தமிழ்வேத போற்றித்திரட்டு	XI
	திருக்கயிலாய திருத்தாண்டகம்	XVIX
	நெய்யும்பாலும் தயிரும் கொண்டு	XXIII
1.	குரு வணக்கம்	1
2.	விநாயகர் வழிபாடு	2
3.	ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	5
4.	திருப்புகழ்	8
5.	நடராஜப்பத்து	10
6.	அபிராமி அந்தாதி (முழுவதும்)	15
7.	சகலகலாவல்லி மாலை	35

திருமுறைப் பதிகங்கள்

தோடு உடைய செவியன்	37
துணிவளர் திங்கள்	39
போகம் ஆர்த்த பூண்முலையாள்	43
மறைஉடையாய் தோல் உடையாய்	46
வாசி தீரவே காசு நல்குவீர்	48
நன்று உடையானை தீயது	50
அவ்வினைக்கு இவ்வினை	52
ஓர் உரு ஆயினை	55
விரை ஆர் கொன்றையினாய் விடம் உண்ட	58
அயில் ஆரும் அம்பு	60
சடையாய் எனுமால்	62
சுற்றமொடு பற்று அவை துயக்குஅற	65
மட்டிட்ட புன்னை அம்காணல் மடமயிலைக்	67
கண்காட்டும் நுதலானும்	69
மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு	72
வேய்உறு தோளி பங்கன்	75
இடரினும் தளரினும் எனதுஉறு நோய்	79
துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்	83
மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்	85
காதல் ஆகிக் கசிந்து கண்ணீர் மல்கி	88
செய்யனே தரு ஆலவாய்	90

Koviloor Digital Library

விங்கு விளை கழனி மிகு	93
வேத வேள்வியை நிந்தனை செய்து உழல்	97
மங்கையர்க்கு அரசி வளவர் கோன்	101
கூற்று ஆயினவாறு விலக்ககலீர்	105
மாதர்ப்பிறைக் கண்ணியானை	109
தலையே நீ வணங்காய்	112
சொற்றுணை வேதியன்	113
ஒன்றுகொலாம் அவர் சிந்தை	116
அன்னம்பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலம்	118
இருநிலனாய்த் தீஆகி நீருமாகி	120
பித்தாபிறை சூடி பெருமானே	124
மின்னுமா மேகங்கள் பொழிந்து	126
தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்	130
தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்	133
கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்	137
மற்றுப்பற்று எனக்கு இன்றி நின் திருப்பாதம்	141
பொன்செய்த மேனியினீர்	143
ஆலந்தான் உகந்து அமுது செய்தானை	145
மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்	150
முதவாய் ஓரி கதற முதுகாட்டு	152
பத்துஊர் புக்கு இரந்து உண்டு	156
தான் எனை முன் படைத்தான்	160
நமச்சிவாய வாழ்க நாதன் தான் வாழ்க	162
பூசுவதும் வெண்ணீறு	167
வளைந்தது வில்லு விளைந்தது பூசல்	171
சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே	174
ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்	178
போற்றி என் வாழ் முதலாகிய பொருளே	185
சீர்ஆர் பவளம்கால், முத்தம கயிறு	188
முத்திநெறி அறியாத மூர்க்கரோடும்	191
ஒன்பதாம் திருமுறை(திருவிசைப்பா,திருப்பல்லாண்டு)	193
திருமூலர் அருளிய பத்தாம் திருமுறை	195
பதினொன்றாம் திருமுறை	196
பன்னிரெண்டாம் திருமுறை	197
ஓம் சிவாய நம	198

Koviloor Digital Library

தமிழ்வேத போற்றித்திரட்டு

அரவு அணையான் சிந்தித்து அரற்றும் அடி போற்றி
அருமறையான் சென்னிக்கு அணியாம் அடி போற்றி
சரவணத்தான் கை தொழுது சாரும் அடி போற்றி
சார்ந்தார்கட்கு எல்லாஞ் சரணாம் அடி போற்றி
பரவுவார் பாவம் பறைக்கும் அடி போற்றி
பதினெண் கணங்களும் பாடும் அடி போற்றி
திரை விரவு தென் கெடில நாடன் அடி போற்றி
திரு வீரட்டானத்து எம் செல்வன் அடி போற்றி
கொடு வினையார் என்றுங் குறுகா அடி போற்றி
குறைந்து அடைந்தார் ஆழாமைக் காக்கும் அடி போற்றி
படுமுழவம் பாணி பயிற்றும் அடி போற்றி
பதைத்து எழுந்த வெங்கூற்றைப் பாய்ந்த அடி போற்றி
கடுமுரண் ஏறு ஊர்ந்தான் கழல் சேவடி போற்றி
கடல் வையம் காப்பான் கருதும் அடி போற்றி
நெடுமதியம் கண்ணி அணிந்தான் அடி போற்றி
நிறைகெடில வீரட்டம் நீங்கா அடி போற்றி
வைது எழுவார் காமம் பொய் போகா அடி போற்றி
வஞ்ச வலைப்பாடு ஒன்று இல்லா அடி போற்றி
கைதொழுது நாம் ஏத்திக் காணும் அடி போற்றி
கணக்கு வழக்கைக் கடந்த அடி போற்றி
நெய் தொழுது நாம் ஏத்தி ஆட்டும் அடி போற்றி
நீள் விசும்பை ஊடறுத்து நின்ற அடி போற்றி
தெய்வப் புனல் கெடில நாடன் அடி போற்றி
திரு வீரட்டானத்து எம் செல்வன் அடி போற்றி
அரும்பித்த செஞ்ஞாயிறு ஏய்க்கும் அடி போற்றி

Koviloor Digital Library

அழகு எழுதலாகா அருட் சேவடி போற்றி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்த அடி போற்றி
சோமனையுங் காலனையும் காய்ந்த அடி போற்றி
பெரும்பித்தர் கூடிப்பிதற்றும் அடி போற்றி
பிழைத்தார் பிழைப்பறிய வல்ல அடி போற்றி
திருந்து நீர்த் தென் கெடில நாடன் அடி போற்றி
திரு வீரட்டானத்து எஞ் செல்வன் அடி போற்றி
ஒரு காலத்து ஒன்று ஆகி நின்ற அடி போற்றி
ஊழி தோறு ஊழி உயர்ந்த அடி போற்றி
பொரு கழலும் பல்சிலம்பும் ஆர்க்கும் அடி போற்றி
புகழ்வார் புகழ் தகைய வல்ல அடி போற்றி
இருநிலத்தார் இன்புற்று இங்கு ஏத்தும் அடி போற்றி
இன்புற்றார் இட்ட பூ ஏறும் அடி போற்றி
திருவதிகைத் தென்கெடில நாடன் அடி போற்றி
திரு வீரட்டானத்து எஞ் செல்வன் அடி போற்றி
திருமகட்குச் செந்தாமரையா அடி போற்றி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும் அடி போற்றி
பொருள் அவர்க்குப் பொன் உரையாய் நின்ற அடி போற்றி
புகழ்வார் புகழ் தகைய வல்ல அடி போற்றி
உருஇரண்டும் ஒன்றோடு ஒன்று ஒவ்வா அடி போற்றி
உருவு என்று உணரப்படாத அடி போற்றி
திருவதிகைத் தென் கெடில நாடன் அடி போற்றி
திருவீரட்டானத்து எம் செல்வன் அடி போற்றி
உரைமாலை எல்லாம் உடைய அடி போற்றி
உரையால் உணரப்படாத அடி போற்றி
வரை மாதை வாடாமை வைக்கும் அடி போற்றி
வானவர்கள் தாம் வணங்கி வாழ்த்தும் அடி போற்றி
அரை மாத்திரையில் அடங்கும் அடி போற்றி

Koviloor Digital Library

அகலம் அளக்கிற்பார் இல்லா அடி போற்றி
கரைமாக் கலிக்கெடில நாடன் அடி போற்றி
கமழ் வீரட்டானக் காபாலி அடி போற்றி
நறு மலராய் நாறும் மலர்ச்சேவடி போற்றி
நடுவாய் உலக நாடாய அடி போற்றி
செறி கதிருந் திங்களுமாய் நின்ற அடி போற்றி
தீத்திரளாய் உள்ளே திகழ்ந்த அடி போற்றி
மறுமதியை மாசு கழுவும் அடி போற்றி
மந்திரமும் தந்திரமும் ஆய அடி போற்றி
செறி கெடில நாடர் பெருமான் அடி போற்றி
திருவீரட்டானத்து எஞ்செல்வன் அடி போற்றி
அணியனவும் சேயனவும் அல்லா அடி போற்றி
அடியார்கட்கு ஆரமுதமாய அடி போற்றி
பணிபவர்க்குப் பாங்காக வல்ல அடி போற்றி
பற்று அற்றார் பற்றும் பவள அடி போற்றி
மணியடி பொன்னடி மாண்பாம் அடி போற்றி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்ல அடி போற்றி
தணிபாடு தண்கெடில நாடன் அடி போற்றி
தகைசார் வீரட்டத் தலைவன் அடி போற்றி
அந் தாமரைப் போது அலர்ந்த அடி போற்றி
அரக்கனையும் ஆற்றல் அழித்த அடி போற்றி
முந்து ஆகி முன்னே முளைத்த அடி போற்றி
முழங் கழலாய் நீண்ட எம் மூர்த்தி அடி போற்றி
பந்து ஆடு மெல்விரலாள் பாகன் அடி போற்றி
பவளத் தடவரையே போல்வான் அடி போற்றி
வெந்தார் சுடலை நீறு ஆடும் அடி போற்றி
வீரட்டங் காதல் விமலன் அடி போற்றி

Koviloor Digital Library

ஈசன் அடிபோற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்புஅறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீர்ஆர் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்
தாயேயாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதியன் ஆகி, வினைகெடக்
கைதரவல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றின் உள் ஆடி போற்றி
இன்று எனக்கு ஆரமுதானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னார் உருவ விகிர்தா போற்றி
கல்நார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றெனக்கு அருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி

Koviloor Digital Library

இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈசபோற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரைசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதிபோற்றி விமலா போற்றி
ஆதிபோற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க்கு அரிய மருந்தே போற்றி
ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரண் உறுநரகிடை
ஆழாமே அருள் அரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றி என் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரை உணர்விறந்த ஒருவ போற்றி
விரிகடல் உலகின் விளைவே போற்றி
அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகிலாகிய கண்ணே போற்றி

Koviloor Digital Library

மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையும் ஒருவனாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
மான் நேர்நோக்கி மணாளா போற்றி
வானகத்து அமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத்து அமுதே போற்றி
கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி
நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி
இடை மருதுறையும் எந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவையாறா போற்றி
அண்ணாமலை எம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி
ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி
பாகம் பெண் உரு ஆனாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்று இங்கு அறியேன் போற்றி

Koviloor Digital Library
குற்றாலத்து எம் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய்மலை எம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத்து அழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி
இத்தி தன்னில் கீழ் இருமூவர்க்கு
அத்திக்கு அருளிய அரசே போற்றி
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
ஏனக் குருளைக்கு அருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிடவேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி
களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சேல் என்றிங்கு அருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி

Koviloor Digital Library

மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சேர் அடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி
இலங்கு சுடர் எம்ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலை நாடுடைய மன்னே போற்றி
கலையார் அரிகேசரியாய் போற்றி
திருக்கழுக்குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத்து அரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி
தெரிவரிதாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளானவர்கட்கு அன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேராயிரம் உடைப் பெம்மான் போற்றி
தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி ஆகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி!!

Koviloor Digital Library

திருநாவுக்கரசர் அருளிய திருக்கயிலாய திருத்தாண்டகம்

திருமுறை : 1/52 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி
இறைவன் : நித்யசுந்தரேசுவரர் இறைவி : ஒப்பிலாநாயகி

தீவினைகள் அனைத்தையும் போக்கி சிவ புண்ணியம் கிடைக்க பாராயணம் செய்ய வேண்டிய திருப்பதிகம்

திருநாவுக்கரசர் பெருமான் தனது முதிய வயதில் பரம்பொருளைக் காணும் பொருட்டு கயிலை மலையை சென்றடைந்தார். உடல் நலிவுற்ற நாவுக்கரசர் பெருமான் நடக்க இயலாமல் தவழ்ந்து அல்லலுற்றார். அவ்வேளையில் இறைவன், முனிவரது வேடந்தாங்கி பொய்கையொன்றைக் காட்டி, "இப்பொய்கையில் மூழ்கி திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் காண்பாயாக!" என்று கூறி மறைந்தார். நாவுக்கரசர் பெருமானும் அப்பொய்கையில் மூழ்கி, திருவையாறு தலத்திலுள்ள குளத்தில் எழுந்தார். அங்கு அவருக்கு இறைவன் திருக்காட்சி அருளினார். இறைவன் திருக்காட்சியைக் கண்டவாறே நாவுக்கரசர் பெருமான் பாடியருளிய திருப்பதிகம் இதுவாகும்.

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆள் என்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 1

Koviloor Digital Library

பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி
பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவி என்சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்றும் எய்தாய் போற்றி
போகாது என்சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 2

மருவார் புரமூன்றும் எய்தாய் போற்றி
மருவி என் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி ஓடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 3

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்து என்தன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்கும் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீயாடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 4

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி
பெயராது என் சிந்தை புகுந்தாய் போற்றி

Koviloor Digital Library

நீராவியான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவர் அறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்ந்தாய் போற்றி
போகாது என் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 6

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும் தீ ஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 7

இமையாது உயிராது இருந்தாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாகம் ஆகத்து அணைத்தாய் போற்றி
ஊழி ஏழான ஒருவா போற்றி
அமையா அருநஞ்சம் ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 8

Koviloor Digital Library

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் தொழும் தேவே போற்றி
சென்றேறி எங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக்கு எல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 9

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியும் முடியும் இகலிப் போற்றி
அங்கு ஒன்று அறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலாய் என் சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 10

உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறை விரலால் வைத்து உகந்த ஈசா போற்றி
பண்ணார் இசையின் சொல் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணாய் உலகிற்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய
திருஓணகாந்தன் தளி திருப்பதிகம்

இறைவன் - ஓணேசுவரர், காந்தேசுவரர் இறைவி - காமாட்சியம்மை

திருமுறை 7/5 பண் : இந்தளம்

பொருள் பெற பாராயணம் செய்ய வேண்டிய திருப்பதிகம்

பல தலங்களையும் தரிசித்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் காஞ்சிபுரத்திலுள்ள திருவோணகாந்தன்தளி எனும் ஆலயத்தை வந்தடைந்தார். அங்குள்ள இறைவனை தனது தலைவனாகவும் தோழனாகவும் எண்ணி உரிமையோடு இத்திருப்பதிகத்தைப் பாடி பொன் பெற்றார்.

இப்பதிகத்தை பாராயணம் செய்ய நமக்கு வேண்டிய பொன்னும் பொருளும் கிட்டும் என்பது திண்ணம்.

நெய்யும் பாலும் தயிரும் கொண்டு
நித்தல் பூசை செய்யல்உற்றார்
கையில் ஒன்றும் காணம் இல்லைக்
கழல்அடி தொழுது உய்யின்அல்லால்
ஐவர் கொண்டு இங்கு ஆட்ட ஆடி
ஆழ்குழிப்பட்டு அழுந்துவேனுக்கு
உய்யுமாறு ஒன்று அருளிச்செய்யீர்
ஓணகாந்தன்தளி உளீரே 1

Koviloor Digital Library

திங்கள் தங்கு சடையின்மேல் ஓர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கையாளேல் வாய் திறவாள்
கணபதியேல் வயிறுதாரி
அங்கை வேலோன்குமரன் பிள்ளை
தேவியார் கோற்றுஅட்டியாளார்
உங்களுக்கு ஆட்செய்யமாட்டோம்
ஓணகாந்தன்தளி உளீரே 2

பெற்றபோழ்தும் பெறாதபோழ்தும்
பேணி உம் கழல் ஏத்துவார்கள்
மற்று ஓர் பற்றுஇலர் என்று இரங்ளகி
மதிஉடையவர் செய்கை செய்யீர்
அற்றபோழ்தும் அலந்தபோழ்தும்
ஆவற்காலத்து அடிகேள் உம்மை
ஒற்றிவைத்து இங்கு உண்ணல் ஆமோ
ஓணகாந்தன்தளி உளீரே. 3

வல்லதுஎல்லாம் சொல்லி உம்மை
வாழ்த்தினாலும் வாய் திறந்து ஒன்று
இல்லை என்னீர் உண்டும் என்னீர்
எம்மை ஆள்வான் இருப்பது என் நீர்
பல்லை உக்க படுதலையில்
பகல்எலாம் போய்ப் பலி திரிந்து இங்கு
ஒல்லை வாழ்க்கை ஒழியமாட்டீர்
ஓணகாந்தன்தளி உளீரே 4

Koviloor Digital Library

கூடிக்கூடித் தொண்டர் தங்கள்
கொண்ட பாணி குறைபடாமே
ஆடிப் பாடி அழுது நெக்கு அங்கு
அன்புஉடையவர்க்கு இன்பம் ஓரீர்
தேடித்தேடித் திரிந்து எய்த்தாலும்
சித்தம் என்பால் வைக்கமாட்டீர்
ஓடிப் போகீர் பற்றும் தாரீர்
ஓணகாந்தன்தளி உளீரே 5

வார் இருங்குழல் வான்நெடுங்கண்
மலைமகள் மது விம்மு கொன்றைத்
தார் இருந் தடமார்பு நீங்காத்
தையலாள் உலகு உய்ய வைத்த
கார் இரும் பொழில் கச்சி மூதூர்க்
காமக்கோட்டம் உண்டாக நீர் போய்
ஊர் இடும் பிச்சை கொள்வது என்னே
ஓணகாந்தன்தளி உளீரே 6

பொய்ம்மையாலே போது போக்கிப்
புறத்தும் இல்லை அகத்தும் இல்லை
மெய்ம்மை சொல்லி ஆளமாட்டீர்
மேலைநாள் ஒன்று இடவும் கில்லீர்
எம்மைப் பெற்றால் ஏதும் வேண்டீர்
ஏதும் தாரீர் ஏதும் ஓதீர்
உம்மை அன்றே எம்பெருமான்
ஓணகாந்தன்தளி உளீரே 7

Koviloor Digital Library

வலையம் வைத்த கூற்றம் ஈவான்
வந்து நின்ற வார்த்தை கேட்டுச்
சிலை அமைத்த சிந்தையாலே
திருவடி தொழுது உய்யின் அல்லால்
கலை அமைத்த காமச் செற்றக்
குரோத லோப மதவர்ஊடு ஐ
உலை அமைத்து இங்கு ஒன்றமாட்டேன்
ஒணகாந்தன்தளி உளீரே 8

வாரம்ஆகித் திருவடிக்குப்
பணிசெய் தொண்டர் பெறுவது என்னே
ஆரம் பாம்பு வாழ்வது ஆரூர்
ஒற்றியூரேல் உம்மது அன்று
தாரமாகக் கங்கையாளைச்
சடையில்வைத்த அடிகேள் உம்தம்
ஊரும் காடு உடையும் தோலே
ஒணகாந்தன்தளி உளீரே. 9

ஓ வணம் மேல் எருது ஒன்று ஏறும்
ஒணகாந்தன்தளி உளார்தம்
ஆவணம் செய்து ஆளும் கொண்டு
அரை துகில்லொடு பட்டு வீக்கிக்
கோவணம் மேற்கொண்ட வேடம்
கோவைஆக ஆரூரன் சொன்ன
பா வணத் தமிழ்பத்தும் வல்லார்க்குப்
பறையும் தாஞ் செய்த பாவம் தானே 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

குருவணக்கம்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

கொடிக்கவி

அஞ்சு எழுத்தும் எட்டு எழுத்தும், ஆறு எழுத்தும் நாலு எழுத்தும்
பிஞ்சு எழுத்தும் மேலைப் பெரு எழுத்தும் – நெஞ்சு அழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமல் காட்டக் கொடி.

நால்வர் துதி

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

சமயக்குரவர் துதி

சைவத்தின் மேல் சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம்
தெய்வத்தின் மேல் தெய்வம் இல்எனும் நான்மறைச் செம்பொருள்
வாய்மை வைத்த சீர்திருத் தேவார மும் திருவாசகமும்,
உய்வைத் தரச் செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்துணையே.

Koviloor Digital Library

உ

விநாயகர் வழிபாடு

திருவாக்கும் செய்கருமமும் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

திருவிரட்டை மணிமாலை

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருமந்திரம்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனை முகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

சேக்கிழார்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

மூதுரை

Koviloor Digital Library

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா.

நல்வழி

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றில்
பிறந்த தொல்லைபோம் போகாத்துயரம்போம்
நல்லகுணமதிகமாம் அருணைக் கோபுரத்துள்
மேவும்கணபதியைக் கைதொழுதக்கால்.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவோம்.

விருத்தாசல புராணம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதுதடி வழிபடும் அவரிடர்
கடி கணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே.

தேவாரம்

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து உருகத்
தஞ்சத்தருள் சண்முகனுக்கு இயல்சேர்
செஞ்சொல் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கர யானை பதம் பணிவோம்.

கந்தர் அனுபூதி

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
தகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுரை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

கந்தபுராணம்

Koviloor Digital Library

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய
முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

'உம்பர் தருத் தேநுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

திருப்புகழ்

Koviloor Digital Library

ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்கு தானெழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குலவயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்

Koviloor Digital Library

கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கும் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின், நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளி பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி

Koviloor Digital Library

சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாகஇனி தெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சு அக்கரத்தி னரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

திருப்புகழ் – ஆவினன்குடி

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ
தீப மங்கள ஜோதி நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையும் மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே

Koviloor Digital Library

இரக்ஷிப்பு

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக் கொருவித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணிப்
பத்துத் தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பக்ஷத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனஓதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடிஎன முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி இட்டுக் குலகிரி
குத்துபட ஒத்துப் பொரவல பெருமாளே.

Koviloor Digital Library

நடராஜப் பத்து

மண் ஆதி பூதமொடு விண் ஆதி அண்டம் நீ
மறை நான்கின் அடிமுடியும் நீ மதியும் நீ ரவியும் நீ
புனலும் நீ அனலும் நீ மண்டலம் இரண்டு ஏழும் நீ
பெண்ணும் நீ ஆணும் நீ பல் உயிர்க்கு உயிரும் நீ
பிறவும் நீ ஒருவ நீயே பேதாதி பேதம் நீ
பாதாதி கேசம் நீ பெற்ற தாய் தந்தை நீயே
பொன்னும் நீ பொருளும் நீ இருளும் நீ ஒளியும் நீ
போதிக்க வந்த குரு நீ புகழொனாக் கிரகங்கள்
ஒன்பதும் நீ இந்தப் புவனங்கள் பெற்றவனும் நீ
எண் அரிய ஜீவ கோடிகள் ஈன்ற அப்பனே என்
குறைகள் யார்க்கு உரைப்பேன்? ஈசனே சிவகாமி நேசனே
எனை ஈன்ற தில்லை வாழ் நடராஜனே! 1

மான் ஆட மழு ஆட மதி ஆட புனல் ஆட
மங்கை சிவகாமி ஆட மால் ஆட நூல் ஆட
மறை ஆடத் திறை ஆட மறை தந்த பிரம்மன் ஆட
கோன் ஆட வானுலகக் கூட்டம் எல்லாம் ஆட
குஞ்சர முகத்தாள் ஆட குண்டலம் இரண்டு ஆட
தண்டை புலி உடை ஆட குழந்தை முருகேசன் ஆட
ஞான சம்பந்தரோடு இந்திராதி பதினெட்டு முனிஅட்ட பாலகரும் ஆட
நரை தும்பை அறுகு ஆட நந்தி வாகனம் ஆட
நாட்டியப் பெண்கள் ஆட வினை ஓட உனைப் பாட
எனை நாடி இது வேளை விருதோடு ஆட வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனை ஈன்ற தில்லை வாழ் நடராஜனே! 2

Koviloor Digital Library

கடல் என்ற புவி மீதில் அலை என்ற உருக் கொண்டு
கனவு என்ற வாழ்வை நம்பிக் காற்று என்ற மூ ஆசை
மாருதச் சுழலிலே கட்டுண்டு நித்த நித்தம்
உடல் என்ற கும்பிக்கு உணவு என்ற இரை தேடி
ஓயாமல் இரவு பகலும் உண்டு உண்டு உறங்குவதைக்
கண்டதே அல்லாது ஒரு பயன் அடைந்திலேனைத்
தடம் என்ற மிடி கரையில் பந்த பாசங்கள் எனும்
தாபரப் பின்னல் இட்டுத் தாய் என்று சேய் என்று
நீ என்று நான் என்று தமியேனை இவ் வண்ணமாய்
இடை என்று கடை நின்று ஏன் என்று கேளாது இருப்பது
உன் அழகு ஆகுமோ? ஈசனே சிவகாமி நேசனே
எனை ஈன்ற தில்லை வாழ் நடராஜனே! 3

வம்பு சூனியம் அல்ல வைப்பு அல்ல மாரனம் தம்பனம் வசியம் அல்ல
பாதாள அஞ்சனம் பரகாயப் பிரவேசம் அது அல்ல ஜாலம் அல்ல
அம்பு குண்டுகள் விலக மொழியும் மந்திரம் அல்ல
ஆகாயக் குளிகை அல்ல அன்போடு செய்கின்ற
வாத மோடிகள் அல்ல அரிய மோகனமும் அல்ல
கும்ப முனி மச்ச முனி சட்ட முனி பிரும்ம ரிஷி
கொங்கணர் புலிப்பாணியும் கோரக்கர் வள்ளுவர்
போக முனி இவர் எல்லாம் கூறிடும் வைத்தியம் அல்ல
என் மனது உன் அடி விட்டு நீங்காது நிலை நிற்கவே
உளவு புகல வருவாய் ஈசனே சிவகாமி நேசனே
எனை ஈன்ற தில்லை
வாழ் நடராஜனே! 4

நொந்து வந்தேன் என்று ஆயிரம் சொல்லியும் செவி என்ன
மந்தம் உண்டோ நுட்ப நெறி அறியாத பிள்ளையைப்
பெற்ற பின் நோக்காத தந்தை உண்டோ?
சந்ததமும் தஞ்ச மென்று அடியைப் பிடித்த பின்

Koviloor Digital Library

தளராத நெஞ்சம் உண்டோ? தந்தி முகன் அறுமுகன்
இரு பிள்ளை இல்லையோ? தந்தை நீ மலடுதானோ?
விந்தையும் ஜாலமும் உன்னிடம் இருக்குதே
வினை ஒன்றும் அறிகிலேனே! வேதமும் சாஸ்திரமும்
உன்னையே புகழுதல் வேடிக்கை இது அல்லவோ?
இந்த உலகில் ஈர் ஏழுமே ஏன் அளித்தாய் சொல்லும்!
இனி உன்னை விடுவது இல்லை ஈசனே சிவகாமி நேசனே
எனை ஈன்ற தில்லை வாழ் நடராஜனே! 5

வழி கண்டு உன் அடியைத் துதியாத போதிலும்
வாஞ்சை இல்லாத போதிலும் வாலாயமாய்க் கோவில்
கற்றாத போதிலும் வஞ்சமே செய்த போதிலும்
மொழி எகனை மொகனை இல்லாமலே
பாடினும் மூர்க்கனேன் முகடு ஆகினும்
மோசமே செய்யினும் தேசம் ஏக வரினும்
பழி எனக்கு அல்லவே தாய் தந்தைக்கு அல்லவோ
தாய் தந்தைக்கு அல்லவோ பார்த்தவர்கள் சொல்லார்களோ?
ஊர் அறிய மனைவிக்குப் பாதி உடல் ஈந்த நீ
பாலனைக் காக்க ஒண்ணாதோ? எழில் பெரிய அண்டங்கள்
அடுக்காய் அமைத்த நீ என் குறைகள் தீர்த்தல் பெரிதோ?
ஈசனே சிவகாமி நேசனேஎனை ஈன்ற தில்லை வாழ் நடராஜனே! 6

அன்னை தந்தைகள் என்னை ஈன்றதற்கு அழுவேனோ?
அறிவிலாததற்கு அழுவேனோ? அல்லாமல் நான்முகன் நோவேனோ?
ஆசை முறுக்கு அழுவேனோ? முன் பிறப்பு என்ன வினை செய்தேன்
என்று அழுவேனோ? என் மூட அறிவுக்கு அழுவேனோ?
முன்னில் என் வினை வந்து மூளும் என்று அழுவேனோ?
முக்திக்கு வரும் என்று உணர்வேனோ?
தன்னை நொந்து அழுவேனோ? உன்னைநொந்து அழுவேனோ?
தையலர்க்கு அழுவேனோ? தவம் என்ன என்று அழுவேனோ?

Koviloor Digital Library
மெய் வளர்க்க அழுவேனோ? தரித்திரத் திசைக்கு அழுவேனோ?
இன்னம் என்ன பிறவி வருமோ என்று அழுவேனோ?
எல்லாம் உரைக்க வருவாய்! ஈசனே சிவகாமி நேசனே
எனை ஈன்ற தில்லை வாழ் நடராஜனே! 7

காயா முன் மரம் மீது பூ பிஞ்சு அறுத்தேனோ?
கன்னியர்கள் பழி கொண்டேனோ? கடன் என்று பொருள்
பறிதே வயிறு எரித்தேனோ? கிளை வழியில் முள் இட்டேனோ?
தாயாருடன் பிறவிக்கு என்ன வினை செய்தேனோ?
தந்தபொருள் இல்லையென்றேனோ? தான் என்று கர்வித்துக்
கொலை களவு செய்தேனோ? தவசிகளை ஏசினேனோ?
வாயாரப் பொய் சொல்லி வீரன் பொருள் பறித்தேனோ?
வானவரைப் பழித்திட்டேனோ? வடவு போலப் பிறரைச்
சேர்க்காது அடித்தேனோ? வந்த பின் என் செய்தேனோ?
ஈயாத லோபி என்றே பெயர் எடுத்தேனோ?
எல்லாம் பொறுத்து அருள்வாய்! ஈசனே சிவகாமி நேசனே
எனை ஈன்ற தில்லை வாழ் நடராஜனே! 8

தாயார் இருந்து என்ன? தந்தையும் இருந்து என்ன?
தன் பிறவி உறவு கோடி தனதலை குவிந்து என்ன?
கன பெயர் எடுத்து என்ன? தரணியை ஆண்டும் என்ன?
சேயர்கள் இருந்து என்ன? குருவாய் இருந்து என்ன?
சீஷர்கள் இருந்தும் என்ன?
சித்து பல கற்று என்ன? நித்தமும் விரதங்கள்
செய்து என்ன? நதிகள் எல்லாம்
ஓயாது மூழ்கினும் என்ன பலன்? எமன் ஓலை ஒன்றைக்
கண்டு தடுக்க? உதவுமோ இது எல்லாம்
தந்தை உறவு என்றுதான் உன் இரு பாதம் பிடித்தேன்
யார் மீது உன் மனம் இருந்தாலும் உன் கடைக்கண் பார்வை
அது போதுமே! ஈசனே சிவகாமி நேசனே!
எனை ஈன்ற தில்லை வாழ் நடராஜனே! 9

Koviloor Digital Library

இன்னமும் சொல்லவோ? உன் மனம் கல்லோ, இரும்போ
பெரும் பாறையோ இரு செவியும் மந்தமோ
கேளாது அந்தமோ இது உனக்கு அழகு தானோ
என் அன்னை மோகமோ இது என்ன சோபமோ
இதுவே உன் செய்கை தானோ? இரு பிள்ளை தாபமோ?
யார் மீது கோபமோ? ஆனாலும் நான் விடுவனோ?
உன்னை விட்டு எங்க சென்றாலும் விழல் ஆவேனோ?
நான் உனை அடுத்தும் கெடுவேனோ? ஒஹோ இது உன் குற்றம்
என் குற்றம் ஒன்றும் இலை உற்றுப்பார் பெற்ற ஐயா
என் குற்றம் ஆயினும் இனி அருள் அளிக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே!
எனை ஈன்ற தில்லை வாழ் நடராஜனே! 10

சனி ராஹு கேது புதன் சுக்கிரன் செவ்வாய் குரு சந்திரன்
சூரியன் இவரைச் சற்று எனக்கு உள்ளாக்கி
இராசி பனிரெண்டையும் சமமாய் நிறுத்தியவுடனே
பனி ஒத்த நட்சத்திரங்கள் இருபத்து ஏழும்
பக்குவப் படுத்திப் பின்னால் பகர்கின்ற கிரணங்கள்
பதினொன்றையும் வெட்டிப் பலரையும் அதட்டி என் முன்
கனி போலவே பேசிக் கெடு நினைவு நினைக்கின்ற
கசடர்களையும் கசக்கிக் காத்த நின் தொண்டராம்
தொண்டர்க்குத் தொண்டரின் தொண்டர்கள் தொழும்பன் ஆக்கி
இனிய வள மருவு சிறு மணவை முனுசாமி எனை
ஆள்வதினி உன் கடன் காண் ஈசனே சிவகாமி நேசனே
எனை ஈன்ற தில்லை வாழ் நடராஜனே! 11

திரு. சிறுமணவூர் முனியசாமி முதலியார்
நடராஜப்பத்து முற்றிற்று

Koviloor Digital Library

அபிராமி பட்டர் அருளிய

அபிராமி அந்தாதி

காப்பு

(கட்டளைக் கலித்துறை)

தாரமர்கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே உலகேழும் பெற்ற
சீர் அபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே நிற்கக் கட்டுரையே.

நூல்

தேவியின் திருமேனியின் அழகைச் சிறப்பித்தல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமத்தோயம் என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்ததுணையே. 1

எல்லாம் அவளே என்று அறிதல்

துணையும் தொழுந்தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே. 2

அறிந்து விலகி அஞ்சித் திருவடி அடைதல்

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே திருவே வெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே. 3

Koviloor Digital Library

இறைவனும் நீயும் என் உள்ளத்தில் எழுந்தருள்க என்றல்

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே. 4

தேவியின் திருவடி தம் தலைக்கண் என்றல்

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர் முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே. 5

மூன்று கரணங்களாலும் வழிபடல்

சென்னியது உன் பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திருமந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே
பன்னியது என்றும் உன்றன் பரமாகம பத்ததியே. 6

உயிர்க்கு முத்திநிலை வேண்டல்

ததியுறு மத்திற் சுழலும் என் ஆவிதளர் விலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கியென்றும்
துதியுறு சேவடியாய் சிந்துரானன சுந்தரியே. 7

அம்மையின் திருவடி அடியேன் சிந்தையில் திகழ்தல்

சுந்தரி எந்தை துணைவி என் பாசத்தொடரை யெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே. 8

Koviloor Digital Library

தேவியின் காட்சியினை விரும்பி நிற்றல்

கருத்தன எந்தைதன் கண்ணன் வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம்மே வந்தென் முன் நிற்கவே. 9

எக்காலத்தும் அம்மையின் திருவடிகளை வழிபடல்

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமரையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே. 10

திருவடிப் பெருமையினைப் புகலல்

ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடிவுடையாள் மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணாரவிந்தத் தவளநிறக்
கானந்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக்கண்ணியதே. 11

தம் புண்ணியச் செயலை வியத்தல்

கண்ணியதுன்புகழ் கற்பதுன் நாமம் கசிந்து பத்தி
பண்ணியதுன் இரு பாதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணிய துன்னை நயந்தோர் அவையத்து நான் முன்செய்த
புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே. 12

உன்னை அன்றிப் பிறதெய்வம் தொழேன் என்றல்

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக் கண்டதனுக்கு
மூத்தவளே மூன்றும்மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்தித்பதே. 13

Koviloor Digital Library

அம்மையின் எளிமையை வியத்தல்

வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர் நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே. 14

வழிபடுவோர் பெறும் பேறுகள்

தண்ணளிக்கென்று முன்னே பல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார் மதிவானவர்தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

தம் சிற்றறிவின் எல்லைக்கு எட்டியதை வியத்தல்

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே
அடியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே. 16

பதியையும் வென்ற பண்புடைமை

அதிசயமான வடிவுடையாள் அரவிந்தமெல்லாம்
துதிசெய ஆனன சுந்தரவல்லி துணை இரதி
பதிசயமானது அபசயமாக முன் பார்த்தவர்தம்
மதிசயமாக வன்றோ வாம பாகத்தை வவ்வியதே. 17

காலன் வருங்கால் காத்தருள வேண்டல்

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகி வந்து
வெவ்விய காலன் என் மேல் வரும்போது வெளிநிற்கவே. 18

Koviloor Digital Library

ஆனந்தம் அளித்த திருஉளக்கருத்தைப் புகழ்தல்

வெளிநின்ற நின்திரு மேனியைப்பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றதென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே. 19

உறைவிடம் யாதோ என வினாவுதல்

உறைகின்ற நின்திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோ முடியோ அமுதம்
நிறைகின்ற வெண் திங்களோ கஞ்சமோ என்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதியோ பூரணாசல மங்கலையே. 20

காட்சியில் திளைத்து நிற்றல்

மங்கலை செங்கலசம் முலையாள் மலையாள் வருணச்
சங்கலை செங்கைச் சகலகலா மயில்தாவு கங்கை
பொங்கலை தங்கும் புரிசடையோன் புடையாள் உடையாள்
பிங்கலை நீலி செய்யாள் வெளியாள் பசும் பெண் கொடியே.21

பிறவா வண்ணம் தடுத்தாட்கொள்ள வேண்டுதல்

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே மறையின் பரிமளமே பனிமால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்திங்கு இனிப்பிறவாமல் வந்து ஆண்டுகொள்ளே. 22

தம் குறிக்கோளைக் கூறுதல்

கொள்ளேன் மனத்தில்நின் கோலமல்லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன்மூவுலகுக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்கும் களியே அளிய என் கண்மணியே. 23

Koviloor Digital Library

நின்பேறுபெற்ற நான், பிறரை வணங்கேன் என்றல்

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கு அழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 24

முன்னைத் தவத்தின் சிறப்பினை மொழிதல்

பின்னே திரிந்துன் அடியாரைப்பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனியுன்னை யான்மறவாமல் நின்று ஏத்துவனே. 25

அருள் பெற்றோரின் உயர்வை அறிவித்தல்

ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம் கமழ் பூங்கடம்பு
சாத்தும் சூழல் அணங்கே மணம் நாறும் நின் தாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே. 26

திருவருள் புரிந்த செயலை வியத்தல்

உடைத்தனை வஞ்சப்பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்தழுக்கையெல்லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே. 27

அடிதொழுவார் அடையும் பேறு

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே. 28

Koviloor Digital Library

அபிராமி எல்லாமாக இருக்கும் சிறப்பு

சித்தியும் சித்தி தரும் தெய்வமாகித் திகழும் பரா
சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே. 29

குற்றம் செய்யினும் குணம் எனக் கொள்ள வேண்டுதல்

அன்றே தடுத்தென்னை ஆண்டுகொண்டாய் கொண்டதல்ல என்கை
நன்றே உனக்கினி நான் என்செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரைபேற்றுகை நின் திருவுளமே
ஒன்றே பல உருவே அருவே என் உமையவளே. 30

ஆட்கொண்ட திறத்தை அறிவித்தல்

உமையும் உமையொரு பாகரும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கன்பு செய்யவைத்தார் இனி எண்ணுதற்குச்
சமயங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே. 31

வலியவந்து ஆட்கொண்டதைப் புகழ்தல்

ஆசைக் கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல் பட இருந்தேனை நின்பாதமென்னும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட
நேசத்தை என் சொல்லுவேன் ஈசர்பாகத்து நேரிழையே. 32

எமபயத்தைப் போக்கி அருள வேண்டுதல்

இழைக்கும் வினைவழியே அடுங்காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக்குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே. 33

Koviloor Digital Library

அம்மை எழுந்தருளிய இடங்கள்

வந்தே சரணம் புகும் அடியாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கற் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே. 34

தாம்பெற்ற தவப்பேற்றை வியத்தல்

திங்கள் பகவின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்துமோ தரங்கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே.35

திருவருளின் இயல்பை அறிவித்து அருள வேண்டுதல்

பொருளே பொருள் முடிக்கும் போகமே அரும்போகம் செய்யும்
மருளே மருளில் வரும் தெருளே என்மனத்து வஞ்சத்து
இருளேது மின்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்றன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே. 6

அம்மையின் அணிகலங்களை அறிவித்தல்

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்துமாலை விட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக்கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடையானிடம் சேர்பவளே. 37

உலகத்தவர்க்கு அம்மையை வழிபடும்படி கூறுதல்

பவளக்கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே. 38

Koviloor Digital Library

அருள்பெற என்குறையே அன்றி நின்குறை அன்றுஎனல்

ஆளுகைக்கு உந்தன் அடித்தாமரைகளுண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உந்தன் விழியின் கடையுண்டு மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாணுதலே. 39

தம் புண்ணியத்தின் பயனை வியத்தல்

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதை நெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே. 40

தம் மனத்திற்கு அறிவித்தல்

புண்ணியம் செய்தனமே மனமே புதுப்பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணியிங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்
பண்ணி நம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே. 41

அம்மையின் ஆற்றலை வியத்தல்

இடங்கொண்டு விம்மி இணைகொண்டு இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலை கொண்டு இறைவர் வலிய நெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே. 42

அம்மையினது நேர்பாதியின் சிறப்பு

பரிபுரச்சீறடிப் பாசாங்குசை பஞ்சபாணியின் சொல்
திருபுரசுந்தரி சிந்துர மேனியள் தீமை நெஞ்சில்
புரிபுரவஞ்சரை அஞ்சக்குனி பொருப்புச் சிலைக்கை
எரிபுரைமேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே. 43

Koviloor Digital Library

அம்மையே மேலான தெய்வம் என்றல்

தவளே இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே. 44

குற்றம் பொறுத்தருள வேண்டுதல்

தொண்டு செய்யாது நின்பாதந்தொழாது துணிந்திச்சையே
பண்டு செய்தார் உளரோ இலரோ அப்பரிசடியேன்
கண்டு செய்தால் அது கை தவமோ அன்றிச் செய்தவமோ
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றேபின் வெறுக்கையன்றே. 45

வெறுக்கினும் வாழ்த்துவேன் என்றல்

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடியாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புதுநஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற்றாள் இடப்பாகம் கலந்த பொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே.46

தம் அநுபூதிப் பயனை அறிவித்தல்

வாழும் படியொன்று கண்டு கொண்டேன் மனத்தே ஒருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை யெட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

அம்மையே ஒரு கணமேனும் தியானித்தவர் பின்பிறவார்

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே. 48

Koviloor Digital Library

எம பயத்தைப் போக்கிக் காக்க வேண்டுதல்

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கு இட்ட
வரம்பை அடுத்து மருகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசை வடிவாய் நின்ற நாயகியே. 49

பல திருப்பெயர்களைக் கூறி இன்புறம்

நாயகி நான்முகி நாராயணி கை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே. 50

அம்மையின் அடியார்கள் பிறப்பு இறப்புக்களை அடையார்

அரணம் பொருளென்று அருள் ஒன்றிலாத அசுரர்தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே. 51

முன்பிறவியில் அம்மையை வழிபட்டவர் அடையும் பேறுகள்

வையகம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலைஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே. 52

சக்தியோகமே அன்றி வேறு பயனுடையே தவம் இல்லை

சின்னஞ்சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும் முத்தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங்கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில் வைத்துத்
தன்னந் தனியிருப்பார்க்கு இது போலும் தவம் இல்லையே 53

Koviloor Digital Library

அம்மையின் அடிகட்கு ஆற்றுப்படுத்தல்

இல்லாமை சொல்லி ஒருவர் தம் பாற் சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்த நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54

கைம்மாறு கருதாத கருணைத் திறம்

மின் ஆயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்ற(து)
அன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவ தொன்றில்லையே. 55

அருள்புரியும் அருமையினை வியத்தல்

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் என்றன் நெஞ்சின் உள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா! இப்பொருளறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே. 56

அடியேனை ஆளும்வகை இதுவோ என்றல்

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம் செயும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே. 57

நின்னை அன்றிப் பற்றுக்கோடு வேறில்லை என்றல்

அருணாம் புயத்தும் என் சித்தாம்புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல் நல்லாள் தகைசேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும்அல்லால் கண்டிலேன் ஒரு தஞ்சமுமே. 58

Koviloor Digital Library

குற்றம் பொறுக்க வேண்டுதல்

தஞ்சம் பிறிதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒற்றை நீள்சிலையும்
அஞ்சு அம்பும் இக்கு அலராக நின்றாய் அரியாரெனினும்
பஞ்சு அஞ்சு மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே 59

அம்மையார் அருள் புரிந்ததைப் பாராட்டல்

பாலினுஞ் சொல் இனியாய் பனிமாமலர்பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்க நின்றோன் கொன்றை வார் சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சால நன்றோ அடியேன் முடை நாய்த்தலையே.60

தாம் பெற்ற பேற்றைப் புகழ்ந்து பாராட்டல்

நாயேனையும் இங்கொரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய் நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறிவும் அறிவு தந்தாய் என்ன பேறு பெற்றேன்
தாயே மலை மகளே செங்கண்மால் திருத்தங்கச்சியே. 61

தம் சிந்தையில் என்றும் திகழும் பொருளைத் தெரிவித்தல்

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்து மத
வெங்கண் கரியுரி போர்த்த செஞ்சேவகன் மெய் அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என்சிந்தையதே. 62

அறிவில்லாத மக்களுக்கு இரங்கி வருந்துதல்

தேறும்படி சில ஏதுவும் காட்டி முன்செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றில் கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயமுண்டென்று கொண்டாடிய வீணருக்கே. 63

Koviloor Digital Library

உள்ளத்தில் தாம் கொண்ட உறுதி கூறல்

வீணே பலிகவர் தெய்வங்கள் பால் சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்பு பூண்டு கொண்டேன் நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒரு பொழுதும் திருமேனிப்ரகாசமன்றிக்
காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே. 64

அம்மையின் வல்லபத்தை வியத்தல்

ககனமும் வானும் புவனமும் காணவில் காமன் அங்கம்
தகனம் முன்செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முந்நான்கு இரு மூன்று எனத்தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயதன்றோ வல்லி நீ செய்த வல்லபமே. 65

பொருளின் உயர்வினால் இந்நூல் சிறந்தது எனல்

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன்றிலேன் பசும்பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல் அவமாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே. 66

திருவடிகளை நினையாதவரின் நிலைமை இது எனல்

தோத்திரம் செய்து தொழுது மின்போலும் நின்தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில் வையாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம் குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலா நிற்பர் பாரெங்குமே.67

வழிபடுவோர் தன்மையினை அறிவித்தல்

பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர்விசும்பும்
ஊரும் உருகு சுவையொளி ஊறொளி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவம் உடையார் படையாத தனம் இல்லையே. 68

Koviloor Digital Library

அம்மையை வழிபட்டோர் அடையும் இம்மைப் பயன்கள்

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே. 69

அடிமையின் காட்சியில் திளைத்து மகிழ்தல்

கண்களிக்கும்படி கண்டு கொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே. 70

அம்மையின் துணை இருக்கக் குறை ஒன்றும் இல்லை என்றல்

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம் புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்ற நெஞ்சே இரங்கேல் உனக்கு என்குறையே. 71

பிறவித் துன்பத்தைப் போக்க வேண்டுதல்

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன் இனியான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறை காண் இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீர எங்கோன் சடைமேல் வைத்த தாமரையே. 72

அம்மையின் தியானப் பொருள்கள் இவை எனல்

தாமம் கடம்பு படைபஞ்சபாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடிச் செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே. 73

Koviloor Digital Library

அம்மையைத் தியானிப்பவர் அடையும் மறுமைப் பயன்

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன் என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. 74

அம்மையை வழிபட்டோர் சொர்க்க போகமும் வீடும் பெறுதல்

தங்குவர் கற்பக தாருவின் நீழலில் தாயர் இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே. 75

அம்மையின் அடித்தொண்டர்க்கு எமவாதனை இல்லை

குறித்தேன் மனத்தில் நின் கோலமெல்லாம் நின்குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ் கொன்றை வேணிப்பிரான் ஒரு கூற்றை மெய்யில்
பறித்தேன் குடிபுகு தும்பஞ்சபாண பயிரவியே. 76

அம்மையின் திருப்பெயர் கூறி மகிழ்தல்

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிர் அவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77

தம் அனுபவத்தைக் காட்டி அறிவுறுத்தல்

செப்பும் கனக கலசமும் போலுந் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதி வைத்தேன் என் துணை விழிக்கே. 78

Koviloor Digital Library

கருணைத் திறம் கண்டு கயவரை வெறுத்தல்

விழிக்கே அருள் உண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டு இனியே. 79

தாம்பெற்ற ஆனந்தக் களிப்பு

கூட்டியவா என்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டியவா என்கண் ஓடியவா தன்னை உள்ள வண்ணம்
காட்டியவா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா நடமாடகத் தாமரை ஆரணங்கே. 80

அம்மையே அன்றிப் பிறரைத் தொழேன் என்றல்

அணங்கே அணங்குகள் நின்பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவு ஒன்றிலேன் என்கண் நீ வைத்த பேரளியே.81

ஆனந்தத்தில் அழுந்தி நிற்றல்

அளியார் கமலத்தில் ஆரணங்கே அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ஙனே மறப்பேன் நின் விரகினையே 82

அம்மையே வழிபடுவோர் இந்திரர் ஆவர் என்றல்

விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக் கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும் அயிராவதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக்காவும் உடையவரே. 83

Koviloor Digital Library

அம்மையின் அருளைப் பெறாதவர்க்கு அறிவுறுத்தல்

உடையாளை ஒல்குசெம்பட்டுடையாளை ஒளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள் பெம்மான் இடையாளை இங்கு என்னையினிப்
படையாளை உங்களையும் படையா வண்ணம் பார்த்திருமே. 84

அம்மையின் உருவொளித் தோற்றம் உரைத்தல்

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும் பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும் என் அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங்கும முலையும் முலைமேல் முத்து மாலையுமே.85

மரணம் அடையும் காலத்தில் உதவ வேண்டுதல்

மால் அயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்த கப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே.86

எளிதில் வந்து வெளிநின்ற கருணையைப் போற்றல்

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திருமூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால் விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படி ஒரு பாகங் கொண்டாளும் பராபரையே. 87

தகுதி அற்றவன் என்று என்னைக் கைவிடுதல் கூடாது என வேண்டுதல்

பரமென்று உனை யடைந்தேன் தமியேனும் உன் பத்தருக்குள்
தரமன்று இவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில் அயன்
சிரமொன்று செற்றகையான் இடப்பாகம் சிறந்தவளே. 88

Koviloor Digital Library

இறக்கும்பொழுது எளிய வந்து அருள வேண்டல்

சிறக்கும் கமலத் திருவே நின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும் நின் துணைவரும் நீயும் துரியமற்ற
உறக்கந்தர வந்து உடம்போடு உயிர்உறவு அற்று அறிவு
மறக்கும் பொழுது என் முன்னே வரல் வேண்டும் வருந்தியுமே. 89

அம்மையின் திருவருளால் எய்தாத பொருள் ஒன்றுமில்லை எனல்

வருந்தா வகையென் மனத்தாமரையினில் வந்து புகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனி எனக்குப்
பொருந்தாது ஒரு பொருள் இல்லை விண்மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.90

தொழுவாரைத் தொழும் அன்பர் அடையும்பயனை அறிவித்தல்

மெல்லிய நுண்ணிடை மின்னனையாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன் அனையாளைப் புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழும் அவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம் தருமே. 91

பிற சமயங்களைத் தழுவேன் என்றல்

பதத்தே உருகிநின் பாதத்திலே மனம்பற்றி உன்றன்
இதத்தே ஒழுக அடிமை கொண்டாய் இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன் அவர்போன வழியும் செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே. 92

கற்பனை கடந்த கருணை உருவைப் போற்றுதல்

நகையே இஃதிந்த ஞாலமெல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ் முலைமானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே. 93

Koviloor Digital Library

அம்மையின் அடியவர் தன்மையினைக் கூறல்

விரும்பித்தொழும் அடியார் விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பி ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடுமாறி முன் சொன்ன எல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால் அபிராமி சமயம் நன்றே. 94

அம்மையுக் குறைந்து வேண்டுதல்

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கேபரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனது என்று அளித்துவிட்டேன் அழியாத குணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே. 95

அம்மையே வழிபடுவோர் அடையும் பயன் இன்னது எனல்

கோமளவல்லியை அல்லியந் தாமரைக் கோயில் வைகும்
யாமள வல்லியை ஏதமிலாளை எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே. 96

அம்மையை வழிபடுவோரைக் குறிப்பிடுதல்

ஆதித்தன் அம்புலி அங்கி, குபேரன் அமரர் தங்கோன்
போதிப் பிரமன் புராரி முராரி பொதிய முனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.97

அம்மை பொய்யர் நெஞ்சில் புகாள் என்றல்

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறுங் கரந்த தெங்கே
மெய்வந்த நெஞ்சின் அல்லால் ஒருகாலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல் அறியா மடப் பூங்குயிலே. 98

Koviloor Digital Library

அம்மையின் தன்மையினைப் புகலுதல்

குயிலாய் இருக்கும் கடம்பா அடவியிடைக் கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே. 99

அம்மை எப்போதும் அன்பர் நெஞ்சில் நிலவுதல்

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண் நகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே. 100

நூல் பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவி அடங்கக்
காத்தாளை அங்குச பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே.

குமரகுருபரர் அருளியது

சகல கலாவல்லி மாலை

வெண்தா மரைக் கன்றி நின்பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சகமேழும் அளித்து
உண்டான் உறங்க வொழித்தான்
பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே

Koviloor Digital Library

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி
உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலா வல்லியே

அம்பாள் துதி

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணி யிலாத உடலும்
சலியாத மனமும் அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வா மிஅபி ராமியே.

Koviloor Digital Library

1. திருப்பிரமபுரம்

திருமுறை 1/1 இராகம் : கம்பீரநாட்டை பண் : நட்டபாடை
இறைவன் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி

திருஞானசம்பந்தப்பெருமான் 3வயது குழந்தையாக இருந்தபோது தன் தந்தையாரோடு குளிக்க செல்கிறார் அப்போது தந்தையார் குளிக்க குழந்தை கரையில்விட்டு செல்கிறார். குழந்தையாகிய ஞானசம்பந்தர் பசியால் அழ, அதை அழுகை சத்தம் சிவபெருமானுக்கு கேட்டதால், உடனே இறைவன் தேவியிடம் குழந்தைக்கு பால்கொடுக்க சொல்ல அம்மையும் செய்ய ஞானப்பால் ஊட்டுகிறார். கரைக்கு வந்த தந்தை குழந்தையிடம் என்ன இது உடம்பெல்லாம் தாய்பாலாக இருக்கிறதே என கேட்க அந்த 3 வயது குழந்தையாக ஞானசம்பந்தர் பாடிய முதல் பாடல் இது. பசி, பஞ்சம் போக்கவும் ஞானம், அறிவு கிட்டவும் இப்பதிகத்தை ஓதவும்.

தோடு உடைய செவியன் விடை ஏறி ஓர் தூ வெண்மதி சூடி
காடு உடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடு உடைய மலரால் முனைநாள் பணிந்து ஏத்த அருள்செய்த
பீடு உடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே! 1

முற்றல் ஆமை இள நாகமொடு ஏனமுளைக்கொம்பு அவைபூண்டு
வற்றல்ஓடு கலனாப் பலிதேர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
கற்றல் கேட்டல் உடையார் பெரியார் கழல் கையால் தொழுது ஏத்த
பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 2

நீர் பரந்த நிமிர் புன்சடைமேல் ஓர் நிலா வெண்மதி சூடி
ஏர் பரந்த இனவெள்வளை சோர என் உள்ளம் கவர் கள்வன்
ஊர் பரந்த உலகின் முதல் ஆகிய ஓர் ஊர் இது என்னப்
பேர்பரந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 3

விண் மகிழ்ந்த மதில் எய்ததும் அன்றி விளங்கு தலை ஓட்டில்
உள் மகிழ்ந்து பலி தேரிய வந்து எனது உள்ளம் கவர் கள்வன்
மண் மகிழ்ந்த அரவம் மலர்க்கொன்றை மலிந்த வரை மார்பில்
பெண் மகிழ்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 4

Koviloor Digital Library

ஒருமை பெண்மை உடையன் சடையன் விடை ஊரும் இவன் என்ன
அருமை ஆக உரைசெய்ய அமர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்தது ஓர் காலம் இது என்னப்
பெருமை பெற்ற பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 5

மறை கலந்த ஒலிபாட ஆடலர் ஆகி மழு ஏந்தி
இறைகலந்த இனவெள்வளை சோர என் உள்ளம் கவர் கள்வன்
கறைகலந்த கடி ஆர் பொழில் நீடு உயர் சோலை கதிர்சிந்தப்
பிறைகலந்த பிரமாபுரம்மேவிய பெம்மான் இவன் அன்றே. 6

சடை முயங்கு புனலன் அனலன் எரிவீசிச் சதிர்வு எய்த
உடை முயங்கும் அரவோடு உழிதந்து எனது உள்ளம் கவர் கள்வன்
கடல் முயங்கு கழிசூழ் குளிர்கானல் அம் பொன்அம் சிறகு அன்னம்
பெடை முயங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 7

வியர் இலங்கு வரை உந்திய தோள்களை வீரம்விளைவித்த
உயர் இலங்கை அரையன் வலி செற்று எனது உள்ளம் கவர் கள்வன்
துயர் இலங்கும் உலகில் பலஊழிகள் தோன்றும் பொழுது எல்லாம்
பெயர் இலங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 8

தாள் நுதல் செய்து இறை காணிய மாலொடு தண் தாமரையானும்
நீணுதல் செய்து ஒழிய நிமிர்ந்தான் எனது உள்ளம் கவர் கள்வன்
வாள்நுதல் செய் மகளீர் முதலாகிய வையத்தவர் ஏத்த
பேணுதல்செய் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 9

புத்தரோடு பொறி இல் சமணும் புறம் கூற நெறி நில்லா
ஒத்த சொல்ல உலகம் பலி தேர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
மத்தயானை மறுக உரி போர்த்தது ஓர்மாயம் இது என்ன
பித்தர்போலும் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 10

Koviloor Digital Library

அருநெறிய மறை வல்ல முனி அகன் பொய்கை அலர் மேய
பெரு நெறிய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் தன்னை
ஒரு நெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன் உரை செய்த
திரு நெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

௨. திருப்பாச்சிலாச்சிராமம்

திருமுறை : 1/44 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

இறைவர் : மாற்றறிவரதர் இறைவி : பாலசௌந்தரி

இரத்த அழுத்தம், நீரழிவு நோய், நரம்பு தளர்ச்சி மற்றும்குடி போதையில் சிக்கி தவிப்பவர்களுக்கு மீண்டு வாழ ஓத வேண்டிய பதிகம்.

திருஞான சம்பந்தப் பெருமான் பல தலங்களையும் தரிசித்தபடி, மழநாட்டைச் சேர்ந்த திருப்பாச்சிலாச்சிரமம் எனும் தலத்திற்கு வந்து சேர்ந்தார். அந்நாட்டு மன்னன் கொல்லிமழவனுடைய மகள் 'முயலகன்' என்னும் நோயால் பீடிக்கப்பட்டிருந்தாள். சம்பந்தப் பெருமானை வரவேற்ற மன்னன், தனது மகளின் நோயைத் தீர்க்கும்படி வேண்டிக் கொண்டான். அதன்படி சம்பந்தப் பெருமான் இத்திருப்பதிகத்தைப் பாடி, மன்னனின் மகளைப் பீடித்திருந்த நோயைக் குணமாக்கினார்.

இத்திருப்பதிகத்தை 48 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்து வந்தால் மேற்கண்ட நோய்கள் குணமாகும் என்பது திண்ணம்.

Koviloor Digital Library

துணி வளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணி வளர் கொள்கையர் பாரிடம் சூழ
ஆர் இடமும் பலி தேர்வர்
அணி வளர் கோலம்எலாம் செய்து பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
மணி வளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே. 1

கலை புனை மான்உரி தோல்உடை ஆடை
கனல்சுடரால் இவர் கண்கள்
தலை அணி சென்னியர் தார் அணி மார்பர்
தம் அடிகள் இவர் என்ன
அலை புனல் பூம்பொழில் சூழ்ந்து அமர் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
இலைபுனை வேலரோ ஏழையை வாட
இடர் செய்வதோ இவர் ஈடே. 2

வெஞ்சுடர் ஆடுவர் துஞ்சு இருள் மாலை
வேண்டுவர் பூண்பது வெண்நூல்
நஞ்சு அடை கண்டர் நெஞ்சு இடம் ஆக
நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சு அடை மாளிகை சூழ்தரு பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
சிதை செய்வதோ இவர் சீரே. 3

கன மலர்க் கொன்றை அலங்கல் இலங்கக்
கனல் தரு தூ மதிக்கண்ணி
புன மலர்மாலை அணிந்து அழகாய
புனிதர் கொல் ஆம் இவர் என்ன

Koviloor Digital Library

வனமலி வண்பொழில் சூழ்தரு பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
மனமலி மைந்தரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே. 4

மாந்தர்தம் பால் நறுநெய் மகிழ்ந்து ஆடி
வளர்சடை மேல் புனல் வைத்து
மோந்தை முழாக் குழல் தாளம் ஓர் வீணை
முதிர ஓர் வாய்மூரி பாடி
ஆந்தைவிழிச் சிறு பூதத்தர் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
சாந்து அணி மார்பரோ தையலை வாடச்
சதுர்செய்வதோ இவர் சார்வே. 5

நீறுமெய் பூசி நிறைசடை தாழ
நெற்றிக்கண்ணால் உற்று நோக்கி
ஆறுஅது சூடி ஆடரவு ஆட்டி
ஐவிரல் கோவண ஆடை
பால் தரு மேனியர் பூதத்தர் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
ஏறுஅது ஏறியர் ஏழையை வாட
இடர் செய்வதோ இவர் ஈடே. 6

பொங்கு இள நாகம் ஓர் ஏகவடத்தோடு
ஆமை வெண்நூல் புனை கொன்றை
கொங்கு இள மாலை புனைந்து அழகாய
குழகர்கொல்ஆம் இவர் என்ன

Koviloor Digital Library

அங்கு இளமங்கை ஓர் பங்கினர் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
சங்கொளி வண்ணரோ தாழ்குழல் வாடச்
சதிர் செய்வதோ இவர் சார்வே. 7

ஏவலத்தால் விசயற்கு அருள் செய்து
இராவணனை ஈடு அழித்து
மூவரிலும் முதலாய் நடுவாய
மூர்த்தியை அன்றி மொழியாள்
யாவர்களும் பரவும் எழில் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
தேவர்கள்தேவரோ சேயிழை வாடச்
சிதை செய்வதோ இவர் சேர்வே. 8

மேலது நான்முகன் எய்தியது இல்லை
கீழ்அது சேவடி தன்னை
நீல் அது வண்ணனும் எய்தியது இல்லை
என இவர் நின்றதும் அல்லால்
ஆல் அது மா மதி தோய்பொழில் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
பால் அது வண்ணரோ பைந்தொடி வாடப்
பழி செய்வதோ இவர் பண்பே. 9

நாணொடு கூடிய சாயினரேனும்
நகுவர் அவர் இருபோதும்
ஊணொடு கூடிய உட்கும் நகையால்
உரைகள் அவை கொள வேண்டா

Koviloor Digital Library

ஆணொடு பெண்வடிவு ஆயினர் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
பூண்நெடு மார்பரோ பூங்கொடி வாடப்
புனை செய்வதோ இவர் பொற்பே. 10

அகம் மலி அன்பொடு தொண்டர் வணங்க
ஆச்சிராமத்து உறைகின்ற
புகை மலி மாலை புனைந்து அழகாய
புனிதர் கொலாம் இவர் என்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு காழி
நல்தமிழ் ஞானசம்பந்தன்
தகை மலி தண்தமிழ் கொண்டு இவை ஏத்தச்
சாரகிலா வினைதானே. 11

திருச்சிற்றம்பலம்

3. திருநள்ளாறு

திருமுறை : 1/49 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி
இறைவன் : தர்ப்பரண்யேஸ்வரர் இறைவி : போகமார்த்த பூண்முலையாள்

வாழ்க்கையில் அட்டமச்சனி, ஏழரைச்சனி, மற்றும் கண்டச் சனி, போன்ற எதிர்பாராத சங்கடங்களிலிருந்து இடர்கள் ஏற்படாமல் இருக்க ஓத வேண்டிய பதிகம்.

இத்திருப்பதிகம் திருஞான சம்பந்தப்பெருமானால் திருநள்ளாற்றில் பாடப்பெற்ற பதிகமாகும். இதனை 'பச்சைப்பதிகம்' என்பர். சம்பந்தப்பெருமான் மதுரையில் சமணர்களுடன் அனல் வாதத்தில் ஈடுபட்டபோது இப்பதிகம் எழுதப்பட்ட ஓலையை அனலிலிட்ட போது அது எரிந்து போகாமல் பச்சையாகவே இருந்தது. சமணர்கள் இட்ட ஓலை எரி;ந்து

Koviloor Digital Library

போனது. இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்தால், சனிக்கிரகத்தினால் வரும் அனைத்து தோஷங்களும் நீங்கும் என்பது திண்ணம்.

போகம்ஆர்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்அகலம்
பாகம்ஆர்த்த பைங்கண்வெள்ஏற்று அண்ணல் பரமேட்டி
ஆகம் ஆர்த்த தோல்உடையன் கோவண ஆடையின்மேல்
நாகம் ஆர்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 1

தோடு உடைய காது உடையன் தோல்உடையன் தொலையாப்
பீடு உடைய போர் விடையன் பெண்ணும் ஓர்பால் உடையன்
ஏடு உடைய மேல்உலகோடு ஏழ்கடலும் சூழ்ந்த
நாடு உடைய நம்பெருமான் மேயது நள்ளாறே. 2

ஆன் முறையால் ஆற்ற வெண்நீறு ஆடி அணியிழை ஓர்
பால் முறையால் வைத்த பாதம் பத்தர் பணிந்து ஏத்த
மான்மறியும் வெண்மழுவும் சூலமும் பற்றிய கை
நால்மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே. 3

புல்க வல்ல வார்சடைமேல் பூம்புனல் பெய்து அயலே
மல்க வல்ல கொன்றைமாலை மதியோடு உடன்சூடிப்
பல்க வல்ல தொண்டர் தம் பொன்பாதநிழல் சேர
நல்க வல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே. 4

ஏறு தாங்கி ஊர்தி பேணி ஏர் கொள் இளமதியம்
ஆறு தாங்கும் சென்னிமேல் ஓர் ஆடுஅரவம் சூடி
நீறு தாங்கி நூல் கிடந்த மார்பில் நிரை கொன்றை
நாறு தாங்கு நம்பெருமான் மேயது நள்ளாறே. 5

Koviloor Digital Library

திங்கள் உச்சிமேல் விளங்கும் தேவன் இமையோர்கள்
எங்கள் உச்சி எம்இறைவன் என்று அடியே இறைஞ்சத்
தங்கள் உச்சியால் வணங்கும் தன் அடியார்கட்கு எல்லாம்
நங்கள் உச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே. 6

வெஞ்சுடர்த்தீ அங்கை ஏந்தி விண் கொள் முழவு அதிர
அஞ்சுஇடத்து ஓர் ஆடல் பாடல் பேணுவது அன்றியும் போய்ச்
செஞ்சடைக்கு ஓர் திங்கள் சூடித் திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சு அடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 7

சிட்டம் ஆர்ந்த மும்மதிலும் சிலைவரைத் தீஅம்பினால்
சுட்டு மாட்டிச் சுண்ணவெண்நீறு ஆடுவது அன்றியும் போய்ப்
பட்டம் ஆர்ந்த சென்னிமேல் ஓர் பால்மதியம் சூடி
நட்டம்ஆடும் நம்பெருமான் மேயது நள்ளாறே. 8

உண்ணல் ஆகா நஞ்சு கண்டத்து உண்டு உடனே ஒடுக்கி
அண்ணல் ஆகா அண்ணல் நீழல் ஆர் அழல் போல் உருவம்
எண்ணல் ஆகா உள் வினை என்று எள்க வலித்து இருவர்
நண்ணல் ஆகா நம்பெருமான் மேயது நள்ளாறே. 9

மாசு மெய்யர் மண்டைத் தேரர் குண்டர் குணம்இலிகள்
பேசும் பேச்சை மெய் என்று எண்ணி அந் நெறி செல்லன்மின்
மூசுவண்டு ஆர் கொன்றை சூடி மும்மதிலும் உடனே
நாசம் செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 10

தண்புனலும் வெண்பிறையும் தாங்கிய தாழ்சடையன்
நண்பு நல்லார் மல்கு காழி ஞானசம்பந்தன் நல்ல
பண்பு நள்ளாறு ஏத்து பாடல் பத்தும்இவை வல்லார்
உண்பு நீங்கி வானவரோடு உலகில் உறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

4. திருநெடுங்களம்

திருமுறை : 1/52 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி
இறைவன் : நித்யசுந்தரேசுவரர் இறைவி : ஒப்பிலாநாயகி

எடுத்த காரியம் எதிரிகளால் தடையின்றி நடக்கவும், வீண் பழி அவமானங்களிலிருந்து விடுபட்டு, இறையருள் எளிதில் கிட்டவும் தினமும் ஓத வேண்டிய பதிகம்

திருஞானசம்பந்தப் பெருமான் திருநெடுங்களம் என்னும் பதியை அடைந்து அங்கு உறைந்தருளும் சிவபெருமானிடம் இறைவன் திருவருளை தான் எந்நாளும் மறவாதிருக்க வேண்டியபடி இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்தால், துன்பங்கள் நீங்கி, இல்லத்தில் அமைதியும் மங்களமும் உண்டாகும்.

மறை உடையாய் தோல்உடையாய் வார்சடைமேல் வளரும்
பிறை உடையாய் பிஞ்ஞகனே என்று உனைப் பேசின் அல்லால்
குறை உடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறை உடையார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே. 1

கனைத்து எழுந்த வெண்திரை சூழ் கடல்இடை நஞ்சு தன்னைத்
தினைத்தனையா மிடற்றில் வைத்த திருந்திய தேவ நின்னை
மனத்துஅகத்தோர் பாடல் ஆடல் பேணி இராப்பகலும்
நினைத்து எழுவார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே. 2

நின் அடியே வழிபடுவான் நிமலா நினைக் கருத
என் அடியான் உயிரை வவ்வேல் என்றுஅடல் கூற்று உதைத்த
பொன்அடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின் அடியார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே. 3

Koviloor Digital Library

மலை புரிந்த மன்னவன்தன் மகளை ஓர்பால் மகிழ்ந்தாய்
அலை புரிந்த கங்கை தங்கும் அவிர்சடை ஆரூரா
தலை புரிந்த பலி மகிழ்வாய் தலைவ நின் தாள்நிழல்கீழ்
நிலை புரிந்தார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே. 4

பாங்கின் நல்லார் படிமம் செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கி நல்லார் பாடலொடு தொழு கழலே வணங்கித்
தாங்கி நில்லா அன்பினோடும் தலைவ நின் தாள்நிழல்கீழ்
நீங்கி நில்லார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே. 5

விருத்தன் ஆகிப் பாலன்ஆகி வேதம்ஓர்நான்கு உணர்ந்து
கருத்தன் ஆகிக் கங்கையாளைக் கமழ் சடைமேல் கரந்தாய்
அருத்தன்ஆய ஆதிதேவன் அடிஇணையே பரவும்
நிருத்தர் கீதர் இடர் களையாய் நெடுங்களம்மேயவனே. 6

கூறு கொண்டாய் மூன்றும்ஒன்றாக் கூட்டிஓர் வெங்கணையால்
மாறுகொண்டார் புரம் எரித்த மன்னவனே கொடிமேல்
ஏறு கொண்டாய் சாந்தம்ஈது என்று எம்பெருமான் அணிந்த
நீறு கொண்டார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே. 7

குன்றின் உச்சிமேல் விளங்கும் கொடிமதில் சூழ் இலங்கை
அன்றி நின்ற அரக்கர்கோனை அரு வரைக்கீழ் அடர்த்தாய்
என்று நல்ல வாய்மொழியால் ஏத்தி இராப் பகலும்
நின்று நைவார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே. 8

வேழவெண்கொம்பு ஒசித்த மாலும் விளங்கிய நான்முகனும்
சூழ எங்கும் நேட ஆங்கு ஓர் சோதியுள் ஆகி நின்றாய்
கேழல்வெண்கொம்பு அணிந்த பெம்மான் கேடு இலாப்பொன் அடியின்
நீழல் வாழ்வார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே. 9

Koviloor Digital Library

வெஞ்சொல் தம் சொல் ஆக்கி நின்ற வேடம் இலாச் சமணும்
தஞ்சம் இல்லாச் சாக்கியரும் தத்துவம் ஒன்று அறியார்
துஞ்சல் இல்லா வாய்மொழியால் தோத்திரம் நின் அடியே
நெஞ்சில் வைப்பார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே. 10

நீட வல்ல வார்சடையான் மேய நெடுங்களத்தைச்
சேடர் வாழும் மா மறுகின் சிரபுரக்கோன் நலத்தால்
நாட வல்ல பனுவல்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே. 11

திருச்சிற்றம்பலம்

5. திருவீழிமிழலை

திருமுறை : 1/92 பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி
இறைவன் : வீழியழகேசுவரர் இறைவி : சுந்தராம்பிகை

செய்யும் தொழிலில் இலாபம் பெருகவும், வழக்குகள் வெற்றி பெறவும், குடும்பத்தில் சகோதர ஒற்றுமை நிலவவும், பணம் தட்டுப்பாடு இல்லாமல் இருக்கவும் ஓத வேண்டிய பதிகம்.

திருஞான சம்பந்தப் பெருமானும், திருநாவுக்கரசர் பெருமானும் திருவீழிமிழலை என்னும் பதியில் தங்கியிருந்தனர். அப்போது அவ்வூரில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. எனவே இவ்விருவரும் மிழலைப் பெருமானிடம் படிக்காசு பெற்று அன்னதானம் செய்து வந்தனர்.

திருநாவுக்கரசர் பெருமான் பெற்ற படிக்காசு மாசற்றதாக விளங்கியது. ஆனால் சம்பந்தப் பெருமான் பெற்ற காசு மாசு உடையதாக இருந்தது. எனவே சம்பந்தப் பெருமான் தனக்களிக்கப்பட்ட காசை மாசற்றதாக மாற்றக்கோரி இறைவனிடம் வேண்டி இத்திருப்பதிகத்தைப் பாடினார். அதன்

Koviloor Digital Library

பிறகு சம்பந்தப் பெருமானுக்கும் மாசற்ற படிக்காசு இறைவனால் அருளப்பட்டது.

இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால், வழக்குகளில் வெற்றி, வியாபாரத்தில் லாபம், எடுத்த காரியத்தில் வெற்றி அனைத்தும் ஏற்படும்

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசு இல் மிழலையீர், ஏசல் இல்லையே. 1

இறைவர்ஆயினீர், மறை கொள் மிழலையீர்
கறை கொள் காசினை முறைமை நல்குமே. 2

செய்யமேனியீர், மெய் கொள் மிழலையீர்
பை கொள் அரவினீர், உய்ய நல்குமே. 3

நீறு பூசினீர், ஏறுஅது ஏறினீர்
கூறு மிழலையீர், பேறும் அருளுமே. 4

காமன் வேவ ஓர், தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர், சேமம் நல்குமே. 5

பிணி கொள் சடையினீர், மணி கொள் மிடறினீர்
அணி கொள் மிழலையீர், பணிகொண்டு அருளுமே. 6

மங்கை பங்கினீர், துங்க மிழலையீர்
கங்கை முடியினீர், சங்கை தவிர்மினே. 7

அரக்கன் நெரிதர, இரக்கம் எய்தினீர்
பரக்கும் மிழலையீர், கரக்கை தவிர்மினே. 8

அயனும் மாலுமாய், முயலும் முடியினீர்
இயலும் மிழலையீர்,பயனும் அருளுமே. 9

Koviloor Digital Library

பறிகொள் தலையினார், அறிவது அறிகிலார்
வெறி கொள் மிழலையீர், பிறிவுஅது அரியதே. 10

காழி மா நகர், வாழி சம்பந்தன்
வீழிமிழலைமேல், தாழும் மொழிகளே. 11

6. திருச்சிராப்பள்ளி

திருமுறை : 1/98 பண் : குறிஞ்சி இராகம் : ஹரிகாம்போதி
இறைவர் : தாயுமானேசுவரர் இறைவி : மட்டுவார்குழலி

பெற்றோர்கள் உடல் நிலை சீர்பெறவும், சுகப் பிரசவம் நடக்கவும், வீடுமனை வாங்கி கட்டி முடிப்பதற்கும் ஓத வேண்டிய பதிகம்

திருச்சிராப்பள்ளி தலத்தில் எழுந்தருளியுள்ள தாயுமானவரின் மீது சம்பந்தப் பெருமான் பாடிய திருப்பதிகம் இதுவாகும். காவிரியின் வடகரையில் வசித்த பெண்ணொருத்தியின் பிரசவ காலத்தில் காவிரியில் வெள்ளம் பெருகியது. ஆதலால் பிரசவத்திற்கு அவளது தாய், தந்தையரால் வர இயலவில்லை. எனவே இறைவனே தாயுமானவனாக வந்து அப்பெண்ணிற் மருத்துவம் செய்து பிரசவம் நடைபெற அருளினான். எனவே தாயுமானவர் மீது சம்பந்தப் பெருமான் பாடிய இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால் சுகப்பிரசவம் நடைபெறும் என்பது திண்ணம்.

நன்று உடையானைத் தீயது இலானை நரை வெள்ளேறு
ஒன்று உடையானை உமை ஒருபாகம் உடையானைச்
சென்று அடையாத திரு உடையானைச் சிராப்பள்ளிக்
குன்று உடையானைக் கூற என் உள்ளம் குளிரும்மே. 1

Koviloor Digital Library

கைம் மகவு ஏந்திக் கடுவனொடுஊடிக் கழைபாய்வான்
செம்முக மந்தி கருவரை ஏறும் சிராப்பள்ளி
வெம் முக வேழத்து ஈர்உரி போர்த்த விகிர்தா நீ
பைம்முக நாகம் மதியுடன் வைத்தல் பழிஅன்றே. 2

மந்தம் முழவம் மழலை ததும்ப வரை நீழல்
செந் தண் புனமும் சுனையும் சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம் மலர்கள் சடைமேல்உடையார் விடை ஊரும்
எம்தம் அடிகள் அடியார்க்கு அல்லல் இல்லையே. 3

துறை மல்கு சாரல் சுனை மல்கு நீலத்துஇடை வைகிச்
சிறை மல்கு வண்டும் தும்பியும் பாடும் சிராப்பள்ளிக்
கறை மல்கு கண்டன் கனல்எரிஆடும் கடவுள் எம்
பிறை மல்கு சென்னி உடையவன் எங்கள் பெருமானே. 4

கொலை வரையாத கொள்கையர் தங்கள் மதில்மூன்றும்
சிலை வரை ஆகச் செற்றனரேனும் சிராப்பள்ளித்
தலைவரை நாளும் தலைவர் அல்லாமை உரைப்பீர்காள்
நிலவரை நீலம் உண்டதும் வெள்ளை நிறம் ஆமே. 5

வெய்ய தண்சாரல் விரி நிற வேங்கைத் தண்போது
செய்யபொன் சேரும் சிராப்பள்ளி மேய செல்வனார்
தையல் ஓர்பாகம் மகிழ்வர் நஞ்சு உண்பர் தலைஓட்டில்
ஐயமும் கொள்வர் ஆர் இவர் செய்கை அறிவாரே. 6

வேய் உயர் சாரல் கருவிரல் ஊகம் விளையாடும்
சேய் உயர் கோயில் சிராப்பள்ளி மேய செல்வனார்
பேய் உயர் கொள்ளி கைவிளக்கு ஆகப் பெருமானார்
தீ உகந்து ஆடல் திருக்குறிப்பு ஆயிற்று ஆகாதே. 7

Koviloor Digital Library

மலை மல்கு தோளன் வலி கெட ஊன்றி மலரோன்தன்
தலை கலன் ஆகப் பலி திரிந்து உண்பர் பழிஓரார்
சொல வல வேதம் சொல வல கீதம் சொல்லுங்கால்
சில அலபோலும் சிராப்பள்ளிச்சேடர் செய்கையே. 8

அரப்பள்ளியானும் மலர் உறைவானும் அறியாமைக்
கரப்புஉள்ளி நாடிக் கண்டிலரேனும் கல்சூழ்ந்த
சிரப்பள்ளி மேய வார்சடைச் செல்வர் மனைதோறும்
இரப்பு உள்ளீர் உம்மை ஏதிலர் கண்டால் இகழாரே. 9

நாணாது உடை நீத்தோர்களும் கஞ்சி நாள்காலை
ஊணாப் பகல் உண்டு ஒதுவோர்கள் உரைக்கும்சொல்
பேணாது உறு சீர் பெறுதும் என்பீர் எம்பெருமானார்
சேணார் கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே. 10

தேன் நயம்பாடும் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல் சங்கு ஏறும் கழுமலஊரில் கவுணியன்
ஞானசம்பந்தன் நலம்மிகுபாடல் இவை வல்லார்
வான சம்பந்தத்து அவரொடு மன்னி வாழ்வாரே. 11

7. திருநீலகண்டப்பதிகம்

திருமுறை: 1/116 பண்: வியாழக்குறிஞ்சி இராகம்: சௌராட்டிரம்

விஷ சுரம், குளிர் காய்ச்சல், தொண்டை நோயிலிருந்து நீங்கி குரல் வளம் பெறவும் செய்வினையால் வரும் துன்பங்களை நீக்கவும் உதவும் பதிகம்

திருஞானசம்பந்தப் பெருமான் கொடிமாட செங்குன்றூர் என்னும் தலத்தில் பல அடியார்களுடன் தங்கியிருந்தார். அப்போது, அடியார்கள் குளிர் காய்ச்சல் கண்டு வருந்தினர். சம்பந்தப் பெருமான் இத்திருப்பதிகத்தைப் பாடி அடியார்களின் நோயினைப்

Koviloor Digital Library

போக்கியருளினார். இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால், குளிர் காய்ச்சல், விஷக்கடி முதலிய நோய்களை உருவாக்கும் ஊழ்வினை நீங்கி, நோய்கள் அகலும் என்பது திண்ணம்.

அவ் வினைக்கு இவ் வினை ஆம் என்று சொல்லும் அஃது அறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உம்தமக்கு ஊனம்அன்றே
கை வினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாம்அடியோம்
செய்வினை வந்து எமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம். 1

காவினை இட்டும் குளம்பல தொட்டும் கனிமனத்தால்
ஏ வினையால் எயில்மூன்று எரித்தீர் என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து மலர்அடி போற்றுதும் நாம்அடியோம்
தீவினை வந்து எமைத் தீண்டப்பெறா திரு நீலகண்டம். 2

முலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்று எவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டு எமை ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச்சூலமும் தண்டும் மழுவும் இவை உடையீர்
சிலைத்து எமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 3

விண்ணுலகு ஆள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும்
புண்ணியர் என்று இருபோதும் தொழப்படும் புண்ணியரே
கண்இமையாதன மூன்று உடையீர் உம் கழல்அடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெறா திரு நீலகண்டம். 4

மற்று இணை இல்லா மலைத் திரண்டு அன்ன திண்தோள் உடையீர்
கிற்று எமை ஆட்கொண்டு கேளாது ஒழிவதும் தன்மைகொல்லோ
சொல் துணை வாழ்க்கை துறந்து உம் திருவடியே அடைந்தோம்
செற்று எமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 5

Koviloor Digital Library

மறக்கும் மனத்தினை மாற்றி எம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பு இல் பெருமான் திருந்து அடிக்கீழ்ப் பிழையாத வண்ணம்
பறித்த மலர் கொடுவந்து உமை ஏத்தும் பணி அடியோம்
சிறப்புஇலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். (6 –7)

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்து உம் கழல் அடிக்கே
உருகி மலர்கொடுவந்து உமை ஏத்துதும் நாம்அடியோம்
செரு இல் அரக்கனைச் சீரில்அடர்த்து அருள் செய்தவரே
திருஇலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 8

நாற்றமலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்றம் உடைய அடியும் முடியும் தொடர்வு அரியீர்
தோற்றினும் தோற்றும் தொழுது வணங்குதும் நாம்அடியோம்
சீற்றம்அதுஆம் வினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 9

சாக்கியப்பட்டும் சமண்உரு ஆகி உடை ஒழிந்தும்
பாக்கியம் இன்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 10

பிறந்த பிறவியில் பேணி எம் செல்வன் கழல்அடைவான்
இறந்த பிறவி உண்டாகில் இமையவர் கோன் அடிக்கண்
திறம் பயில் ஞானசம்பந்தன செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

8. திருப்பிரமபுரம்

(திருஎழுகூற்றிருக்கை)

திருமுறை 1/128 இராகம் : சௌராட்டிரம் பண் : வியாழக்குறிஞ்சி

இறைவர் : பிரமபுரீசுவரர் இறைவி : திருமுலைநாயகி

பதினாறு பேறுகளைப் பெறவும், பெற்றோர் உடல்நலம், மனநலம் சீர்பெறுவதற்கும், தனக்குக் கிடைக்கவேண்டிய வாய்ப்புகள் நழுவாமல் இருப்பதற்கும் ஓத வேண்டிய பதிகம்.

திருஞான சம்பந்தப் பெருமானது தந்தையார் சிவபாத இருதயர், சம்பந்தரது பாடல்களைப் பாடியே சிவபூசைகள் செய்து வந்தார். நாளடைவில் பாடல்கள் பெருகிவிட்டன. அனைத்துப் பாடல்களையும் பாடி பூசைகள் செய்ய தந்தையாரால் இயலவில்லை. அதுகுறித்து சம்பந்தரிடம் கூறினார். தந்தையின் இயலாமையைப் புரிந்து கொண்ட சம்பந்தர் இத்திருப்பதிகத்தைப் பாடி "இத்திருப்பதிகம் அனைத்து திருப்பதிகங்களையும் பாடிய பலனை அளிக்கும்" என்று கூறினார். அதன்படி சம்பந்தரின் தந்தையாரும் தினமும் இத்திருப்பதிகத்தைப் பாடி சிவபூசைகள் செய்து, முக்தி பெற்றார்.

இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால் தந்தையாருக்கு நற்பலன் விளைவதோடு, அனைத்து தேவாரப் பதிகங்களையும் பாராயணம் செய்த பலன் கிட்டும் என்பது திண்ணம்.

ஓர்உரு ஆயினை மான் ஆங்காரத்து
ஈர் இயல்புஆய் ஒரு விண் முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்து அளித்து அழிப்ப மும்மூர்த்திகள் அயினை
இருவரோடு ஒருவன்ஆகி நின்றனை 5

5

Koviloor Digital Library

ஓர் ஆல்நீழல் ஒண்கழல்இரண்டும்
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை நாட்டம் மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமோடு ஒருமதி சூடினை
ஒருதாள் ஈர்அயில் மூஇலைச் சூலம் 10

நால்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருக்கோட்டு ஒருகரி ஈடு அழித்து உரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத்தோடு நானிலம் அஞ்சக் 15

கொன்று தலத்துஉற அவுணரை அறுத்தனை
ஐம்புலன் நால் ஆம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தோடு
இருப்பிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறைமுடித்து 20

நால்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து ஆறுஅங்கம் முதல்எழுத்து ஓதி
வரன் முறை பயின்று எழு வான்தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை 25

இகலி அமைந்து உணர் புகலி அமர்ந்தனை
பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ உலகும் புதைய மேல் மிதந்த
தோணிபுரத்து உறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை 30

Koviloor Digital Library

வரபுரம் ஒன்று உணர் சிரபுரத்து உறைந்தனை
ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்
விறல் கெடுத்து அருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை 35

ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை
எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறுபதமும் ஐந்து அமர் கல்வியும்
மறை முதல் நான்கும் 40

மூன்றுகாலமும் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும் 45

அனைய தன்மையை ஆதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லை நீள் நிலத்தே

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

௯. திருவான்மியூர்

திருமுறை : 3/55 பண் : கௌசிகம் இராகம் : பைரவி

நோய், கடன், வறுமை வேலையில்லாமை மகப்பேற்று சிக்கல் போன்ற பஞ்ச பிணிகளும் நீங்க ஓத வேண்டிய பதிகம்.

திருமயிலையில் திருத்தல உலா முடித்து திருவான்மியூர் வந்தடைந்த திருஞானசம்பந்தர் திருவான்மியூர் பால்வண்ணநாதர் பால் திருக்கடைகாப்புச் சாத்தி திருமுறை பாடுங்கால் கொடுமையான வல்வினைகளும் போய் அறுவதற்கு இப்பதிகம் சிறப்பு உள்ளதாக உரைத்தார்.

விரை ஆர் கொன்றையினாய் விடம் உண்ட மிடற்றினனே
உரை ஆர் பல்புகழாய் உமைநங்கை ஓர்பங்கு உடையாய்
திரை ஆர் தெண்கடல் சூழ் திரு வான்மியூர் உறையும்
அரையா உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே. 1

இடி ஆர் ஏறு உடையாய் இமையோர்தம் மணிமுடியாய்
கொடி ஆர் மா மதியோடு அரவம் மலர்க்கொன்றையினாய்
செடி ஆர் மாதவி சூழ் திரு வான்மியூர் உறையும்
அடிகேள் உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே. 2

கை ஆர் வெண்மழுவா கனல் போல் திருமேனியனே
மை ஆர் ஒண்கண் நல்லாள்உமையாள் வளர் மார்பினனே
செய் ஆர் செங்கயல் பாய் திரு வான்மியூர் உறையும்
ஐயா உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே. 3

பொன் போலும் சடைமேல் புனல்தாங்கிய புண்ணியனே
மின் போலும் புரிநூல் விடை ஏறிய வேதியனே
தென்பால் வையம்எலாம் திகழும் திரு வான்மிதன்னில்
அன்பா உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே. 4

Koviloor Digital Library

கண் ஆரும் நுதலாய் கதிர் சூழ் ஒளி மேனியின் மேல்
எண் ஆர் வெண்பொடி நீறு அணிவாய் எழில் ஆர் பொழில் சூழ்
திண் ஆர் வண் புரிசைத் திரு வான்மியூர் உறையும்
அண்ணா உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே. 5

நீதி நின்னை அல்லால் நெறியாதும் நினைந்து அறியேன்
ஓதீ நால்மறைகள் மறையோன் தலை ஒன்றினையும்
சேதீ சேதம் இல்லாத் திருவான்மியூர் உறையும்
ஆதீ உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே. 6

வான் ஆர் மா மதி சேர் சடையாய் வரை போல வரும்
கான் ஆர் ஆனையின் தோல் உரித்தாய் கறை மா மிடற்றாய்
தேன் ஆர் சோலைகள் சூழ் திரு வான்மியூர் உறையும்
ஆனாய் உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே. (7 –8)

பொறி வாய் நாகணையானொடு பூமிசை மேயவனும்
நெறி ஆர் நீள்கழல் மேல்முடி காண்பு அரிது ஆயவனே
செறிவு ஆர் மா மதில் சூழ் திரு வான்மியூர் உறையும்
அறிவே உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே. 9

குண்டாடும் சமணர் கொடும் சாக்கியர் என்று இவர்கள்
கண்டார் காரணங்கள் கருதாது அவர் பேச நின்றாய்
திண் தேர் வீதிஅது ஆர் திரு வான்மியூர் உறையும்
அண்டா உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே 10

கன்று ஆரும் கமுகின் வயல் சூழ்தரு காழிதனில்
நன்று ஆன புகழான் மிகு ஞானசம்பந்தன் உரை
சென்றார்தம் இடர் தீர் திரு வான்மியூர் அதன்மேல்
குன்றாது ஏத்த வல்லார் கொடுவல்வினை போய் அறுமே. 11

Koviloor Digital Library

10. திருமணஞ்சேரி

திருமுறை : 2/16 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

தாம்பத்திய உறவு முழுமை பெற்று, பிணக்கு தீர்ந்து ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு ஓத வேண்டிய பதிகம்

ஐம்புலன்களால் செய்யும் பாவங்களை மனம் ஒன்றி,தம்பதியர் ஒற்றுமையுடன் இல்லறத்தை நல்லறமாக்கி, இறையருளில் கூடி நின்ற இன்புற வாழ்ந்திட திருஞான சம்பந்தப் பெருமான் திருக்கடைகாப்பில் பாவம், வினை, அல்லல், இடர், அனைத்தும் போக்கிட என்றும் இன்பம் நிலைத்திட அருளும் அற்புத திருப்பதிகம் தான். 'அயில் ஆரும் திருப்பதிகம்' இப்பதிகத்தினை பாடவல்லார்க்கு இல்லை பாவமே என்றார்.

அயில் ஆரும் அம்பு அதனால் புரம்மூன்று எய்து
குயில் ஆரும் மென்மொழியாள் ஒரு கூறாகி
மயில் ஆரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றி நின்றார்க்கு இல்லை பாவமே. 1

விதியானை விண்ணவர்தாம் தொழுது ஏத்திய
நெதியானை நீள்சடைமேல் நிகழ்வித்த வான்
மதியானை வண்பொழில் சூழ்ந்த மணஞ்சேரிப்
பதியானைப் பாடவல்லார் வினை பாறுமே. 2

எய்ப்புஆனார்க்கு இன்புஉறு தேன் அளித்து ஊறிய
இப்பால்ஆய் எனையும் ஆள உரியானை
வைப்பு ஆன மாடங்கள் சூழ்ந்த மணஞ்சேரி
மெய்ப்பானை மேவி நின்றார் வினை வீடுமே. 3

Koviloor Digital Library

விடையானை மேல்உலகுஏழும் இப்பார் எலாம்
உடையானை ஊழிதோறுஊழி உளதாய
படையானைப் பண்இசை பாடு மணஞ்சேரி
அடைவானை அடைய வல்லார்க்கு இல்லை அல்லலே. 4

எறி ஆர் பூங்கொள்றையினோடும் இள மத்தம்
வெறி ஆரும் செஞ்சடை ஆர மிலைத்தானை
மறி ஆரும் கை உடையானை மணஞ்சேரிச்
செறிவானைச் செப்ப வல்லார்க்கு இடர் சேராவே. 5

மொழியானை முன் ஒரு நால்மறை ஆறுஅங்கம்
பழியாமைப் பண்இசை ஆன பகர்வானை
வழியானை வானவர் ஏத்தும் மணஞ்சேரி
இழியாமை ஏத்த வல்லார்க்கு எய்தும் இன்பமே. 6

எண்ணானை எண் அமர் சீர் இமையோர்கட்குக்
கண்ணானைக் கண் ஒரு மூன்றும் உடையானை
மண்ணானை மா வயல் சூழ்ந்த மணஞ்சேரிப்
பெண்ணானைப் பேச நின்றார் பெரியோர்களே. 7

எடுத்தானை எழில் முடிஎட்டும் இரண்டும் தோள்
கெடுத்தானைக் கேடு இலாச் செம்மை உடையானை
மடுத்து ஆர வண்டு இசை பாடும் மணஞ்சேரி
பிடித்து ஆரப் பேண வல்லார் பெரியோர்களே. 8

சொல்லானைத் தோற்றம் கண்டானும் நெடுமாலும்
கல்லானைக் கற்றன சொல்லித் தொழுது ஓங்க
வல்லார் நல் மா தவர் ஏத்தும் மணஞ்சேரி
எல்லாமார் எம்பெருமான் கழல் ஏத்துமே. 9

Koviloor Digital Library

சற்றேயும் தாம் அறிவில் சமண் சாக்கியர்
சொல் தேயும் வண்ணம்ஓர் செம்மை உடையானை
வற்றாத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி
பற்றாக வாழ்பவர்மேல் வினை பற்றாவே. 10

கண் ஆரும் காழியர்கோன் கருத்து ஆர்வித்த
தண் ஆர் சீர் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
மண் ஆரும் மா வயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண் ஆரப் பாடவல்லார்க்கு இல்லை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

11. திருமருகல்

திருமுறை : 2/18 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : மாணிக்கவண்ணர் இறைவி: வண்டுவார் குழலியம்மை

நாக தோஷத்தால் திருமணம் தள்ளிப்போவதை தடுக்கவும், விரைவில் திருமணம் நடைபெறவும் ஓத வேண்டிய பதிகம்.

திருஞான சம்பந்தப் பெருமான் திருமருகல் என்னும் தலத்தில் இரவில் தங்கியிருந்தார். அப்போது, ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது. சம்பந்தப் பெருமான் அப்பெண்ணிடம் காரணம் வினவினார். அப்பெண்ணும் தான் மணக்கவிருந்த மணமகன் பாம்பு தீண்டி இறந்து விட்டதாகக் கூறி அழுதாள். சம்பந்தப் பெருமானும் அப்பெண்ணின் மனத்துயரை மாற்றும் வண்ணம், இத்திருப்பதிகத்தைப் பாடினார். திருப்பதிகம் பாடி முடித்ததும், அம்மணமகன் தூங்கி எழுபவன் போல, உயிர்பெற்று எழுந்தான். சம்பந்தப்பெருமான் அவ்விருவருக்கும் திருமணம் செய்வித்து ஆசி வழங்கினார். இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்த வந்தால், நாகதோஷம் உள்ளிட்ட பல காரணங்களால் தடைபடும் திருமணம், தடைகள் நீங்கி விரைவில் இனிதே நடந்தேறும் என்பது திண்ணம்.

Koviloor Digital Library

சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடை ஆர் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள் மெலிவே. 1

சிந்தாய் எனுமால் சிவனே எனுமால்
முந்தாய் எனுமால் முதல்வா எனுமால்
கொந்து ஆர் குவளை குலவும் மருகல்
ஏந்தாய் தகுமோ இவள் ஏசறவே. 2

அறையார் கழலும் அழல்வாய் அரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வாய் இவளை
இறையார் வளைகொண்டு எழில் வவ்வினையே. 3

ஒலிநீர் சடையில் கரந்தாய் உலகம்
பலி நீ திரிவாய் பழியில் புகழாய்
மலி நீர் மருகல் மகிழ்வாய் இவளை
மெலி நீர்மையள் ஆக்கவும் வேண்டினையே. 4

துணி நீலவண்ணம் முகில் தோன்றியன்ன
மணி நீலகண்டம் உடையாய் மருகல்
கணி நீலவண்டு ஆர் குழலாள் இவள்தன்
அணி நீலஒண்கண் அயர்வு ஆக்கினையே. 5

பலரும் பரவப்படுவாய் சடைமேல்
மலரும் பிறை ஒன்று உடையாய் மருகல்
புலரும்தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள்இவளே. 6

Koviloor Digital Library

வழுவாள் பெருமான்கழல் வாழ்க எனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே. 7

இலங்கைக்கு இறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்கல் விரல் ஊன்றலும் தோன்றலனாய்
வலம்கொள் மதில் சூழ் மருகல் பெருமான்
அலங்கல் இவளை அலர் ஆக்கினையே. 8

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியாதது ஓர் தீத்திரள் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
அரியாள்இவளை அயர்வு ஆக்கினையே. 9

அறிவுஇல் சமணும் அலர்சாக்கியரும்
நெறிஅல்லன செய்தனர் நின்று உழல்வார்
மறி ஏந்து கையாய் மருகல் பெருமான்
நெறி ஆர் குழலி நிறை நீக்கினையே. 10

வயஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர் ஞானம் உணர்ந்து அடிஉள்குதலால்
இயல் ஞானசம்பந்தன பாடல்வல்லார்
வியன்ஞாலம் எல்லாம் விளங்கும் புகழே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

12. திருக்கருப்பறியலூர்

திருமுறை : 2/31 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

இறைவர் : குற்றம்பொறுத்தநாதேஸ்வரர் இறைவி: கோல்வளைஅம்மை

கல்வியில் சிறந்து விளங்கவும், அதில் முதல் இடம் பெறவும் ஓத வேண்டிய பதிகம்.

திருஞான சம்பந்தப் பெருமான் திருக்கருப்பறியலூர் இறைவனின் குற்றம் பொறுத்த தன்மையினையும், ஞானத்தையும் போற்றிப் பாடிய திருப்பதிகம் இது. இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்தால் கல்வி–கேள்வி சிறக்கும் என்பது திண்ணம்.

சுற்றமொடு பற்றுஅவை துயக்கு அற அறுத்துக்
குற்றம் இல் குணங்களொடு கூடும் அடியார்கள்
மற்று அவரை வானவர்தம் வான் உலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறியலூரே. 1

வண்டு அணைசெய் கொன்றைஅது வார்சடைகள் மேலே
கொண்டு அணைசெய் கோலம்அது கோள் அரவினோடும்
விண்டு அணைசெய் மும்மதிலும் வீழ்தர ஓர் அம்பால்
கண்டவன் இருப்பது கருப்பறியலூரே. 2

வேதமொடு வேதியர்கள் வேள்வி முதல் ஆகப்
போதினொடு போது மலர் கொண்டு புனைகின்ற
நாதன் என நள்ளிருள்முன் ஆடு குழை தாழும்
காதவன் இருப்பது கருப்பறியலூரே. 3

மடம் படு மலைக்கு இறைவன் மங்கை ஒருபங்கன்
உடம்பினை விடக் கருதி நின்ற மறையோனைத்
தொடர்ந்து அணவு காலன் உயிர் கால ஒரு காலால்
கடந்தவன் இருப்பது கருப்பறியலூரே. 4

Koviloor Digital Library

ஒருத்தி உமையோடும் ஒரு பாகம் அது ஆய
நிருத்தன் அவன் நீதி அவன் நித்தன் நெறியாய
விருத்தன் அவன் வேதம் என அங்கம்அவை ஓதும்
கருத்தவன் இருப்பது கருப்பறியலூரே. 5

விண்ணவர்கள் வெற்புஅரசு பெற்ற மகள் மெய்த்தேன்
பண் அமரும் மென்மொழியினாளை அணைவிப்பான்
எண்ணி வரு காமன் உடல் வேவ எரி காலும்
கண்ணவன் இருப்பது கருப்பறியலூரே. 6

ஆதி அடியைப் பணிய அப்பொடு மலர்ச்சேர்
சோதிஒளி நல் புகை வளர் குவடு புக்குத்
தீது செய வந்து அணையும் அந்தகன் அரங்கக்
காதினன் இருப்பது கருப்பறியலூரே. 7

வாய்ந்த புகழ் விண்ணவரும் மண்ணவரும் அஞ்சப்
பாய்ந்து அமர் செயும் தொழில் இலங்கைநகர் வேந்தற்கு
ஏய்ந்த புயம் அத்தனையும் இற்று விழ மேல்நாள்
காய்ந்தவன் இருப்பது கருப்பறியலூரே. 8

பரந்தது நிரந்து வரு பாய் திரைய கங்கை
கரந்து ஓர் சடைமேல் மிசை உகந்து அவளை வைத்து
நிரந்தரம் நிரந்து இருவர் நேடி அறியாமல்
கரந்தவன் இருப்பது கருப்பறியலூரே. 9

அற்றம் மறையா அமணர் ஆதமிலி புத்தர்
சொற்றம் அறியாதவர்கள் சொன்ன சொலை விட்டுக்
குற்றம் அறியாத பெருமான் கொகுடிக் கோயில்
கற்றென இருப்பது கருப்பறியலூரே. 10

Koviloor Digital Library

நலம் தரு புனல் புகலி ஞானசம்பந்தன்
கலந்தவர் கருப்பறியல் மேய கடவு(ள்)ளைப்
பலம் தரு தமிழ்க்கிளவி பத்தும்இவை கற்று
வலம் தருமவர்க்கு வினை வாடல் எளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

13 . திருமயிலாப்பூர்

திருமுறை : 2/47 பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

இறைவர் : கபாலீசுவலர் இறைவி : கற்பகவல்லி

தனது மகளை திருஞானசம்பந்தருக்கு மணம் முடித்து கொடுக்க வேண்டும் என்னு சிறுவயது முதலே தனது மகள் பூம்பாவையிடம் ஆசையோடு வளர்த்து வந்தார். இடையில் ஒரு நாள் நோய்வாய்ப்பட்டு பூம்பாவை இறந்திட அப்பேதம் மனம் மாறாத அவரது தந்தை மகளின் அஸ்தியை பானையில் கட்டி ஞானசம்பந்தர் வருகைக்காக காத்திருக்கிறார். ஞானசம்பந்தர் வந்தவுடன் தன் எண்ணத்தை சொல்லி அழுகிறார். ஞானசம்பந்தர் அஸ்தியை பார்த்து பாட கடைசியில் பூம்பாவை உயிர்பிக்கிறாள். தொழில் நிரந்தரம் பெற, வளம் பெற ஓத வேண்டிய பதிகம்.

மட்டிட்ட புன்னைஅம்கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். 1

மைப் பயந்த ஒண்கண் மடநல்லார் மா மயிலைக்
கைப் பயந்த நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஐப்பசி ஓணவிழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய். 2

Koviloor Digital Library

வளைக்கை மடநல்லார் மா மயிலை வண் மறுகில்
துளக்கு இல் கபாலீச்சரத்தான் தொல்கார்த்திகைநாள்
தளத்து ஏந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய். 3

ஊர் திரை வேலை உலாவும் உயர் மயிலைக்
கூர்தரு வேல் வல்லார் கொற்றம் கொள் சேரிதனில்
கார் தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆர்திரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய். 4

மைப் பூசும் ஒண்கண் மடநல்லார் மா மயிலைக்
கைப் பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப் பூசும் ஒண்பு புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப் பூசம் காணாதே போதியோ பூம்பாவாய். 5

மடல் ஆர்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடல்ஆட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
அடல் ஆன்ஏறு ஊரும் அடிகள் அடி பரவி
நடம் ஆடல் காணாதே போதியோ பூம்பாவாய். 6

மலி விழா வீதி மடநல்லார் மா மயிலைக்
கலி விழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
பலி விழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள்
ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய். 7

தண் ஆர் அரக்கன் தோள் சாய்த்து உகந்த தாளினான்
கண் ஆர் மயிலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
பண் ஆர் பதிணெண்கணங்கள்தம் அட்டமிநாள்
கண் ஆரக் காணாதே போதியோ பூம்பாவாய். 8

Koviloor Digital Library

நல் தாமரைமலர்மேல் நான்முகனும் நாரணனும்
முற்றாங்கு உணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம் அமர்ந்தான்
பொன் தாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய். 9

உரிஞ்சு ஆய வாழ்க்கை அமண் உடையைப் போர்க்கும்
இருஞ் சாக்கியர்கள் எடுத்து உரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம் அமர்ந்தான்
பெருஞ் சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய். 10

கான் அமர் சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
தேன் அமர் பூம்பாவைப் பாட்டுஆகச் செந்தமிழான்
ஞானசம்பந்தன் நலம் புகழ்ந்த பத்தும் வல்லார்
வான சம்பந்தத்தவரோடும் வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

14. திருவெண்காடு

திருமுறை 2/48 இராகம் : நாதநாமக்கிரியா பண் : சீகாமரம்
இறைவர் : சுவேதாரண்யேசுவரர் இறைவி : பிரம்மவித்யாநாயகி

நல்ல மக்கட் செல்வம் பெறவும், கல்வி ஞானமும், பட்டி மன்றம் கருத்தரங்கு மற்றும் எழுத்தாற்றலில் சிறப்புற ஓத வேண்டிய பதிகம்.

திருஞான சம்பந்தப் பெருமான் திருவெண்காடு தலத்தில் இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார். தென்னார்க்காடு மாவட்டத்தில் வசித்த அச்சுதகாளப்பர் என்பவர் நீண்ட நாட்களாக குழந்தைச் செல்வமின்றி வருந்தினார். அவரது குருவானவர் இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வரும்படி கூறினார்.

Koviloor Digital Library

அதன்படி பாராயணம் செய்ய, அச்சுதகாளப்பருக்கு ஆண்மகவு பிறந்தது. அக்குழந்தையே பின்னாளில் சைவ சமய சந்தான ஆசாரியார்களில் ஒருவராகச் திகழ்ந்த மெய்கண்டதேவர் ஆவார்.

இத்திருப்பதிகத்தைப் பாரயாணம் செய்து வந்தால், நல்லறிவுள்ள குழந்தைச் செல்வம் கிட்டும். எழுத்தாற்றலும், சொல்லாற்றலும் வாய்க்கும் என்பது திண்ணம்.

கண்காட்டும் நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே. 1

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே. 2

மண்ணொடுநீர் அனல்காலோடு ஆகாயம் மதிஇரவி
எண்ணில்வரும் இயமானன் இகபரமும் எண்திசையும்
பெண்ணினொடுஆண் பெருமையொடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபட வெண்காடு இடமா விரும்பினனே. 3

விடமுண்ட மிடற்றுஅண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகுஎன்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்தம் நகைக்காட்டும் காட்சியதே. 4

வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்தன்
மேல்அடர் வெங்காலன்உயிர் விண்டபினை நமன்தூதர்
ஆலமிடற்றான் அடியார் என்றுஅடர அஞ்சுவரே. 5

Koviloor Digital Library

தண்மதியும் வெய்அரவும் தாங்கினான் சடையின்உடன்
ஒண்மதிய நுதல்உமையோர் கூறு உகந்தான் உறைகோயில்
பண்மொழியால் அவன்நாமம் பலஓதப் பசும்கிள்ளை
வெண்முகில்சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே. 6

சக்கரம்மாற்கு ஈந்தானும் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமேல் அசைத்தானும் அடைந்த அயிராவதம்பணிய
மிக்கதனுக்கு அருள்சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம் நன்கு உடையானும் முக்கண்உடை இறைவனே. 7

பண்மொய்த்த இன்மொழியாள் பயம்எய்த மலையெடுத்த
உன்மத்தன் உரம்நெரித்து அன்று அருள்செய்தான் உறைகோயில்
கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடல்முழங்க
விண்மொய்த்த பொழிவரிவண்டு இசைமுரலும் வெண்காடே. 8

கள்ளார் செங்கமலத்தான் கடல்கிடந்தான் என இவர்கள்
ஒள் ஆண்மை கொளற்கு ஓடி உயர்ந்து ஆழ்ந்தும் உணர்வுஅரியான்
வெள்ளானை தவம்செய்யும் மேதகு வெண்காட்டான் என்று
உள் ஆடி உருகாதார் உணர்வு உடைமை உணரோமே. 9

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டுமொழி பொருள்என்னும்
பேதையர்கள் அவர்பிரிமின் அறிவுடையீர் இதுகேண்மின்
வேதியர்கள் விரும்பியசீர் வியன்திருவெண்காட்டான் என்று
ஓதியவர் யாதும்ஒரு தீதிலர்என்று உணருமினே. 10

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் தமிழ்ஞானசம்பந்தன்
விண்பொழி வெண்பிறைச்சென்னி விகிர்தன்உறை வெண்காட்டைப்
பண்பொலி செந்தமிழ் மாலை பாடியபத்து இவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர் போய் வான்பொலியப் புகுவாரே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

15. திருஆலவாய்

திருமுறை : 2/66 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு

இறைவன் : சொக்கநாதர் இறைவி: மீனாட்சியம்மை

வெப்பத்தால் உண்டாகும் அம்மை, சுரம் மற்றும் அனைத்து நோய்களிலிருந்து மீள ஓத வேண்டிய பதிகம்.

ஒருமுறை திருஞான சம்பந்தர் மதுரையில் ஓர் மடத்தில் தங்கியிருந்தபொழுது அம்மடத்திற்கு சமணர்கள் தீ வைத்தனர். அத்தீயை சம்பந்தர் "பையவே சென்று பாண்டியற்கு ஆகுக" என்று ஏவினார். பாண்டிய மன்னன் தீராத வெப்ப நோயால் வருந்திய போது, சமணர்களால் தீர்க்க முடியாததை சம்பந்தர் இத்திருப்பதிகம் பாடி திருநீற்றைப் பாண்டியனுக்கு அளித்து நோயை நீக்கினார். இதிருநீற்றை உடம்பில் அணியும்போது இப்பதிகத்தை ஓதினால் அனைத்து நோய்களும், பயம், கெட்ட கனவுகளும் நீங்கி நற்பயன் பெறுவர் என்பது திண்ணம்.

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர்வாய் உமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே 1

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப்புனல் வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே 2

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே 3

Koviloor Digital Library

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணம் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணம் தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே 4

பூச இனியது நீறு புண்ணியம் ஆவது நீறு
பேச இனியது நீறு பெருந் தவத்தோர்களுக்கு எல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம்அது ஆவது நீறு
தேசம் புகழ்வது நீறு திரு ஆலவாயான் திருநீறே 5

அருத்தமதாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம் அது ஆவது நீறு புண்ணியர் பூசும் வெண்நீறு
திருத் தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே 6

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியம் ஆவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம்அது ஆவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவணம் ஆவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு தத்துவம் ஆவது நீறு
அரா அணங்கும் திருமேனி ஆலவாயான் திருநீறே 8

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேல் உறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பு இடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலம்அது உண்ட மிடற்று எம் ஆலவாயான் திருநீறே 9

Koviloor Digital Library

குண்டிகைக் கையர்களொடு சாக்கியர் கூட்டமும்கூடக்
கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்திசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே 10

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே 11

திருச்சிற்றம்பலம்

16. திருமறைக்காடு

திருமுறை : 2/85 பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோசு

நவகிரக சகல தோஷங்களிலிருந்தும் ஆயுள் பலமும் பெறவும் சகல கிஹக பீடைகளில் இருந்து விடுபட ஓத வேண்டிய பதிகம்.

இத்திருப்பதிகம் சம்பந்தப் பெருமானால் பாடப்பெற்றது. திருமறைக்காடு என்னும் வேதாரண்யத்திற்கு திருநாவுக்கரசரும், சம்பந்தரும் வந்து சேர்ந்தனர். அங்குள்ள வேதவனப் பெருமான் திருக்கோயிலின் பிரதான வாயில் பல ஆண்டுகளாக மூடிக் கிடந்தது. பக்தர்கள் மாற்று வாயில் வழியாகவே கோயிலுக்குள் சென்று வந்தனர்.

நாவுக்கரசரும், சம்பந்தரும் பதிகம் பாடி கோயிலின் வாயிலைத் திறந்து மூடினர். அன்றிரவு அவ்விருவரும் திருமறைக்காட்டில் தங்கியிருந்தபோது, பாண்டிய நாட்டின் அரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் சம்பந்தப் பெருமானை பாண்டி நாட்டிற்கு அழைத்து வரும்படிக் கூறியதாக சம்பந்தப் பெருமானுக்கு அழைப்பு வந்தது.

Koviloor Digital Library

பாண்டிய மன்னன் சமண மதத்தைத் தழுவியிருந்தான். சம்பந்தப் பெருமானை மதுரைக்கு வரவழைத்து, சைவத்தை நிலைநாட்டி, மன்னனை சைவ சமயத்தைத் தழுவச் செய்ய வேண்டும் என்றே அவரை மதுரைக்கு அழைத்தனர்.

சம்பந்தப் பெருமானும் மதுரைக்குப் புறப்பட்டார். அவ்வேளையில் திருநாவுக்கரசர் பெருமான் சம்பந்தரிடம், "இன்று நாளும் கோளும் சரியில்லை" என்று எச்சரித்தார். ஆனால் சம்பந்தப் பெருமானோ, "நாளும் கோளும் அடியார்க்கு ஏது?" என்று கூறி, இத்திருப்பதிகத்தைப் பாடியபின் மதுரைக்குச் சென்றார். அங்கு சமணர்களுடன் அனல் வாதம், புனல் வாதம் போன்றவை புரிந்து, மன்னன் கூன் பாண்டியனின் கூனை நிமிர்த்தி, சைவ சமயத்தை நிலைநாட்டினார்.

எனவே இத்திருப்பதிகத்தைத் பாராயணம் செய்தால், நவக்கிரகத்தினால் ஏற்படும் தீய பலன்கள், கெட்ட சகுனங்கள் நீங்கி நன்மைகள் நடக்கும் என்பது திண்ணம். இது ஓர் அற்புதப் பதிகமாகும்.

வேய் உறு தோளி பங்கன் விடம் உண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசு அறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்புஇரண்டும் உடனே
ஆசு அறும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 1

Koviloor Digital Library

என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பு இலங்க
எருது ஏறி ஏழைஉடனே
பொன் பொதி மத்தமாலை புனல் சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டோடு ஆறும்
உடன்ஆய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 2

உரு வளர் பவளமேனி ஒளி நீறு அணிந்து
உமையோடும் வெள்ளைவிடைமேல்
முருகு அலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைஅதுஊர்தி செயமாது பூமி
திசைதெய்வம் ஆனபலவும்
அரு நெதி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறை ஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
கொதிஉறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 4

Koviloor Digital Library

நஞ்சு அணி கண்டன் எந்தை மடவாள்தனோடும்
விடை ஏறும் நங்கள் பரமன்
துஞ்சு இருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்தஅதனால்
வெஞ்சின அவுணரோடும் உரும்இடியும் மின்னும்
மிகையான பூதம்அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 5

வாள்வரி அதள்அது ஆடை வரி கோவணத்தர்
மடவாள்தனோடும் உடன்ஆய்
நாள்மலர் வன்னி கொன்றை நதி சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
கோள் அரி உழுவையோடு கொலை யானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆள் அரி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 6

செப்பு இளமுலை நல் மங்கை ஒருபாகம்ஆக
விடைஏறு செல்வன் அடைவு ஆர்
ஒப்பு இளமதியும் அப்பும் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகை ஆன பித்தும்
வினை ஆன வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 7

Koviloor Digital Library

வேள்பட விழிசெய்து அன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றைமலர்சூடி வந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ் கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 8

பலபல வேடம் ஆகும் பரன் நாரிபாகன்
பசு ஏறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கும் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசையோனும் மாலும் மறையோடு தேவர்
வரு காலமான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 9

கொத்து அலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணம்ஆய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 10

Koviloor Digital Library

தேன் அமர் பொழில் கொள் ஆலை விளை செந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதிஆய பிரமாபுரத்து
மறைஞான ஞானமுனிவன்
தான் உறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆன சொல்மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசு ஆள்வர் ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

17. திரு ஆவடுதுறை

திருமுறை : 3/4 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்
இறைவன் : மாசிலாமணீஸ்வரர் இறைவி: ஒப்பிலாமுலை அம்மை

பொருளாதார நிலை சீர்பெறுவதற்கும், வறுமை நீங்கி வளமுடன் வாழ ஓத வேண்டிய பதிகம்.

ஒருமுறை திருஞான சம்பந்தப்பெருமானின் தந்தை யாருக்கு யாகம் செய்ய பொருள் தேவைப்பட்டது. அப்போது சம்பந்தப் பெருமான், திருவாவடுதுறை உறைந்தருளும் எம்பெருமானின் அடித்தலங்களே அந்தமில் பொருள் என்று எண்ணி இத்திருப்பதிகத்தைப் பாடினார். எம்பெருமானும் ஆயிரம் பொற்காசுகள் அடங்கிய பொற்கிழியொன்றை பீடத்திலே வைத்து அருளினார்.

அன்பர்கள் இத்திருப்பதிகத்தை அன்புடனும், நம்பிக்கையுடனும் பாராயணம் செய்து வந்தால் வறுமை அகன்று வளம் பெறுவர் என்பது திண்ணம்.

Koviloor Digital Library

இடரினும் தளரினும் எனதுஉறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதுஎழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்அருள் ஆவடுதுறை அரனே. 1

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உன கழல் விடுவேன் அல்லேன்
தாழ் இளந் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழ்இளமதி வைத்த புண்ணியனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 2

நனவினும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல் விரிநறுங்கொன்றைப்போது அணிந்த
கனல் எரி அனல் புல்கு கையவனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 3

தும்மலோடு அருந்துயர் தோன்றிடினும்
அம் மலர்அடிஅலால் அரற்றாது என் நாக்
கைம் மல்கு வரிசிலைக் கணை ஒன்றினால்
மும்மதில் எரி எழ முனிந்தவனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 4

Koviloor Digital Library

கையது வீழினும் கழிவு உறினும்
செய் கழல் அடிஅலால் சிந்தைசெய்யேன்
கொய் அணி நறுமலர் குலாய சென்னி
மை அணி மிடறு உடை மறையவனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 5

வெந்துயர் தோன்றி ஓர் வெருஉறினும்
எந்தாய் உன் அடிஅலால் ஏத்தாது என் நா
ஐந்தலைஅரவுகொண்டு அரைக்கு அசைத்த
சந்த வெண்பொடி அணி சங்கரனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 6

வெப்பொடு விரவி ஓர் வினை வரினும்
அப்பா உன் அடிஅலால் அரற்றாது என் நா
ஒப்பு உடை ஒருவனை உருவு அழிய
அப்படி அழல் எழ விழித்தவனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 7

பேர் இடர் பெருகி ஓர் பிணி வரினும்
சீர் உடைக் கழல்அலால் சிந்தைசெய்யேன்
ஏர் உடை மணி முடி இராவணனை
ஆர் இடர் பட வரை அடர்த்தவனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 8

Koviloor Digital Library

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடிஅலால் உரையாது என் நா
கண்ணனும் கடி கமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்புஅரிது ஆயவனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 9

பித்தொடு மயங்கி ஓர் பிணி வரினும்
அத்தா உன் அடிஅலால் அரற்றாது என் நாப்
புத்தரும் சமணரும் புறன்உரைக்கப்
பத்தர்கட்கு அருள்செய்து பயின்றவனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 10

அலை புனல் ஆவடுதுறை அமர்ந்த
இலை நுனை வேல்படை எம் இறையை
நலம் மிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலை உடை அருந்தமிழ்மாலை வல்லார்
வினைஆயின நீங்கிப்போய் விண்ணவர் வியன்உலகம்
நிலையாக முன் ஏறுவர் நிலம்மிசை நிலை இலரே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

18. சீர்காழி

திருமுறை : 3/22 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்

வாழ்நாள் முழுவதும் எந்தவித குறையும் இன்றி வாழ்வதற்கும் இரத்த அழுத்த நோய் திரவும்,சிவபுண்ணியம் பெறவும், தீவினைகள் நீங்கவும் ஓத வேண்டிய பதிகம்

திருஞான சம்பந்தப்பெருமானுக்கு உபநயனம் செய்யும் பருவம் வந்தபோது, வேதியர்கள் உபநயனச் சடங்ககளை நடத்தினர். வேதங்களின் உயர்ந்த பொருளை இறையருளால் உணர்ந்த சம்பந்தப் பெருமான், அங்கு வந்த வேதியர்களின் ஐயங்களைப் போக்கி, திருவைந்தெழுத்தின் பெருமையை விளக்கி, பஞ்சாக்கரத் திருப்பதிகத்தைப் பாடினார். இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்தால், இரத்த அழுத்த நோய் குணமாகும். மனக்கவலைகள் நீங்கும்

துஞ்சலும் துஞ்சல் இலாதபோழ்தினும்
நெஞ்சுஅகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்சுஎழுத்துமே. 1

மந்திரம் நால்மறை ஆகி வானவர்
சிந்தையுள் நின்று அவர்தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்சுஎழுத்துமே. 2

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன் புலத்து
ஏனை வழி திறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்சுஎழுத்துமே. 3

Koviloor Digital Library

நல்லவர் தீயவர் எனாது நச்சினர்
செல்லல் கெட சிவமுத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போம் இடத்து
அல்லல் கெடுப்பன அஞ்சுஎழுத்துமே. 4

கொங்கு அலர் மன்மதன் வாளி ஐந்து அகத்து
அங்கு உள பூதமும் அஞ்ச ஐம் பொழில்
தங்கு அரவின் படம் அஞ்சு தம் உடை
அம் கையில் ஐவிரல் அஞ்சுஎழுத்துமே. 5

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினை அடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்சுஎழுத்துமே. 6

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்சுஎழுத்துமே. 7

வண்டு அமர் ஒதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்தபின் அவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்சுஎழுத்துமே. 8

கார்வணன் நான்முகன் காணுதற்கு ஒணாச்
சீர் வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர் வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர் வணம் ஆவன அஞ்சுஎழுத்துமே. 9

Koviloor Digital Library

புத்தர் சமண் கழுக் கையர் பொய் கொளாச்
சித்தத்தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறு அணிவார் வினைப்பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்சுஎழுத்துமே. 10

நற்றமிழ் ஞானசம்பந்தன் நால்மறை
கற்றவன் காழியர்மன்னன் உன்னிய
அற்றம் இல் மாலைஈர் ஐந்தும் அஞ்சுஎழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே. 11

திருச்சிற்றம்பலம்

19. திருக்கழுமலம்

திருமுறை : 3/24 பண் : கொல்லி இராகம் : நவரோசு

இறைவர் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி

குடும்பத்தில் குழப்பங்கள் நீங்க, திருமணம். மணிவிழா போன்ற சுபநிகழ்ச்சிகளில் பரவி மன அமைதியுடன் வாழ ஓத வேண்டிய பதிகம்

திருஞான சம்பந்தப் பெருமான், மதுரையில் இத்திருப் பதிகத்தைப் பாடியருளினார். சம்பந்தப் பெருமான் மதுரையில் தங்கியிருந்தபோது, அவரது தந்தையார் 'சிவபாத இருதயர்' மதுரைக்கு வந்து சேர்ந்தார். தனது தந்தையைக் கண்ட சம்பந்தருக்கு தனது ஆன்ம தந்தையாக விளங்கும் சிவபெருமானதனின் எண்ணம் உண்டானது. அவ்வன்பின் மிகுதியால் இத்திருப்பதிகத்தைப் பாடினார்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவுஇலைக்
கண்ணின் நல்லஃது உறும் கழுமல வள நகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே. 1

Koviloor Digital Library

போதை ஆர் பொன் கிண்ணத்து அடிசில் பொல்லாது எனத்
தாதையார் முனிவுஉறத் தான் எனை ஆண்டவன்
காதை ஆர் குழையினன் கழுமல வள நகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே. 2

தொண்டு அணைசெய் தொழில் துயர் அறுத்து உய்யலாம்
வண்டு அணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண் துணை நெற்றியான் கழுமல வள நகர்
பெண் துணை ஆக ஓர் பெருந்தகை இருந்ததே. 3

அயர்வு உளோம் என்று நீ அசைவு ஒழி நெஞ்சமே
நியர் வளை முன்கையாள் நேரிழைஅவளொடும்
கயல் வயல் குதிகொளும் கழுமல வள நகர்
பெயர்பல துதிசெய பெருந்தகை இருந்ததே. 4

அடைவு இலோம் என்று நீ அயர்வு ஒழி நெஞ்சமே
விடை அமர் கொடியினான் விண்ணவர் தொழுது எழும்
கடை உயர் மாடம் ஆர் கழுமல வள நகர்
பெடைநடைஅவளொடும் பெருந்தகை இருந்ததே. 5

மற்று ஒரு பற்று இலை நெஞ்சமே மறைபல
கற்ற நல் வேதியர் கழுமல வள நகர்
சிற்றிடைப் பேர் அல்குல் திருந்திழைஅவளொடும்
பெற்று எனை ஆள்உடைப் பெருந்தகை இருந்ததே. 6

குறை வளைவது மொழி குறைவு ஒழி நெஞ்சமே
நிறை வளை முன்கையாள் நேரிழைஅவளொடும்
கறை வளர் பொழில் அணி கழுமல வள நகர்
பிறை வளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே. 7

Koviloor Digital Library

அரக்கனார் அரு வரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடு யாழ் பாடவே
கருக்கு வாள் அருள்செய்தான் கழுமல வள நகர்
பெருக்கும் நீரவளொடும் பெருந்தகை இருந்ததே. 8

நெடியவன் பிரமனும் நினைப்பு அரிதுஆய் அவர்
அடியொடு முடி அறியா அழல்உருவினன்
கடி கமழ் பொழில் அணி கழுமல வள நகர்
பிடிநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே. 9

தார் உறு தட்டு உடைச் சமணர் சாக்கியர்கள்தம்
ஆர் உறு சொல் களைந்து அடிஇணை அடைந்து உய்ம்மின்
கார் உறு பொழில் வளர் கழுமல வள நகர்
பேர்அறத்தாளொடும் பெருந்தகை இருந்ததே. 10

கருந் தடந் தேன் மல்கு கழுமல வள நகர்
பெருந்தடங்கொங்கையோடு இருந்த எம்பிரான்தனை
அருந்தமிழ் ஞானசம்பந்தன் செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய் விண்ணுலகு ஆள்வரே. 11

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

20. திருநல்லூர்ப் பெருமணம்

திருமுறை 3/49 இராகம் : பைரவி பண் : கௌசிகம்
இறைவர் : சிவலோகத்தியாகேசர் இறைவி : உமையம்மை

நாள்தோறும் உணவும், உறக்கமும் சீர் பெறவும் மறுப்பிறப்றையும், வீண் செலவுகளை தடுக்கவும் ஓத வேண்டிய பதிகம்.

பல தலங்களையும் தரிசித்த திருஞான சம்பந்தப் பெருமான் சீர்காழி வந்து சேர்ந்தார். அப்பொழுது பெரியோர்கள் விரும்பியபடி நம்பியாண்டார் நம்பியின் திருமகளைத் திருமணம் புரிந்தார். திருமணம் முடிந்ததும் நல்லூர்ப் பெருமணம் என்ற ஊரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் பாட, அக்கோயிலின் கர்ப்பக்கிரகத்தில் பெரும் ஜோதி எழும்பியது. அச்சமயத்தில் சம்பந்தப் பெரமான் இத்திருப்பதிகத்தைப் பாடினார். அங்கிருந்த அனைவருமே சிவஜோதியில் கலந்தனர். இத்திருப்பதிகமே சம்பந்தப் பெரமான் பாடிய இறுதிப் பதிகமாகும்.

இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்தால், மனக்கவலை நீங்கும். பிறவா நிலை கிட்டும்.

காதல் ஆகிக் கசிந்துகண்ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே 1

நம்புவார் அவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாள்மலர் வார்மது ஒப்பது
செம்பொனார் திலகம்உலகுக்கு எலாம்
நம்பன் நாமம் நமச்சிவாயவே 2

Koviloor Digital Library

நெக்கு உள்ஆர்வம் மிகப்பெருகிந் நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவராத் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சிவாயவே 3

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந்து ஓத வல்லார்தமை நண்ணினால்
நியமம்தான் நினைவார்க்கு இனியான்நெற்றி
நயனன் நாமம் நமச்சிவாயவே 4

கொல்வாரேனும் குணம்பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே 5

மந்தரம்மன பாவங்கள் மேவிய
பந்தனையவர் தாழும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே 6

நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய் வாயினர் ஆயின் உருத்திரர்
விரவியே புகுவித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலம்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலம்கொள் நாமம் நமச்சிவாயவே 8

Koviloor Digital Library

போதன் போதுஅன கண்ணணும் அண்ணல்தன்
பாதம் தான்முடி நேடிய பண்பராய்
யாதும் காண்பரிதாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே 9

கஞ்சி மண்டையர் கையில்உண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சு உண் கண்டன் நமச்சிவாயவே 10

நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன்சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எலாம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே 11

திருச்சிற்றம்பலம்

21. திருஆலவாய்

திருமுறை : 3/51 பண் : கௌசிகம் இராகம் : பைரவி

பாண்டிய மன்னன் நோய் நீக்க வந்த ஞானசம்பந்தன் எங்கே மன்னனின் நோய் தீர்த்து பெருமை பெற்றுவிடுவானோ இதனால் தங்களுக்கு உள்ள நற்பயன் கெட்டுவிடுமோ என்று எண்ணிய சமணர்கள் வேதத்தால் ஆன திருப்பிழம்பை உருவாக்கி ஞானசம்பந்தர் குடியிருக்கும் குடிசைக்கு அனுப்புகிறார்கள். இதை அறிந்தவராக அந்த பிரம்பை வாசலில் நிறுத்தி இப்பதிகத்தை பாடி மீண்டும் வந்த இடத்திற்கே அனுப்புகிறார். தன்னை சிறை வைக்க எண்ணியவர்களை சிறை வைக்கிறார்.

Koviloor Digital Library

செய்யனே திரு ஆலவாய் மேவிய
ஐயனே அஞ்சல் என்று அருள்செய் எனைப்
பொய்யராம் அமணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பாண்டியற்கு ஆகவே. 1

சித்தனே திரு ஆலவாய் மேவிய
அத்தனே அஞ்சல் என்று அருள்செய் எனை
எத்தராம் அமணர் கொளுவும் சுடர்
பத்தி மன் தென்னன் பாண்டியற்கு ஆகவே. 2

தக்கன் வேள்வி தகர்த்து அருள் ஆலவாய்ச்
சொக்கனே அஞ்சல் என்று அருள்செய் எனை
எக்கராம் அமணர் கொளுவும் சடர்
பக்கமே சென்று பாண்டியற்கு ஆகவே. 3

சிட்டனே திரு ஆலவாய் மேவிய
அட்டமூர்த்தியனே அஞ்சல் என்று அருள்
துட்டராம் அமணர் கொளுவும் சுடர்
பட்டி மன் தென்னன் பாண்டியற்கு ஆகவே. 4

நண்ணலார் புரம்மூன்று எரி ஆலவாய்
அண்ணலேஅஞ்சல் என்று அருள் செய் எனை
எண்ணிலா அமணர் கொளுவும் சுடர்
பண்ணியல் தமிழ்ப் பாண்டியற்கு ஆகவே. 5

தஞ்சம் என்று உன் சரண் புகுந்தேனையும்
அஞ்சல் என்று அருள் ஆலவாய் அண்ணலே
வஞ்சம் செய்து அமணர் கொளுவும் சுடர்
பஞ்சவன் தென்னன் பாண்டியற்கு ஆகவே. 6

Koviloor Digital Library

செங்கண் வெள்விடையாய் திரு ஆலவாய்
அங்கணா அஞ்சல் என்று அருள்செய் எனைக்
கங்குலார் அமண்கையர் இடும்கனல்
பங்கமில் தென்னன்பாண்டியற்கு ஆகவே. 7

தூர்த்தன் வீரம் தொலைத்து அருள் ஆலவாய்
ஆத்தனே அஞ்சல் என்று அருள்செய் எனை
ஏத்து இலா அமணர் கொளுவும் சுடர்
பார்த்திவன் தென்னன் பாண்டியற்கு ஆகவே. 8

தாவினான் அயன் தான் அறியாவகை
மேவினாய் திரு ஆலவாயாய் அருள்
தூவிலா அமணர் கொளுவும் சுடர்
பாவினான் தென்னன் பாண்டியற்கு ஆகவே. 9

எண்திசைக்கு எழில் ஆலவாய் மேவிய
அண்டனே அஞ்சல் என்று அருள்செய் எனைக்
குண்டராம் அமணர் கொளுவும் சுடர்
பண்டி மன் தென்னன் பாண்டியற்கு ஆகவே. 10

அப்பன் ஆலவாய் ஆதி அருளினால்
வெப்பம் தென்னவன்மேல் உற மேதினிக்கு
ஒப்ப ஞானசம்பந்தன் உரைபத்தும்
செப்ப வல்லவர் தீதுஇலாச் செல்வரே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

22 .திருமாகறல்

திருமுறை : 3/72 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி
இறைவர் : அடைக்கலம்காத்தநாதர் இறைவியார் : புவனநாயகி

எலும்பு முறிவு, வாதநோய்கள், படுகாயங்கள் குணமாகவும், முற்பிறவியில் செய்த தீவினைகள் விரைவில் நீங்கவும் பாராயணம் செய்ய வேண்டிய திருப்பதிகம்.

சம்பந்தப் பெருமாள்ன காஞ்சிபுரம் அருகிலுள்ள திருமாகறல் என்னும் பதியில் பாடிய திருப்பதிகம் இது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், 'தீவினைகள் தீருமுடனே', 'வினை அகலும் மிகவே' என சம்பந்தப் பெருமான் பாடியுள்ளார். ஆதலால், இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்தால், முற்பிறவியில் செய்த தீவினைகள் நீங்கி மேற்கண்ட நோய்கள் விரைவில் குணமாகும்.

விங்கு விளை கழனி மிகு கடைசியர்கள்
பாடல் விளையாடல் அரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடம் மலி
நீடு பொழில் மாகறல் உளான்
கொங்கு விரிகொன்றையொடு கங்கை வளர்
திங்கள் அணி செஞ்சடையினான்
செங்கண் விடை அண்ணல் அடி சேர்பவர்கள்
தீவினைகள் தீரும் உடனே. 1

கலையின் ஒலி மங்கையர்கள் பாடல் ஒலி
ஆடல் கவின் எய்தி அழகு ஆர்
மலையின் நிகர் மாடம் உயர்நீள்கொடிகள்
வீசும் மலி மாகறல் உளான்

Koviloor Digital Library

இலையின் மலி வேல் நுனைய சூலம் வலன்
ஏந்தி எரிபுன்சடை யினுள்
அலை கொள் புனல் ஏந்து பெருமான் அடியை
ஏத்த வினை அகலும் மிகவே. 2

காலையொடு துந்துபிகள் சங்கு குழல்
யாழ் முழவு காமருவு சீர்
மாலை வழிபாடு செய்து மாதவர்கள்
ஏத்தி மகிழ் மாகறல் உளான்
தோலை உடை பேணி அதன்மேல் ஓர் சுடர்
நாகம் அசையா அழகிதாப்
பாலை அன நீறு புனைவான் அடியை
ஏத்த வினை பறையும் உடனே. 3

இங்கு கதிர் முத்தினொடு பொன்மணிகள்
உந்தி எழில் மெய்யுள் உடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னு புனல்
ஆடி மகிழ் மாகறல் உளான்
கொங்குவளர் கொன்றை குளிர் திங்கள் அணி
செஞ்சடையினான் அடியையே
நுங்கள் வினை தீரமிக ஏத்தி வழிபாடு
நுகரா எழுமினே. 4

துஞ்சு நறுநீலம் இருள் நீங்க ஒளி
தோன்றும் மது வார் கழனிவாய்
மஞ்சு மலி பூம்பொழிலில் மயில்கள் நடம்
ஆடமலி மாகறல் உளான்

Koviloor Digital Library

வஞ்ச மதயானை உரிபோர்த்து மகிழ்
வான் ஓர்மழுவாளன் வளரும்
நஞ்சம் இருள் கண்டம் உடை நாதன்
அடியாரை நலியா வினைகளே. 5

மன்னும் மறையோர்களொடு பல்படிம
மாதவர்கள் கூடி உடனாய்
இன்ன வகையால் இனிது இறைஞ்சி இமையோரில்
எழு மாகறல் உளான்
மின்னை விரி புன்சடையின்மேல் மலர்கள்
கங்கையொடு திங்கள் எனவே
உன்னும் அவர் தொல்வினைகள் ஒல்கவுயர்
வான் உலகம் ஏறல் எளிதே. 6

வெய்யவினை நெறிகள் செலவந்து அணையும்
மேல்வினைகள் வீட்டல் உறுவீர்
மை கொள் விரி கானல் மது வார் கழனி
மாகறல் உளான் எழிலதார்
கையகரி கால்வரையின் மேலதுஉரி
தோல் உடைய மேனி அழகார்
ஐயன்அடி சேர்பவரை அஞ்சி அடையா
வினைகள் அகலும் மிகவே. 7

KOVILOOR MATH LIBRARY KOVILOOR A. No. 16579

Koviloor Digital Library

தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு
தோய்வன பொன்மாடம் மிசையே
மாசுபடு செய்கைமிக மாதவர்கள்
ஓதிமலி மாகறல் உளான்
பாசுபதம் விச்சைவரி நச்சு அரவு
கச்சை உடை பேணி அழகார்
பூசுபொடி ஈசன்என ஏத்த வினை
நிற்றல்இலபோகும் உடனே. 8

தூயவிரி தாமரைகள் நெய்தல் கழு
நீர்குவளை தோன்ற மது உண்
பாய வரிவண்டு பல பண்முரலும்
ஓசை பயில் மாகறல் உளான்
சாயவிரல் ஊன்றிய இராவணன்
தன்மை கெட நின்ற பெருமான்
ஆயபுகழ் ஏத்தும் அடியார்கள் வினை
ஆயினவும் அகல்வது எளிதே. 9

காலின்நல பைங்கழல்கள் நீள்முடியின்
மேல்உணர்வு காமுற வினார்
மாலும் மலரானும் அறியாமை எரியாகி
உயர் மாகறல் உளான்
நாலும் எரி தோலும் உரி மா மணிய
நாகமொடு கூடி உடனாய்
ஆலும் விடை ஊர்தி உடை அடிகள்
அடியாரை அடையா வினைகளே. 10

Koviloor Digital Library

கடைகொள் நெடுமாடம் மிக ஓங்கு கமழ்
வீதிமலி காழி அவர் கோன்
அடையும் வகையால் பரவி அரனை அடி
கூடு சம்பந்தன் உரையால்
மடைகொள் புனலோடு வயல் கூடு பொழில்
மாகறல் உளான் அடியையே
உடைய தமிழ் பத்தும் உணர்வார் அவர்கள்
தொல்வினைகள் ஒல்கும் உடனே. 11

திருச்சிற்றம்பலம்

23. திருஆலவாய்

திருமுறை : 3/108 பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம், பைரவி
இறைவர்: சொக்கநாதர் இறைவி : மீனாட்சியம்மை

கடன்தொல்லைகள் நீங்கி, மன நிம்மதியுடன் வாழவும், அடுத்த பெரிய னடன் வாங்காமல் இருக்கவும், போதிய பொருளாதாரத்துடன் வாழவும் எடுக்கின்ற வேலைகள் இனிதே நிறைவேற பாராயணம் செய்ய வேண்டிய பதிகம்.

திருஞானசம்பந்தப் பெருமான் மதுரையில் சமணர் களுடன் வாதிடச் செல்லுமுன், சொக்கநாதப் பெருமானைப் பாடிய திருப்பதிகம் இதுவாகும். இத்திருப்பதிகத்தை பாடிச் சென்ற சம்பந்தப் பெருமான். சமணர்களுடன் வாதில் வென்று, பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் தீர்த்து வென்றார்.

இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால் நாம் எடுக்கின்ற அனைத்து நற்காரியங்களும், தொடங்குகின்ற தொழில்களும் இனிதே நிறைவேறும் என்பது திண்ணம்.

Koviloor Digital Library

வேதவேள்வியை நிந்தனை செய்து உழல்
ஆதம்இல்லி அமணொடு தேரரை
வாதில் வென்றுஅழிக்கத் திருஉள்ளமே
பாதி மாதுஉடன்ஆய பரமனே
ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 1

வைதிகத்தின் வழி ஒழுகாத அக்
கைதவம் உடைக் கார்அமண்தேரரை
எய்தி வாதுசெய்யத் திருஉள்ளமே
மை திகழ்தரு மா மணிகண்டனே
ஞாலம் நின் புகழே மிக வேண்டும்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 2

மறை வழக்கம் இலாத மா பாவிகள்
பறி தலைக் கையர் பாய் உடுப்பார்களை
முறிய வாதுசெயத் திரு உள்ளமே
மறி உலாம் கையில் மா மழுவாளனே
ஞாலம் நின் புகழே மிக வேண்டும்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 3

அறுத்த அங்கம்ஆறு ஆயின நீர்மையைக்
கறுத்து வாழ் அமண்கையர்கள் தம்மொடும்
செறுத்து வாதுசெயத் திரு உள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே
ஞாலம் நின் புகழேமிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 4

Koviloor Digital Library

அந்தணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெயத் திரு உள்ளமே
வெந்த நீறது அணியும் விகிர்தனே
ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 5

வேட்டு வேள்வி செயும் பொருளை விளி
மூட்டு சிந்தை முருட்டு அமண்குண்டரை
ஓட்டி வாதுசெயத் திரு உள்ளமே
காட்டில் ஆனை உரித்த எம் கள்வனே
ஞாலம் நின் பகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 6

அழல்அது ஓம்பும் அருமறையோர் திறம்
விழல்அது என்னும் அருகர் திறத்திறம்
கழல வாதுசெயத் திரு உள்ளமே
தழல் இலங்கு திருஉருச் சைவனே
ஞாலம் நின் புகழேமிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 7

நீற்று மேனியர் ஆயினர்மேல் உற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி வாதுசெயத் திரு உள்ளமே
ஆற்ற வாள் அரக்கற்கும் அருளினாய்
ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 8

Koviloor Digital Library

நீல மேனி அமணர் திறத்து நின்
சீலம் வாதுசெயத் திரு உள்ளமே
மாலும் நான்முகனும் காண்பு அரியதோர்
கோலம் மேனிஅது ஆகிய குன்றமே
ஞாலம் நின் புகழேமிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 9

அன்று முப்புரம் செற்ற அழக நின்
துன்று பொன்கழல் பேணா அருகரைத்
தென்ற வாதுசெயத் திரு உள்ளமே
கன்று சாக்கியர் காணாத் தலைவனே
ஞாலம் நின் புகழேமிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 10

கூடல் ஆலவாய்க்கோனை விடைகொண்டு
வாடல் மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச் சம்பந்தன் மதித்த இப்
பாடல் வல்லவர் பாக்கியவாளரே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

24. திருஆலவாய்

திருமுறை : 3/120 பண் : புறநீர்மை இராகம் : பூபாளம்

திருமுறைக்காட்டில் இருந்து திருஞானசம்பந்த பெருமானார் சிவனடியாராகிய மங்கையர்க்கரசிக்கு முதலிடம் கொடுத்து, சொக்க நாதப் பெருமானின் திருவருளால் திருநீற்றுப் பெருமையையும், குலச்சிறை எனும் சிவனடியாரின் தன்மையையும் எடுத்துரைக்க வந்தவர் திருஆலவாய் எனும் மதுரையம்பதியின் தன்மையை எடுத்துயம்பிய அற்புத திருப்பதிகம்.

மங்கையர்க்கு அரசி வளவர்கோன் பாவை
வரி வளைக் கைம் மடமானி
பங்கயச்செல்வி பாண்டிமா தேவி
பணி செய்து நாள்தொறும் பரவப்
பொங்கு அழல்உருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அம் கயல்கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே. 1

வெற்றவே அடியார் அடிமிசை வீழும்
விருப்பினன் வெள்ளை நீறு அணியும்
கொற்றவன் தனக்கு மந்திரி ஆய
குலச்சிறை குலாவி நின்று ஏத்தும்
ஒற்றை வெள்விடையன் உம்பரார் தலைவன்
உலகினில் இயற்கையை ஒழித்திட்டு
அற்றவர்க்கு அற்ற சிவன் உறைகின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே. 2

Koviloor Digital Library

செந்துவர்வாயாள் சேல் அன கண்ணாள்
சிவன் திருநீற்றினை வளர்க்கும்
பந்து அணை விரலாள் பாண்டிமா தேவி
பணி செயப் பாரிடை நிலவும்
சந்தம் ஆர் தரளம் பாம்பு நீர் மத்தம்
தண் எருக்கம்மலர் வன்னி
அந்தி வான்மதி சேர் சடைமுடி அண்ணல்
ஆலவாய் ஆவதும் இதுவே. 3

கணங்களாய் வரினும் தமியராய் வரினும்
அடியவர் தங்களைக் கண்டால்
குணம்கொடு பணியும் குலச்சிறை குலாவும்
கோபுரம் சூழ்மணிக் கோயில்
மணம் கமழ் கொன்றை வாள்அரா மதியம்
வன்னி வண் கூவிள மாலை
அணங்கு வீற்றிருந்த சடைமுடி அண்ணல்
ஆலவாய் ஆவதும் இதுவே. 4

செய்யதாமரைமேல் அன்னமே அனைய
சேயிழை திருநுதல் செல்வி
பைஅரவுஅல்குல் பாண்டிமா தேவி
நாள்தொறும் பணிந்து இனிது ஏத்த
வெய்ய வேல் சூலம் பாசம் அங்குசம் மான்
விரி கதிர் மழுஉடன் தரித்த
ஐயனார் உமையோடு இன்புறுகின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே. 5

Koviloor Digital Library

நலம் இலர் ஆக நலம் அது உண்டாக
நாடு அவர் நாடு அறிகின்ற
குலம் இலர் ஆகக் குலம்அது உண்டாகத்
தவம் பணி குலச்சிறை பரவும்
கலை மலி கரத்தன் மூஇலைவேலன்
கரிஉரி மூடிய கண்டன்
அலை மலி புனல் சேர் சடைமுடி அண்ணல்
ஆலவாய் ஆவதும் இதுவே. 6

முத்தின்தாழ்வடமும் சந்தனக் குழம்பும்
நீறும் தன் மார்பினில் முயங்கப்
பத்தி ஆர்கின்ற பாண்டிமா தேவி
பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தம் ஆர் பளிங்கின் பெருமலை உடனே
சுடர் மரகதம் அடுத்தால் போல்
அத்தனார் உமையோடு இன்புறுகின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே. 7

நா அணங்கு இயல்பாம் அஞ்செழுத்து ஓதி
நல்லராய் நல்இயல்பு ஆகும்
கோவணம் பூதி சாதனம் கண்டால்
தொழுது எழு குலச்சிறை போற்ற
ஏ அணங்கு இயல்பு ஆம் இராவணன் திண்தோள்
இருபதும் நெரிதர ஊன்றி
ஆவணம் கொண்ட சடைமுடி அண்ணல்
ஆலவாய் ஆவதும் இதுவே. 8

Koviloor Digital Library

மண்எலாம் நிகழ மன்னனாய் மன்னும்
மணிமுடிச்சோழன் தன் மகளாம்
பண்ணின் நேர் மொழியாள் பாண்டிமாதேவி
பாங்கினால் பணி செய்து பரவ
விண்ணுளார் இருவர் கீழொடு மேலும்
அளப்பு அரிதுஆம் வகை நின்ற
அண்ணலார் உமையோடு இன்புறுகின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே. 9

தொண்டராய் உள்ளார் திசைதிசைதோறும்
தொழுது தன் குணத்தினைக் குலாவக்
கண்டு நாள்தோறும் இன்புறுகின்ற
குலச்சிறை கருதி நின்று ஏத்தக்
குண்டராய் உள்ளார் சாக்கியர் தங்கள்
குறியின் கண் நெறியிடைவாரா
அண்டநாயகன்தான் அமர்ந்து வீற்றிருந்த
ஆலவாய் ஆவதும் இதுவே. 10

பல்நலம் புணரும் பாண்டிமாதேவி
குலச்சிறை எனும் இவர் பணியும்
அந் நலம் பெறு சீர் ஆலவாய் ஈசன்
திருவடி ஆங்குஅவை போற்றிக்
கன்னல் அம் பெரிய காழியுள் ஞான
சம்பந்தன் செந்தமிழ்இவைகொண்டு
இன்நலம் பாட வல்லவர் இமையோர்
ஏத்த வீற்றிருப்பவர் இனிதே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

25. திருவதிகை வீரட்டம்

திருமுறை : 4 /1 ராகம் :நவரோசு பண் : கொல்லி
இறைவர்: வீரட்டேசுவரர் இறைவி : திரிபுரசுந்தரி

தீராத வயிற்றுவலி நீங்குவதற்கும் மற்றும் குடல் தொடர்பான அனைத்து நோயும், காமாலை நோய் தீர பாராயணம் செய்ய வேண்டிய பதிகம்.

சமணத்தைத் தழுவியிருந்த திருநாவுக்கரசர் பெருமான் சைவத்தைத் தழுவ வேண்டும் என்று அவரது தமக்கை திலகவதியார் சிவபெருமானை வேண்டினார். சிவபெருமான் திருவருளால் திருநாவுக்கரசருக்கு சூலைநோய் (வயிற்று வலி) கண்டது. நோயின் கடுமையால் வருந்திய திருநாவுக்கரசர், தம் தமக்கையிடம் சென்று கூற, இருவரும் திருவதிரகை கோயிலுக்குச் சென்றனர். அங்கு திருநாவுக்கரசர் இத்திருப்பதிகத்தைப் பாட அவரது சூலைநோய் நீங்கியது. திருநாவுக்கரசர் பாடிய முதல் திருப்பதிகம் இதுவே என்று கருதப்படுகிறது.

இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்தால், வயிற்று நோய்கள் அனைத்தும் குணமாகும் என்பது திண்ணம்.

கூற்று ஆயினவாறு விலக்ககிலீர்
கொடுமை பலசெய்தன நான்அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 1

Koviloor Digital Library

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்து அறியேன்
வஞ்சம் இது ஒப்பது கண்டு அறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சு ஆகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 2

பணிந்தாரன பாவங்கள் பாற்ற வல்லீர்
படுவெண்தலையில் பலி கொண்டு உழல்வீர்
துணிந்தே உமக்கு ஆட்செய்து வாழல் உற்றால்
சுடுகின்றது சூலை தவிர்த்து அருளீர்
பிணிந்தார் பொடி கொண்டு மெய் பூச வல்லீர்
பெற்றம் ஏற்று உகந்தீர் சுற்றும் வெண்தலை கொண்டு
அணிந்தீர் அடிகேள் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 3

முன்னம் அடியேன் அறியாமையினான்
முனிந்து என்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை அடியேன் உமக்கு ஆளும் பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்து அருளீர்
தன்னை அடைந்தார் வினை தீர்ப்பது அன்றோ
தலை ஆயவர் தம்கடன் ஆவது தான்
அன்னம் நடையார் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 4

Koviloor Digital Library

காத்து ஆள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரை நின்றவர் கண்டு கொள் என்று சொல்லி
நீத்து ஆய கயம் புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்று அறியேன்
வார்த்தை இது ஒப்பது கேட்டு அறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார் புனல் ஆர் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 5

சலம் பூவொடு தூபம் மறந்து அறியேன்
தமிழோடு இசைபாடல் மறந்து அறியேன்
நலம்தீங்கிலும் உன்னை மறந்து அறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்து அறியேன்
உலந்தார் தலையில் பலிகொண்டு உழல்வாய்
உடலுள் உறுசூலை தவிர்த்து அருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 6

உயர்ந்தேன் மனைவாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர் தலை காவல் இலாமையினால்
வயந்தே உமக்கு ஆட்செய்து வாழல்உற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்து அருளீர்
பயந்தே என்வயிற்றின் அகம்படியே
பறித்துப் புரட்டி அறுத்து ஈர்த்திட நான்
அயர்ந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 7

Koviloor Digital Library

வலித்தேன் மனைவாழ்க்கை மகிழ்ந்து அடியேன்
வஞ்சம் மனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர் துணை யாரும் இல்லைச்
சங்கவெண் குழைக் காதுஉடை எம்பெருமான்
கலித்தே என் வயிற்றின் அகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்து தின்ன
அலுத்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 8

பொன்போல மிளிர்வது ஓர் மேனியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணி என்று இவற்றை
நணுகாமல் துரந்து கரந்தும் இடீர்
என்போலிகள் உம்மை இனித் தெளியார்
அடியார் படுவது இதுவே ஆகில்
அன்பே அமையும் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே 9

போர்த்தாய் அங்குஓர் ஆனையின் ஈருரிதோல்
புறங்காடு அரங்கா நடம்ஆட வல்லாய்
ஆர்த்தான் அரக்கன்தனை மால்வரைக் கீழ்
அடர்த்திட்டு அருள் செய்தஅது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை ஆன விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல்சூழ் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

26. திருவையாறு

திருமுறை : 4 (3வது பதிகம்) பண் : காந்தாரம்
இறைவன்:ஐயாறப்பர், பஞ்சநதீசுவரர் இறைவி: அறம்வளர்த்த நாயகி

திருநாவுக்கரசர் உடல் மெலிந்து, தாழ்வுற்று கயிலாயம் சென்று சிவபெருமானை தரிசிக்க செல்லுங்கால், சிவபெருமானே அப்பர் பெருமானின் நிலையை கருத்தில் கொண்டு அங்குள்ள வலையில் மூழ்கி, திருவையாற்று குளத்தில் எழுந்தருளிச் செய்து திருநாவுக்கரசர் பெருமானுக்கு கயிலையில் விடையின் மேல் உமாதேவியுடன் அமர்ந்து அருளிய காட்சி தந்தார். கண்ணாரக் காட்சியும் மனதார பெருமையும் தந்த பதிகம்தான் இப்பதிகம்.

மாதர்ப் பிறைக்கண்ணியானை மலையான்மகளொடும் பாடிப்
போதொடு நீர் சுமந்து ஏத்திப் புகுவார்அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்றபோது
காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டுஅறியாதன கண்டேன். 1

போழ்இளங்கண்ணியினானைப் பூந்துகிலாளொடும் பாடி
வாழியம் போற்றி என்று ஏத்தி வட்டம்இட்டு ஆடா வருவேன்
ஆழிவலவன் நின்று ஏத்தும் ஐயாறு அடைகின்றபோது
கோழி பெடையொடும் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டு அறியாதன கண்டேன். 2

எரிப்பிறைக்கண்ணியினானை ஏந்திழையாளொடும் பாடி
முரித்த இலயங்கள் இட்டு முகம் மலர்ந்து ஆடா வருவேன்
அரித்து ஒழுகும் வெள்அருவி ஐயாறு அடைகின்றபோது
வரிக்குயில் பேடையொடு ஆடி வைகி வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டுஅறியாதன கண்டேன். 3

Koviloor Digital Library

பிறைஇளங்கண்ணியினானைப் பெய்வளையாளொடும் பாடித்
துறை இளம் பல்மலர் தூவி தோளைக் குளிரத் தொழுவேன்
அறை இளம் பூங் குயில் ஆலும் ஐயாறு அடைகின்றபோது
சிறை இளம் பேடையொடு ஆடிச் சேவல் வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டு அறியாதன கண்டேன். 4

ஏடுமதிக்கண்ணியானை ஏந்திழையாளொடும் பாடிக்
காடொடு நாடும் மலையும் கைதொழுது ஆடா வருவேன்
ஆடல் அமர்ந்து உறைகின்ற ஐயாறு அடைகின்றபோது
பேடை மயிலொடும் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டுஅறியாதன கண்டேன். 5

தண்மதிக்கண்ணியினானைத் தையில் நல்லாளொடும் பாடி
உண்மெலி சிந்தையன் ஆகி உணரா உருகா வருவேன்
அண்ணல் அமர்ந்து உறைகின்ற ஐயாறு அடைகின்றபோது
வண்ணப் பகன்றிலொடு ஆடி வைகி வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டு அறியாதன கண்டேன். 6

கடிமதிக்கண்ணியினானைக் காரிகையாளொடும் பாடி
வடிவொடு வண்ணம்இரண்டும் வாய் வேண்டுவ சொல்லி வாழ்வேன்
அடிஇணை ஆர்க்கும் கழலான் ஐயாறு அடைகின்றபோது
இடிகுரல் அன்னது ஓர் ஏனம் இசைந்து வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டுஅறியாதன கண்டேன். 7

விரும்பு மதிக்கண்ணியானை மெல்லியலாளொடும் பாடிப்
பெரும்புலர்காலை எழுந்து பெறு மலர் கொய்யா வருவேன்
அருங் கலம் பொன்மணி உந்தும் ஐயாறு அடைகின்றபோது
கருங் கலை பேடையொடு ஆடிக் கலந்து வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டுஅறியாதன கண்டேன். 8

Koviloor Digital Library

முற்பிறைக் கண்ணியினானை மொய்குழலாளொடும் பாடிப்
பற்றிக் கயிறு அறுக்கில்லேன் பாடியும் ஆடா வருவேன்
அற்று அருள் பெற்று நின்றாரோடு ஐயாறு அடைகின்றபோது
நல் துணைப் பேடையொடு ஆடி நாரை வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டுஅறியாதன கண்டேன். 9

திங்கள் மதிக்கண்ணியானைத் தேமொழியாளொடும் பாடி
எங்கு அருள் நல்கும்கொல் எந்தை எனக்கு இனி என்னா வருவேன்
அங்கு இள மங்கையர் ஆடும் ஐயாறு அடைகின்றபோது
பைங்கிளி பேடையொடு ஆடிப் பறந்து வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டு அறியாதன கண்டேன். 10

வளர்மதிக் கண்ணியினானை வார்குழலாளொடும் பாடிக்
களவு படாதது ஓர் காலம் காண்பான் கடைக்கண் நிற்கின்றேன்
அளவு படாதது ஓர் அன்போடு ஐயாறு அடைகின்றபோது
இள மண நாகு தழுவி ஏறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டுஅறியாதன கண்டேன். 11

திருச்சிற்றம்பலம்

27. திருப்பூந்துருத்தி

(திருஅங்கமாலை)

திருமுறை : 4 (9வது பதிகம்) இராகம் : பந்துவராளி பண் : சாதாரி

இந்த மானிடப் பிறவி கிடைத்தற்கு இறைவனுக்கு நன்றி கூறவும், ஆணவ மலம் நீங்கி நலம் பெறவும் ஓத வேண்டிய பதிகம்.

திருநாவுக்கரசர் பாடியருளிய இத்திருப்பதிகம். 'திருஅங்க மாலை' எனப்படும். நமது உடல் அங்கங்கள் ஒவ்வொன்றும் எதற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இத்திருப்பதிகம்

Koviloor Digital Library

உணர்த்துகின்றது. இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து அதன்படி வாழ்வை அமைத்துக் கொள்ள, நல்லவண்ணம் வாழ்வு அமைவதோடு, பிறவிப்பயன் நிறைவேறும் என்பது திண்ணம்.

தலையே நீ வணங்காய் தலைமாலை தலைக்கு அணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனைத் தலையே நீ வணங்காய். 1

கண்காள் காண்மின்களோ கடல்நஞ்சு உண்ட கண்டன்தன்னை
எண்தோள் வீசி நின்று ஆடும் பிரான்தன்னைக் கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ சிவன் எம் இறை செம்பவள
எரி போல் மேனிப் பிரான் திறம் எப்போதும் செவிகாள் கேண்மின்களோ. 3

மூக்கே நீ முரலாய் முதுகாடு உறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கைமணாளனை மூக்கே நீ முரலாய். 4

வாயே வாழ்த்துகண்டாய் மதயானை உரி போர்த்துப்
பேய் வாழ் காட்டுஅகத்து ஆடும் பிரான்தன்னை வாயே வாழ்த்துகண்டாய். 5

நெஞ்சே நீ நினையாய் நிமிர்புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை நெஞ்சே நீ நினையாய். 6

கைகாள் கூப்பித் தொழீர் கடிமாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பு அரை ஆர்த்த பரமனைக் கைகாள் கூப்பித் தொழீர். 7

ஆக்கையால் பயன் என் அரன் கோயில் வலம்வந்து
பூக் கையால் அட்டிப் போற்றி என்னாத இவ் ஆக்கையால் பயன் என். 8

கால்களால் பயன் என் கறைக்கண்டன் உறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக் கால்களால் பயன் என். 9

Koviloor Digital Library

உற்றார் ஆர் உளரோ உயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத்து உறை கூத்தன் அல்லால் நமக்கு உற்றார் ஆர் உளரோ. 10

இறுமாந்து இருப்பன்கொலோ ஈசன் பல்கணத்து எண்ணப்பட்டுச்
சிறுமான்ஏந்திதன் சேவடிக்கீழ்ச் சென்று அங்கு இறுமாந்து இருப்பன்கொலோ. 11

தேடிக் கண்டுகொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தேட ஒணாத் தேவனை என் உளே தேடிக் கண்டுகொண்டேன். 12

திருச்சிற்றம்பலம்

28. கடலிடை அருளியது

திருமுறை : 4 /11 இராகம் : கேதாரகௌளம் பண் : காந்தாரப் பஞ்சமம்

வழித்துணை நன்றாக அமையவும், எத்தனை துன்பத்திலும் முக்தி கிட்டவும் ஓத வேண்டிய பதிகம்

திருநாவுக்கரசர் பெருமானை சமணர்கள் பலவாற துன்புறுத்தினர். ஒருமுறை அவரைக் கல்லுடன் சேர்த்துக் கட்டி கடலில் வீசி எறிந்தனர். திருநாவுக்கரசர் பெருமான் இந்நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடினார். அவரைக் கரைசேர்த்தது. நாவுக்கரசர் கரையேறி இடம் 'கரையேறிய குப்பம்' என்றழைக்கப்படுகிறது.

இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால் எத்தகைய ஆபத்துக்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ள இயலும் என்பது திண்ணம்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சிவாயவே. 1

Koviloor Digital Library

பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சு ஆடுதல்
கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே. 2

விண்உற அடுக்கிய விறகின் வெவ்அழல்
உண்ணிய புகில் அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின்று அறுப்பது நமச்சிவாயவே. 3

இடுக்கண்பட்டு இருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற் பிரான் என்று வினவுவோம் அல்லோம்
அடுக்கல் கீழ்க் கிடக்கினும் அருளின் நாம் உற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே. 4

வெந்தநீறு அருங்கலம் விரதிகட்கு எலாம்
அந்தணர்க்கு அருங்கலம் அருமறை ஆறுஅங்கம்
திங்களுக்கு அருங்கலம் திகழும் நீள்முடி
நங்களுக்கு அருங்கலம் நமச்சிவாயவே. 5

சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கு அலால்
நலமிலன் நாள்தொறும் நல்குவான் நலன்
குலம் இலராகிலும் குலுத்திற்கு ஏற்பதுஓர்
நலம் மிகக் கொடுப்பது நமச்சிவாயவே. 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென்று உருவம் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே. 7

Koviloor Digital Library

இல்லக விளக்கது இருள்கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே. 8

முன்நெறி ஆகிய முதல்வன் முக்கணன்
தன்னெறியே சரணாதல் திண்ணமே
அந்நெறியே சென்று அங்குஅடைந்தவர்க்கு எலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே. 9

மாப்பிணை தழுவிய மாதுஓர் பாகத்தன்
பூப் பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாயப் பத்து
ஏத்த வல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே. 10

திருச்சிற்றம்பலம்

29. திங்களூர்

திருமுறை : 4/18 இராகம் : நாதநாமக்கிரியா பண் : இந்தளம்

பாம்பு, பல்லி, தேள் போன்ற விஷக்கிருமிகளின் விஷத்திலிருந்து விடுபட ஓத வேண்டிய பதிகம்.

விடம் நீங்க பாராயணம் செய்ய வேண்டிய திருப்பதிகம் திருநாவுக்கரசர் சுவாமிகள் பல தலங்களையும் தரிசித்து விட்டு, திங்களூரை வந்தடைந்தார். நாவுக்கரசரின் மீது அரும்பக்தி கொண்ட அப்பூதி அடிகள் என்பவர் திங்களூரில் வசித்து வந்தார். அவர் நாவுக்கரசர் பெருமானைத் தனது இல்லத்தில் விருந்துண்ண அழைத்தார்.

விருந்திற்கான வாழையிலையைப் பறிக்கச் சென்ற அப்பூதி அடிகளாரின் மகனை பாம்பு தீண்டியதால் அவன் இறந்தான்.

Koviloor Digital Library

இருப்பினும் விருந்தைத் தடை செய்ய விரும்பாத அப்பூதி அடிகள் மகனின் உடலை மறைத்து வைத்து, நாவுக்கரசர் பெருமானுக்கு விருந்தளிக்க முன்வந்தார். நாவுக்கரசர் பெருமான், அப்பூதி அடிகளின் மகனைப்பற்றி விசாரிக்க வேறு வழியின்றி அப்பூதி அடிகள் தம்பதியினர் உண்மையைக் கூறினார்.

உடனே திருநாவுக்கரசர்பெருமான், அப்பூதி அடிகளின் மகனது இறந்த உடலை கோயிலுக்கு எடுத்துச் சென்று கீழ்கண்ட திருப்பதிகத்தைப் பாடி, திருநீறு இட்டார். அப்பூதி அடிகளின் மகனும் உறங்கி விழித்தவன் போல் உயிர்பெற்று எழுந்தான். இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால் பாம்பு, தேன், போன்ற விஷ பிராணிகளின் விஷம் நீங்கி குணம் கிட்டும் என்பது திண்ணம்.

ஒன்றுகொலாம் அவர் சிந்தை உயர் வரை
ஒன்றுகொலாம் உயரும் மதி சூடுவர்
ஒன்றுகொலாம் இடு வெண்தலை கையது
ஒன்றுகொலாம் அவர் ஊர்வதுதானே. 1

இரண்டுகொலாம் இமையோர் தொழு பாதம்
இரண்டுகொலாம் இலங்கும் குழை பெண் ஆண்
இரண்டுகொலாம் உருவம் சிறு மான் மழு
இரண்டுகொலாம் அவர் எய்தினதாமே. 2

மூன்றுகொலாம் அவர் கண்நுதல் ஆவன
மூன்றுகொலாம் அவர் சூலத்தின் மொய் இலை
மூன்றுகொலாம் கணை கையது வில் நாண்
மூன்றுகொலாம் புரம் எய்த தாமே. 3

Koviloor Digital Library

நாலுகொலாம் அவர் தம் முகம்ஆவன
நாலுகொலாம் சனனம் முதல் தோற்றமும்
நாலுகொலாம் அவர் ஊர்தியின் பாதங்கள்
நாலுகொலாம் மறை பாடினதாமே. 4

அஞ்சுகொலாம் அவர் ஆடுஅரவின் படம்
அஞ்சுகொலாம் அவர் வெல் புலன்ஆவன
அஞ்சுகொலாம் அவர் காயப்பட்டான் கணை
அஞ்சுகொலாம் அவர் ஆடினதாமே. 5

ஆறுகொலாம் அவர் அங்கம் படைத்தன
ஆறுகொலாம் அவர்தம் மகனார் முகம்
ஆறுகொலாம் அவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொலாம் சுவை ஆக்கினதாமே. 6

ஏழுகொலாம் அவர் ஊழி படைத்தன
ஏழுகொலாம் அவர் கண்ட இருங்கடல்
ஏழுகொலாம் அவர் ஆளும் உலகங்கள்
ஏழுகொலாம் இசை ஆக்கினதாமே. 7

எட்டுக்கொலாம் அவர் ஈறு இல் பெருங் குணம்
எட்டுக்கொலாம் அவர் சூடும் இனமலர்
எட்டுக்கொலாம் அவர் தோள்இணை ஆவன
எட்டுக்கொலாம் திசை ஆக்கினதாமே. 8

ஒன்பதுபோல் அவர் வாசல் வகுத்தன
ஒன்பதுபோல் அவர் மார்பினில் நூல் இழை
ஒன்பதுபோல் அவர் கோலக் குழல்சடை
ஒன்பதுபோல் அவர் பார்இடம்தானே. 9

Koviloor Digital Library

பத்துக்கொலாம் அவர் பாம்பின் கண் பாம்பின் பல்
பத்துக்கொலாம் எயிறு நெரிந்து உக்கன
பத்துக்கொலாம் அவர் காயப்பட்டான் தலை
பத்துக்கொலாம் அடியார் செய்கைதானே. 10

திருச்சிற்றம்பலம்

30. திருத்தில்லை

திருமுறை : 5 (1வது பதிகம்) இராகம் : நாதநாமக்கிரியா திருக்குறுந்தொகை
இறைவன் : சபாநாயகர், திருமூலநாதர் இறைவி : சிவகாமியம்மை, உமையம்மை

என்றும் உணவு கிடைக்க பாராயணம் செய்ய வேண்டிய திருப்பதிகம்.

திருநாவுக்கரசர் பெருமான் தில்லையில் இத்திருப் பதிகத்தைப் பாடியருளினார். இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால் எப்போதும் உணவுக்குப் பஞ்சம் வராது என்பது திண்ணம்.

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப் பூமிசை
என் அன்பு ஆலிக்குமாறு கண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே. 1

அரும்பு அற்றப் பட ஆய் மலர் கொண்டு நீர்
சுரும்பு அற்றப் படத் தூவித் தொழுமினோ
கரும்பு அற்றச் சிலைச் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற்றப்புலியூர் எம்பிரானையே. 2

Koviloor Digital Library

அரிச்சுஉற்ற வினையால் அடர்ப்புண்டு நீர்
எரிச் சுற்றக் கிடந்தார் என்று அயலவர்
சிரிச்சுஉற்றுப் பல பேசப்படாமுனம்
திருச்சிற்றம்பலம் சென்று அடைந்து உய்ம்மினே. 3

அல்லல் என் செயும் அருவினை என் செயும்
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என் செயும்
தில்லை மா நகர்ச் சிற்றம்பலவனார்க்கு
எல்லை இல்லது ஓர் அடிமை பூண்டேனுக்கே. 4

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதுஎலாம்
நான் நிலாவி இருப்பன் என் நாதனைத்
தேன் நிலாவிய சிற்றம்பலவனார்
வான் நிலாவி இருக்கவும் வைப்பரே. 5

சிட்டர் வானவர் சென்று வரம் கொளும்
சிட்டர் வாழ் தில்லைச் சிற்றம்பலத்து உறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லும் அச்
சிட்டர்பால் அணுகான் செறு காலனே. 6

ஒருத்தனார் உலகங்கட்கு ஒரு சுடர்
திருத்தனார் தில்லைச் சிற்றம்பலவனார்
விருத்தனார் இளையார் விடம் உண்டஎம்
அருத்தனார் அடியாரை அறிவரே. 7

விண் நிறைந்தது ஓர் வெவ்அழலின் உரு
எண் நிறைந்த இருவர்க்கு அறிவு ஒணாக்
கண் நிறைந்த கடிபொழில் அம்பலத்து
உள் நிறைந்து நின்று ஆடும் ஒருவனே. 8

Koviloor Digital Library

வில்லை வட்டப்பட வாங்கி அவுணர்தம்
வல்லை வட்டம் மதில்மூன்று உடன்மாய்த்தவன்
தில்லை வட்டம் திசை கைதொழுவார் வினை
ஒல்லை வட்டம் கடந்து ஒடுதல் உண்மையே. 9

நாடி நாரணன் நான்முகன் என்று இவர்
தேடியும் திரிந்தும் காண வல்லரோ
மாட மாளிகை சூழ் தில்லை அம்பலத்து
ஆடி பாதம் என் நெஞ்சுள் இருக்கவே. 10

மதுர வாய்மொழி மங்கை ஓர் பங்கினன்
சதுரன் சிற்றம்பலவன் திருமலை
அதிர ஆர்த்து எடுத்தான் முடிபத்து இற
மிதிகொள் சேவடி சென்று அடைந்து உய்ம்மினே. 11

திருச்சிற்றம்பலம்

31. திருப்புகலூர்

திருமுறை : 6 (94 வது பதிகம்) திருத்தாண்டகம், காம்போதி

இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் போது இப்பதிகத்தை ஓதினாலே முத்தி உறுதி

முழுமுதற் கடவுளான சிவபெருமானின் அறுதியற்ற தன்மையை விவரித்துக் கூறும் இத்திருப்பதிகத்தை திருநாவுக்கரசர் பெருமான் பாடியருளியுள்ளார். இது சிவ உபாசனைக்கு ஏற்ற திருப்பதிகமாகும். இத்திருப்பதிகம் உருத்திரத் திருத்தாண்டகம் என்றும், நின்ற திருத்தாண்டகம் என்றும் அழைக்கப்படுகிறது.

உருத்திரத்தை ஜபித்தே தேவர்கள், முனிவர்கள் உட்பட பலரும் முக்திப் பேற்றை அடைந்துள்ளார்கள். இத்திருப்பதிகத்தைப்

Koviloor Digital Library

தொடர்ந்து பாரயாணம் செய்து வர முக்திப்பேறு கிட்டும் என்பது திண்ணம். சிவபெருமானுக்கு அபிஷேகம், பூஜைகள் செய்யும்போது இத்திருப்பதிகத்தைப் பாடினால் சிவனருள் எளிதல் கிட்டும்.

இரு நிலனாய்த் தீஆகி நீரும்ஆகி
இயமானனாய் எறியும் காற்றும்ஆகி
அரு நிலைய திங்களாய் ஞாயிறுஆகி
ஆகாசமாய் அட்டமூர்த்திஆகிப்
பெரு நலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறர் உருவும் தம் உருவும் தாமேஆகி
நெருநலையாய் இன்றுஆகி நாளைஆகி
நிமிர்புன்சடை அடிகள் நின்றவாறே. 1

மண்ஆகி விண்ஆகி மலையும்ஆகி
வயிரமுமாய் மாணிக்கம் தானே ஆகிக்
கண்ஆகிக் கண்ணுக்கு ஓர் மணியும்ஆகிக்
கலைஆகிக் கலைஞானம் தானேஆகிப்
பெண்ஆகிப் பெண்ணுக்கு ஓர் ஆணும்ஆகிப்
பிரளயத்துக்கு அப்பால் ஓர் அண்டம்ஆகி
எண்ஆகி எண்ணுக்கு ஓர் எழுத்தும்ஆகி
எழும்சுடராய் எம் அடிகள் நின்றவாறே. 2

கல்ஆகிக் களறுஆகிக் கானும்ஆகிக்
காவிரியாய்க் கால்ஆறாய்க் கழியும்ஆகிப்
புல்ஆகிப் புதல்ஆகிப் பூடும்ஆகிப்
புரம்ஆகிப் புரம்மூன்றும் கெடுத்தான்ஆகிச்

Koviloor Digital Library

சொல்ஆகிச் சொல்லுக்கு ஓர் பொருளும்ஆகிச்
சுலாவுஆகிச் சுலாவுக்கு ஓர் சூழல் ஆகி
நெல் ஆகி நிலன்ஆகி நீரும்ஆகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்து அடிகள் நின்றவாறே. 3

காற்றுஆகிக் கார்முகிலாய்க் காலம்மூன்றாய்க்
கனவுஆகி நனவுஆகிக் கங்குல்ஆகிக்
கூற்றுஆகிக் கூற்று உதைத்த கொல் களிறும்ஆகிக்
குரைகடலாய்க் குரைகடற்கு ஓர் கோமானுமாய்
நீற்றானாய் நீறு ஏற்ற மேனிஆகி
நீள் விசும்பாய் நீள் விசும்பின் உச்சிஆகி
ஏற்றானாய் ஏறு ஊர்ந்த செல்வன்ஆகி
எழும்சுடராய் எம் அடிகள் நின்றவாறே. 4

தீயாகி நீர்ஆகித் திண்மைஆகித்
திசைஆகி அத் திசைக்கு ஓர் தெய்வம்ஆகித்
தாய்ஆகித் தந்தையாய்ச் சார்வும்ஆகித்
தாரகையும் ஞாயிறும் தண்மதியும்ஆகிக்
காய்ஆகிப் பழம்ஆகிப் பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானும் தானே ஆகி
நீஆகி நான்ஆகி நேர்மை ஆகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்து அடிகள் நின்றவாறே. 5

அங்கமாய் ஆதியாய் வேதம்ஆகி
அருமறையோடு ஐம்பூதம் தானேஆகிப்
பங்கமாய்ப் பலசொல்லும் தானேஆகிப்
பால்மதியோடு ஆதியாய்ப் பான்மைஆகிக்

Koviloor Digital Library

கங்கையாய்க் காவிரியாய்க் கன்னிஆகிக்
கடல்ஆகி மலைஆகிக் கழியும்ஆகி
எங்குமாய் ஏறு ஊர்ந்த செல்வன்ஆகி
எழும்சுடராய் எம் அடிகள் நின்றவாறே. 6

மாதாபிதாஆகி மக்கள்ஆகி
மறிகடலும் மால் விசும்பும் தானேஆகிக்
கோதாவிரியாய்க் குமரிஆகிக்
கொல் புலித் தோல் ஆடைக் குழகன்ஆகிப்
போதாய மலர் கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பு அறுக்கும் புனிதன்ஆகி
ஆதானும் என நினைந்தார்க்கு எளிதேஆகி
அழல்வண்ணவண்ணர்தாம் நின்றவாறே. 7

ஆவாகி ஆவினில்ஐந்தும் ஆகி
அறிவாகி அழல்ஆகி அவியும்ஆகி
நாவாகி நாவுக்கு ஓர் உரையும்ஆகி
நாதனாய் வேதத்ததின் உள்ளோன்ஆகிப்
பூவாகிப் பூவுக்கு ஓர் நாற்றம்ஆகிப்
பூக்குளால் வாசமாய் நின்றான்ஆகித்
தேஆகி தேவர் முதலும்ஆகிச்
செழுஞ்சுடராய்ச் சென்று அடிகள் நின்றவாறே. 8

நீர்ஆகி நீள் அகலம் தானேஆகி
நிழல்ஆகி நீள் விசும்பின் உச்சிஆகிப்
பேர்ஆகிப் பேருக்கு ஓர் பெருமை ஆகிப்
பெரு மதில்கள்மூன்றினையும் எய்தான்ஆகி

Koviloor Digital Library

ஆரேனும் தன் அடைந்தோர்தம்மைஎல்லாம்
ஆட்கொள்ள வல்ல எம் ஈசனார்தாம்
பார்ஆகிப் பண்ஆகிப் பாடல்ஆகிப்
பரஞ்சுடராய்ச் சென்று அடிகள் நின்றவாறே. 9

மாலாகி நான்முகனாய் மா பூதமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வும்ஆகிப்
பாலாகி எண்திசைக்கும் எல்லைஆகிப்
பரப்பு ஆகிப் பரலோகம் தானேஆகிப்
பூலோக புவலோக சுவலோகமாய்ப்
பூதங்களாய்ப் புராணன் தானே ஆகி
ஏலாதனஎலாம் ஏல்விப்பானாய்
எழும்கூடராய் எம் அடிகள் நின்றவாறே. 10

திருச்சிற்றம்பலம்

32.திருவெண்ணெய் நல்லூர்

இறைவன் – தடுத்தாட்கொண்டநாதர் இறைவி – வேற்கண்மங்கை

திருமுறை 7/78 இராகம் : நாதநாமக்கிரியாபண் : இந்தளம்

சிவபெருமானால் தடுத்தாட்கொண்டு திருவெண்ணெய் நல்லூரில் நயன தீட்சை தந்து திரு அருட்துறையில் எல்லா உயிர்களும் உய்யும் வகையில், எல்லா உலகிற்கும் பொருத்துவதுமான திருப்பாடலாம் 'பித்தா' எனப்பாடும் பணியினை சுந்தரருக்கு அருளிய அற்புத பாடல்.

பித்தா பிறைசூடீ பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 1

Koviloor Digital Library

நாயேன் பலநாளும் நினைப்பு இன்றி மனத்து உன்னைப்
பேயாய்த் திரிந்து எய்த்தேன் பெறல் ஆகா அருள் பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்
ஆயா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே 2

மன்னே மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னைப்
பொன்னே மணிதானே வயிரம்மே பொருது உந்தி
மின்னார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அன்னே உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 3

முடியேன் இனிப் பிறவேன் பெறின் மூவேன் பெற்றம்ஊர்தீ
கொடியேன் பலபொய்யே உரைப்பேனைக் குறிக்கொள் நீ
செடியார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அடிகேள் உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 4

பாதம் பணிவார்கள் பெறும் பண்டம் அது பணியாய்
ஆதன் பொருள் ஆனேன் அறிவு இல்லேன் அருளாளா
தாதார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
ஆதீ உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 5

தண்ணார் மதிசூடீ தழல் போலும் திருமேனீ
எண்ணார் புரம்மூன்றும் எரியுண்ண நகைசெய்தாய்
மண்ணார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அண்ணா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 6

ஊனாய் உயிர்ஆனாய் உடல் ஆனாய் உலகு ஆனாய்
வானாய் நிலன் ஆனாய் கடல் ஆனாய் மலை ஆனாய்
தேனார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
ஆனாய் உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே 7

Koviloor Digital Library

ஏற்றார் புரம் மூன்றும் எரியுண்ணச் சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித் திரிவேனோ செக்கர் வான்நீர்
ஏற்றாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
ஆற்றாய் உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 8

மழுவாள் வலன் ஏந்தீ மறைஓதீ மங்கைபங்கா
தொழுவார் அவர் துயர் ஆயின தீர்த்தல் உன தொழிலே
செழுவார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அழகா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 9

கார் ஊர் புனல் எய்திக் கரை கல்லித் திரைக்கையால்
பார் ஊர் புகழ் எய்தித் திகழ் பன் மா மணி உந்திச்
சீர் ஊர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
ஆரூரன் எம்பெருமாற்கு ஆள்அல்லேன் எனல் ஆமே. 10

33. திருத்துருத்தியும் திரு வேள்விக்குடியும்

திருமுறை 7/11 இராகம் : நவரோஸ் பண் : காந்தாரம்

அம்மை, சொரி, படை போன்ற தோல் சம்பந்தப் பட்ட நோய்கள் நீங்க ஓத வேண்டிய பதிகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருந்துருத்தி எனும் தலத்திற்கு வந்தபோது உடலில் கொப்புளங்கள் ஏற்பட்டன. அவர் தனது நோயை நீக்கியருளுமாறு இறைவனை வேண்டி இத்திருப் பதிகத்தைப் பாடியருளினார். பதிகத்தில் திருவேள்விக்குடி இறைவனையும் இணைத்துப் பாடினார். இறைவனும் கோயிலின் வலப்புறத் திருக்குளத்தில் மூழ்கி எழும்படி பணிக்க, சுந்தரரும் அவ்வாறு செய்து தனது நோய் நீங்கப் பெற்றார்.

Koviloor Digital Library

தோல் நோய் கண்டவர்கள் இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து திருநீரை பூசிவர 48 நாட்களுக்குள் நோய் நீங்குவர் என்பது திண்ணம்.

மின்னுமா மேகங்கள் பொழிந்து இழிந்தருவி
வெடிபடக் கரையொடுந் திரைகொணர்ந்து எற்றும்
அன்னமாங் காவிரி அகன் கரை உறைவார்
அடிஇணை தொழுது எழும் அன்பராம் அடியார்
சொன்னவாறு அறிவார் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
என்னை நான் மறக்குமாறு எம்பெருமானை
என் உடம்பு அடும் பிணிஇடர் கெடுத்தானை. 1

கூடும் ஆறுஉள்ளன கூடியும் கோத்தும்
கொய் புன ஏனலோடு ஐவனஞ் சிதறி
மாடு மா கோங்கமே மருதமே பொருது
மலை எனக் குலைகளை மறிக்குமாறு உந்தி
ஓடு மா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
பாடுமாறு அறிகிலேன் எம்பெருமானைப்
பழவினை உள்ளன பற்றுஅறுத்தானை. 2

கொல்லு மால்யானையின் கொம்பொடு வம்பார்
கொழுங் கனிச் செழும் பயன் கொண்டு கூட்டு எய்திப்
புல்கியுந் தாழ்ந்தும் போந்து தவஞ் செய்யும்
போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச்

Koviloor Digital Library

செல்லும் மா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
சொல்லுமாறு அறிகிலேன் எம்பெருமானைத்
தொடர்ந்து அடும் கடும் பிணித்தொடர்வு அறுத்தானை. 3

பொறியும் மா சந்தனத்துண்டமோடு அகிலும்
பொழிந்து இழிந்து அருவிகள் புன்புலம் கவரக்
கறியும் மா மிளகொடு கதலியும் உந்திக்
கடல் உற விளைப்பதே கருதித் தன் கை போய்
எறியும் மா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
அறியுமாறு அறிகிலேன் எம்பெருமானை
அருவினைஉள்ளன ஆசு அறுத்தானை. 4

பொழிந்து இழி மும்மதக் களிற்றின மருப்பும்
பொன்மலர் வேங்கையின் நன் மலர் உந்தி
இழிந்துஇழிந்து அருவிகள் கடும் புனல் ஈண்டி
எண்திசையோர்களும் ஆட வந்து இங்கே
சுழிந்து இழி காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
ஒழிந்திலேன் பிதற்றுமாறு எம்பெருமானை
உற்ற நோய் இற்றையே உற ஒழித்தானை. 5

புகழும் மா சந்தனத்துண்டமோடு அகிலும்
பொன்மணி வரன்றியும் நன் மலர் உந்தி
அகழும் மா அருங் கரை வளம்படப் பெருகி
ஆடுவார் பாவந் தீர்த்து அஞ்சனம் அலம்பித்

Koviloor Digital Library

திகழும் மா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
இகழுமாறு அறிகிலேன் எம்பெருமானை
இழித்த நோய் இம்மையே ஒழிக்க வல்லானை. 6

வரையின் மாங்கனியொடு வாழையின்கனியும்
வருடியும் வணக்கியும் மராமரம் பொருதும்
கரையும் மா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
காம் பீலி சுமந்து ஒளிர்நித்திலங் கை போய்
விரையும் மா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
உரையுமாறு அறிகிலேன் எம்பெருமானை
உலகு அறி பழவினை அற ஒழித்தானை. 7

ஊரும் மா தேசமே மனம் உகந்து உள்ளிப்
புள்இனம்பல படிந்து ஒண் கரை உகளக்
காரும் மா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
கவரிமாமயிர் சுமந்து ஒண் பளிங்கு இடறித்
தேரும் மா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
ஆரும்ஆறு அறிகிலேன் எம்பெருமானை
அம்மைநோய் இம்மையே ஆசு அறுத்தானை. 8

புலங்களை வளம்படப் போக்கு அறப் பெருகிப்
பொன்களே சுமந்து எங்கும் பூசல் செய்து ஆர்ப்ப
இலங்குமார் முத்தினோடு இனமணி இடறி
இருகரைப் பெரு மரம் பீழந்து கொண்டு எற்றிக்

Koviloor Digital Library

கலங்கு மா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செயனேன்நாயேன்
விலங்குமாறு அறிகிலேன் எம்பெருமானை
மேலைநோய் இம்மையே வீடுவித்தானை. 9

மங்கை ஓர்கூறு உகந்து ஏறு உகந்து ஏறி
மாறலார் திரிபுரம் நீறு எழச் செற்ற
அங்கையான் கழல்அடி அன்றி மற்று அறியான்
அடியவர்க்கு அடியவன் தொழுவன் ஆரூரன்
கங்கையார் காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் சேர்த்திய பாடல்
தங்கையால் தொழுது தம் நாவின்மேல் கொள்வார்
தவநெறி சென்று அமருலகம் ஆள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

34. திருப்புகலூர்

திருமுறை 7/42 இராகம் : நவரோஸ் பண் : கொல்லி

இறைவர்:அக்னீஸ்வரர் இறைவி : கருத்தாழ் குழலியம்மை

உண்ண உணவும், உடுக்க உடையும் தேவைக்கு குறைவின்றி கிடைப்பதற்கு ஓத வேண்டிய பதிகம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் மனைவி பரவை நாச்சியார் பங்குனி உத்திர நாளில் சிவனடியார்க்கு தான தர்மங்கள் செய்வது வழக்கம். ஒரு பங்குனி உத்திர நாளில் தான தர்மம் செய்ய பணமின்றித் தவித்து, சுந்தரரிடம் கூறினார். சுந்தரரும் திருப்புகலூர் இறைவனை வேண்டி, கோயிலின் முன்பு சில செங்கற்களை தலைக்கு வைத்தபடி உறங்கினார். உறங்கி விழித்துப் பார்த்த

Koviloor Digital Library

போது, செங்கற்கள் அனைத்தும் பொற்கட்டிகளாக மாறியிருந்தன. இறைவனின் கருணையை மெச்சி சுந்தரர் பாடியருளிய திருப்பதிகம் இது. இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால் உணவு,உடை, உறைவிடம் ஆகியவை எந்தக் குறையுமின்றி கிட்டும் என்பது திண்ணம்.

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும் சார்கினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே.1

மிடுக்குஇலாதானை வீமனே விறல் விசயனே வில்லுக்கு இவன் என்று
கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பார் இலை
பொடிக் கொள் மேனி எம் புண்ணியன் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேல் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 2

காணியேல் பெரிது உடையனே கற்று நல்லனே சுற்றம் நல் கிளை
பேணியே விருந்து ஓம்புமே என்று பேசினும் கொடுப்பார் இலை
பூணி பூண்டு உழப் புள் சிலம்பும் தண் புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆணியாய் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 3

நரைகள் போந்து மெய் தளர்ந்து மூத்து உடல் நடுங்கி நிற்கும் இக்கிழவனை
வரைகள் போல் திரள்தோளனே என்று வாழ்த்தினும் கொடுப்பார் இலை
புரை வெள்ஏறு உடைப் புண்ணியன் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அரையனாய் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 4

வஞ்ச நெஞ்சனை மா சழக்கனைப் பாவியை வழக்கு இலியைப்
பஞ்சதுட்டனைச் சாதுவே என்று பாடினும் கொடுப்பார் இலை
பொன் செய் செஞ்சடைப் புண்ணியன் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
நெஞ்சில் நோய் அறுத்து உஞ்சுபோவதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 5

Koviloor Digital Library

நலம் இலாதானை நல்லனே என்று நரைத்த மாந்தனை இளையனே
குலம்இலாதானைக் குலவனே என்று கூறினும் கொடுப்பார் இலை
புலம் எலாம் வெறி கமழும் பூம் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அலமராது அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 6

நோயனைத் தடந்தோளனே என்று நொய்ய மாந்தனை விழுமிய
தாய் அன்றோ புலவோர்க்கு எலாம் என்று சாற்றினும் கொடுப்பார் இலை
போய் உழன்று கண் குழியாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆயம் இன்றிப் போய் அண்டம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே.7

எள் விழுந்த இடம் பார்க்கும்ஆகிலும் ஈக்கும் ஈகிலன் ஆகிலும்
வள்ளலே எங்கள் மைந்தனே என்று வாழ்த்தினும் கொடுப்பார் இலை
புள்எலாம் சென்று சேரும் பூம் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அள்ளல் பட்டு அழுந்தாது போவதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 8

கற்றிலாதானைக் கற்று நல்லனே காமதேவனை ஒக்குமே
முற்றிலாதானை முற்றனே என்று மொழியினும் கொடுப்பார் இலை
பொத்தில் ஆந்தைகள் பாட்டு அறாப் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அத்தனாய் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 9

தையலாருக்கு ஓர் காமனே சால நல அழகு உடை ஐயனே
கை உலாவிய வேலனே என்று கழறினும் கொடுப்பார் இலை
பொய்கை வாவியின் மேதி பாய் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
ஐயனாய் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 10

செறுவினில் செழுங் கமலம் ஓங்கு தென்புகலூர் மேவிய செல்வனை
நறவம் பூம்பொழில் நாவலூரன் வனப்பகைஅப்பன் சடையன்தன்
சிறுவன் வன் தொண்டன் ஊரன் பாடிய பாடல் பத்துஇவை வல்லவர்
அறவனார் அடி சென்று சேர்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

35. திருத்தொண்டத்தொகை

இறைவன் - புற்றிடங்கொண்டார் இறைவி - அல்லியம்பூங்கோதை

திருமுறை 7/46 பண் : கொல்லிக்கௌவாணம்

சிவபெருமானின் 366 திருவிளையாடல்கள் புரிந்த தலமான திருவாரூரில் சுந்தரர் மூலமாக திருத்தொண்டர் தொகையினை, சிவனடியார்களின் பெருமையினை 'தில்லைவாழ்' என்ற சிவபெருமானே முதலடி எடுத்துக் கொடுத்து அருளிய அற்புத பாடல். சிவனடியார்களாம் 63 நாயன்மார்களின் வாழ்க்கை தரத்தை பக்தி சுவையுடன் கூட்டியது மட்டுமல்லாமல், இப்பாடலை பாடுபவர் திருவாரூர் தியாகேசருக்கு அன்பர் ஆவாரே என்ற அருட்பாடல்.

தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்
திரு நீலகண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான் தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரி பொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டற்கு அடியேன்
அல்லி மென் முல்லைஅந்தார் அமர் நீதிக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 1

இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தற்கு அடியேன்
ஏனாதிநாதன் தன் அடியார்க்கும் அடியேன்
கலை மலிந்த சீர் நம்பி கண்ணப்பற்கு அடியேன்
கடவூரில் கலயன்தன் அடியார்க்கும் அடியேன்
மலை மலிந்த தோள் வள்ளல் மானக்கஞ்சாறன்
எஞ்சாத வாள் தாயன் அடியார்க்கும் அடியேன்
அலை மலிந்த புனல் மங்கை ஆனாயற்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 2

Koviloor Digital Library

மும்மையால் உலகு ஆண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவாற்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டு எழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச் சண்டிப் பெருமானுக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 3

திரு நின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரையன்தன் அடியார்க்கும் அடியேன்
பெரு நம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக்குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்
ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலி புனல் சூழ் சாத்த மங்கை நீலநக்கற்கு அடியேன்
அரு நம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 4

வம்பு அறா வரிவண்டு மணம் நாற மலரும்
மதுமலர் நற்கொன்றையாள் அடிஅலால் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டம் மிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசிமாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 5

Koviloor Digital Library

வார் கொண்ட வனமுலையாள் உமை பங்கன் கழலே
மறவாது கல் எறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீர் கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங்குடி மேய சிறுத்தொண்டற்கு அடியேன்

கார் கொண்ட கொடைக் கழறிற்றறிவாற்கும் அடியேன்
கடல் காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேல் கூற்றன் களந்தைக் கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 6

பொய் அடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழில் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற்கு அடியேன்
மெய் அடியான் நரசிங்க முனையரையற்கு அடியேன்
விரி திரை சூழ் கடல் நாகை அதிபத்தற்கு அடியேன்
கை தடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழல் சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 7

கறைக்கண்டன் கழல்அடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக் கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக் கொண்ட செம்பவளம் இருள் அகற்றும் சோதித்
தொன் மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல் நம்பி முனையடுவாற்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 8

Koviloor Digital Library

கடல் சூழ்ந்த உலகுஎலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல் சூழ்ந்த தார் நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடை சூழ்ந்த புலி அதள்மேல் அரவு ஆட ஆடி
பொன் அடிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல் சூழ்ந்த வேல் நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 9

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திரு ஆரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச் சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 10

மன்னிய சீர் மறை நாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகு ஆண்ட செங்கணார்க்கு அடியேன்
திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன்
என்னவனாம் அரன் அடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திரு நாவலூர்க் கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமை கேட்டு உவப்பார்
அரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

36. திருமுருகன்பூண்டி

திருமுறை 7/66 இராகம்: சங்கராபரணம் (அ) பைரவி பண்: பழம்பஞ்சுரம்

இழந்த, களவு, திருட்டுப் போன பொருளை மீண்டும் கிடைக்க ஓத வேண்டிய பதிகம்

சேரமான் பெருமான் நாயனாருடன் இணைந்து பல தலங்களையும் சுந்தரர் தரிசித்தார். சேரமான் பெருமாள் வேண்டுகோளின்படி அந்நாட்டில் சிறிது காலம் தங்கியிருந்தார். பிறகு திருவாரூர் இறைவனை தரிசிக்கும் ஆசையில் அங்கிருந்து புறப்பட எண்ணினார். அப்போது சேரமான் பெருமாள் சுந்தரருக்கு பொன், பொருள் பலவற்றை அளித்து அனுப்பி வைத்தார்.

சுந்தரரைச் சோதிக்க விரும்பிய இறைவன், தனது சிவகணங்களை வேடர்களாக அனுப்பி சுந்தரரின் பொன்–பொருளைக் களவாடிச் சென்றார். சுந்தரரும் திருமுருகன் பூண்டி ஆலயத்திற்கு வந்து அங்குள்ள இறைவனைத் துதித்து இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார். இறைவனும் மகிழ்ந்து, தான் கவர்ந்து சென்ற பொன்–பொருளை சுந்தரருக்கு மீண்டும் அளித்தார். இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால் களவு போன பொருட்கள் மீண்டும் நடக்குக் கிட்டும் என்பது திண்ணம்.

கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர்
விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டு எனக் குத்திக் கூறை கொண்டு
ஆறலைக்கும் இடம்
முடுகு நாறிய வடுகர் வாழ் முருகன்
பூண்டி மா நகர்வாய்
இடுகு நுண்இடை மங்கைதன்னொடும்
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 1

Koviloor Digital Library

வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர்
    விரவலாமை சொல்லிக்
கல்லினால் எறிந்திட்டும் மோதியும்
    கூறை கொள்ளும் இடம்
முல்லைத்தாது மணம் கமழ் முருகன்
    பூண்டி மா நகர்வாய்
எல்லைக் காப்பது ஒன்று இல்லைஆகில் நீர்
    எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 2

பசுக்களே கொன்று தின்று பாவிகள்
    பாவம் ஒன்று அறியார்
உசிர்க்கொலைபல நேர்ந்து நாள்தொறும்
    கூறை கொள்ளும் இடம்
முசுக்கள் போல் பலவேடர் வாழ் முருகன்
    பூண்டி மா நகர்வாய்
இசுக்கு அழியப் பயிக்கம் கொண்டு நீர்
    எத்துக்கு இங்கு இருந்தீ எம்பிரானீரே. 3

பீறல் கூறை உடுத்து ஓர் பத்திரம்
    கட்டி வெட்டினராய்ச்
சூறைப் பங்கியராகி நாள்தொறும்
    கூறை கொள்ளும் இடம்
மோறை வேடுவர் கூடி வாழ் முருகன்
    பூண்டி மா நகர்வாய்
ஏறு கால் இற்றது இல்லையாய்விடில்
    எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 4

Koviloor Digital Library

தயங்கு தோலை உடுத்துச் சங்கர
சாமவேதம் ஓதி
மயங்கி ஊர் இடு பிச்சை கொண்டு உணும்
மார்க்கம் ஒன்று அறியீர்
முயங்கு பூண் முலை மங்கையாளொடு
முருகன்பூண்டி மா நகர்வாய்
இயங்கவும் மிடுக்கு உடையராய்விடில்
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 5

விட்டு இசைப்பன கொக்கரை கொடு
கொட்டி தத்தளகம்
கொட்டிப் பாடுமித் துந்துமியொடு
குடமுழா நீர் மகிழ்வீர்
மொட்டு அலர்ந்து மணம் கமழ் முருகன்
பூண்டி மா நகர்வாய்
இட்ட பிச்சை கொண்டு உண்பதுஆகில் நீர்
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 6

வேதம் ஓதி வெண்நீறு பூசி வெண்
கோவணம் தற்று அயலே
ஓதம் மேவிய ஒற்றியூரையும்
உத்திரம் நீர் மகிழ்வீர்
மோதி வேடுவர் கூறை கொள்ளும்
முருகன்பூண்டி மா நகர்வாய்
ஏது காரணம் ஏது காவல் கொண்டு
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 7

Koviloor Digital Library

படஅரவு நுண் ஏர் இடைப் பணைத்
தோள் வரிநெடுங்கண்
மடவரல் உமைநங்கைதன்னை ஓர்
பாகம் வைத்து உகந்தீர்
முடவர் அல்லீர் இடர் இலீர் முருகன்
பூண்டி மா நகர்வாய்
இடவம் எறியும் போவதுஆகில் நீர்
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 8

சாந்தமாக வெண்நீறு பூசி வெண்
பல் தலை கலனா
வேய்ந்த வெண்பிறைக் கண்ணிதன்னை ஓர்
பாகம் வைத்து உகந்தீர்
மோந்தையோடு முழக்கு அறா முருகன்
பூண்டி மா நகர்வாய்
ஏந்து பூண் முலை மங்கைதன்னொடும்
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 9

முந்தி வானவர்தாம் தொழும் முருகன்
பூண்டி மா நகர்வாய்ப்
பந்து அணைவிரல் பாவை தன்னை ஓர்
பாகம் வைத்தவனைச்
சிந்தையில் சிவதொண்டன்ஊரன்
உரைத்தனபத்தும் கொண்டு
எம்தம் அடிகளை ஏத்துவார் இடர்
ஒன்றும் தாம் இலரே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

37. திருப்பாண்டிக்கொடுமுடி

திருமுறை 7/68 இராகம்:சங்கராபரணம் பண் : பழம்பஞ்சுரம்

பிறவாமை வரம் பெற, நமச்சிவாய மந்திரத்தை எப்போதும் நினைவில் கொள்ளவும் ஓத வேண்டிய பதிகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் கொங்குநாட்டு காவிரித் தென்கரையில் பாண்டிக்கொடுமுடி என்னும் தலத்து இறைவனை வணங்கிப் பாடிய திருப்பதிகம் இது. இத்திருப்பதிகத்தில் "சொல்லும் நா நமச்சிவாயவே" என்று அமைத்துப் பாடியதால் இது 'நமச்சிவாயப் திருப்பதிகம்' என்றழைக்கப்படுகிறது. இதுவே சுந்தரர் பாடிய இறுதி திருப்பதிகம் என்று கருதப்படுகிறது.

உள்ளத்தை உருக்கும் இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால், துன்ப காலத்தில் இடர்கள் நீங்கி மன அமைதியும், பிறவிப் பயனும் கிட்டும் என்பது திண்ணம்.

மற்றுப் பற்று எனக்கு இன்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்து எய்தினேன்
கற்றவர் தொழுது ஏத்தும் சீர்க் கறையூரில் பாண்டிக்கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும் நா நமச்சிவாயவே. 1

இட்டன்றும் அடி ஏத்துவார் இகழ்ந்திட்ட நாள் மறந்திட்ட நாள்
கெட்ட நாள் இவை என்றலால் கருதேன் கிளர் புனல் காவிரி
வட்டவாசிகை கொண்டு அடி தொழுது ஏத்து பாண்டிக்கொடுமுடி
நட்டவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே 2

ஓவு நாள் உணர்வு அழியும் நாள் உயிர் போகும் நாள் உயர் பாடைமேல்
காவு நாள் இவை என்றலால் கருதேன் கிளர் புனல்காவிரிப்
பாவு தண்புனல் வந்து இழி பரஞ்சோதி பாண்டிக்கொடுமுடி
நாவலா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே 3

Koviloor Digital Library

எல்லையில் புகழ் எம்பிரான் எந்தை தம்பிரான் என் பொன் மாமணி
கல்லை உந்தி வளம் பொழிந்து இழி காவிரி அதன்வாய்க் கரை
நல்லவர் தொழுது ஏத்தும் சீர் கறையூரில் பாண்டிக்கொடுமுடி
வல்லவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே4

அஞ்சினார்க்கு அரண் ஆதி என்று அடியேனும் நான் மிக அஞ்சினேன்
அஞ்சல் என்று அடித்தொண்டனேற்கு அருள் நல்கினாய்க்கு அழிகின்றது என்
பஞ்சின் மெல்அடிப் பாவைமார் குடைந்து ஆடு பாண்டிக்கொடுமுடி
நஞ்சு அணி கண்ட நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே. 5

ஏடு வான் இளந்திங்கள் சூடினை என் பின் கொல் புலித் தோலின் மேல்
ஆடு பாம்புஅது அரைக்கு அசைத்த அழகனே அந் தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்து இழி பரஞ்சோதி பாண்டிக்கொடுமுடிச்
சேடனே உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே. 6

விரும்பி நின் மலர்ப்பாதமே நினைந்தேன் வினைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்து எழில் பெற நின்ற காவிரிக் கோட்டுஇடைக்
குரும்பைமென்முலைக் கோதைமார் குடைந்துஆடு பாண்டிக்கொடுமுடி
விரும்பனே உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே. 7

செம்பொன் நேர் சடையாய் திரிபுரம் தீ எழச் சிலை கோலினாய்
வம்பு உலாம் குழலாளைப் பாகம் அமர்ந்து காவிரிக்கோட்டிடைக்
கொம்பின்மேல் குயில் கூவ மா மயில் ஆடு பாண்டிக்கொடுமுடி
நம்பனே உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே. 8

சாரணன் தந்தை எம்பிரான் எந்தைதம்பிரான் எம் பொன் மாமணீ என்று
பேர்எண் ஆயிரகோடி தேவர் பிதற்றி நின்று பிரிகிலார்
நாரணன் பிரமன் தொழும் கறையூரில் பாண்டிக்கொடுமுடிக்
காரணா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே 9

Koviloor Digital Library

கோணிய பிறை சூடியைக் கறையூரில் பாண்டிக்கொடுமுடி
பேணிய பெருமானைப் பிஞ்ஞகப்பித்தனைப் பிறப்பில்லியைப்
பாண் உலா வரிவண்டு அறை கொன்றைத்தாரனைப் படப்பாம்பு அரை
நாணனைத் தொண்டன்ஊரன் சொல் இவை சொல்லுவார்க்கு இல்லை துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

38. திருமுதுகுன்றம்

திருமுறை 7/74 இராகம் : பந்துவராளி பண் : நட்டராகம்

திருப்பணி செய்திட பொருள் பதிகம் வேண்டி பதிகம் இது.

திருமுதுகுன்றம் என்று பெயரிடப்பட்ட இத்திருத்தலத்தில் பெருமானின் திருக்கருணையை போற்றியதுடன் அல்லாமல் சிவனடியார்களுக்கு பரவையார் மூலமாக சேவை செய்திட 10000 பொற்காசுகள் முறையிட்டு அதனை பெற்று மணிமுத்தாற்றில் அதனை விட்டு திருவாரூர் குளத்தில் எடுத்தார்.

பொன் செய்த மேனியினீர் புலித்தோலை அரைக்கு அசைத்தீர்.
முன் செய்த மூஎயிலும் எரித்தீர் முதுகுன்று அமர்ந்தீர்
மின் செய்த நுண் இடையாள் பரவைஇவள்தன் முகப்பே
என் செய்தவாறு அடிகேள் அடியேன் இட்டளம் கெடவே 1

உம்பரும் வானவரும் உடனேநிற்கவே எனக்குச்
செம்பொனைத் தந்து அருளித் திகழும் முதுகுன்று அமர்ந்தீர்
வம்பு அமரும் குழலாள் பரவைஇவள் வாடுகின்றாள்
எம்பெருமான் அருளீர் அடியேன் இட்டளம் கெடவே 2

பத்தா பத்தர்களுக்கு அருள்செய்யும் பரம்பரனே
முத்தா முக்கணனே முதுகுன்றம் அமர்ந்தவனே
மைத்து ஆரும் தடங்கண் பரவை இவள் வாடாமே
அத்தா தந்தருளாய் அடியேன் இட்டளம் கெடவே. 3

Koviloor Digital Library

மங்கை ஓர்கூறு அமர்ந்தீர் மறைநான்கும் விரித்து உகந்தீர்
திங்கள் சடைக்கு அணிந்தீர் திகழும் முதுகுன்று அமர்ந்தீர்
கொங்கை நல்லாள்பரவை குணம் கொண்டு இருந்தாள் முகப்பே
அங்கணனே அருளாய் அடியேன் இட்டளம் கெடவே 4

மை ஆரும் மிடற்றாய் மருவார் புரம்மூன்று எரித்த
செய்யார் மேனியனே திகழும் முதுகுன்று அமர்ந்தாய்
பை ஆரும் அரவு ஏர் அல்குலாள்இவள் வாடுகின்றாள்
ஐயா தந்தருளாய் அடியேன் இட்டளம் கெடவே 5

நெடியான் நான்முகனும் இரவியொடும் இந்திரனும்
முடியால் வந்து இறைஞ்ச முதுகுன்றம் அமர்ந்தவனே
படி ஆரும் இயலாள் பரவைஇவள்தன் முகப்பே
அடிகேள் தந்தருளீர் அடியேன் இட்டளம் கெடவே 6

கொந்து அணவும் பொழில் சூழ் குளிர் மா மதில் மாளிகைமேல்
வந்து அணவும் மதி சேர் சடை மா முதுகுன்று உடையாய்
பந்து அணவும் விரலாள் பரவைஇவள்தன் முகப்பே
அந்தணனே அருளாய் அடியேன் இட்டளம் கெடவே 7

பரசு ஆரும் கரவா பதிணெண்கணமும் சூழ
முரசார் வந்து அதிர முதுகுன்றம் அமர்ந்தவனே
விரை சேரும் குழலாள் பரவைஇவள்தன் முகப்பே
அரசே தந்தருளாய் அடியேன் இட்டளம் கெடவே 8

ஏத்தாது இருந்து அறியேன் இமையோர் தனி நாயகனே
மூத்தாய் உலகுக்கு எல்லாம் முதுகுன்றம் அமர்ந்தவனே
பூத்து ஆரும் குழலாள் பரவைஇவள் தன் முகப்பே
கூத்தா தந்து அருளாய் கொடியேன் இட்டளம் கெடவே 9

Koviloor Digital Library

பிறை ஆரும் சடை எம்பெருமான் அருளாய் என்று
முறையால் வந்து அமரர் வணங்கும் முதுகுன்றர்தம்மை
மறையார்தம் குரிசில் வயல் நாவல் ஆரூரன் சொன்ன
இறையார் பாடல் வல்லார்க்கு எளிதாம் சிவலோகம்அதே 10

திருச்சிற்றம்பலம்

39.திருக்கச்சி ஏகம்பம்

திருமுறை : 7/81 இராகம் : காம்போதி பண் : தக்கேசி

இடக்கண்ணில் உள்ள கோளாறு நீங்குவதற்கும், குறைந்த பார்வையை மீண்டும் பெற ஓத வேண்டிய பதிகம்.

திருவாரூரில் பரவை நாச்சியாரைத் திருமணம் செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவொற்றியூரில் சங்கிலி நாச்சியாரை இரண்டாவதாகத் திருமணம் செய்த கொள்கிறார். அத் திருமணத்தின் போது திருவொற்றியூர் இறைவன் முன்னிலையில், "நின்னைப் பிரிய மாட்டேன்" என்று சத்தியம் செய்து கொடுக்கிறார்.

ஆனால் சிறிது காலத்தில் திருவாரூர் இறைவனைத் தரிசிக்கும் ஆசையில் திருவொற்றியூரைவிட்டுச் செல்கிறார். ஊர் எல்லையை அடைந்ததும் அவரது இரு கண்களிலும் பார்வை பறிபோகிறது. மனம் வருந்திய சுந்தரர், காஞ்சிபுரம் சென்று கச்சி ஏகம்பனையும் காமாட்சி அன்னையையும் அவ்வேளையில் அவர் இத்திருப்பதிகத்தைப் பாடி அருளினார்.

இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால் இடக்கண் பார்வைக் குறைபாடு இடக்கண்நோய் முதலியன முற்றிலும் குணமாகும் என்பது திண்ணம்.

Koviloor Digital Library

ஆலந்தான் உகந்து அமுதுசெய்தானை
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏல வார்குழலாள் உமைநங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பன்எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 1

உற்றவர்க்கு உதவும் பெருமானை
ஊர்வது ஒன்று உடையான் உம்பர்கோனைப்
பற்றினார்க்கு என்றும் பற்றவன்தன்னைப்
பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானை
அற்றம் இல் புகழாள் உமைநங்கை
ஆதரித்து வழிபடப்பெற்ற
கற்றைவார்சடைக் கம்பன்எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 2

திரியும் முப்புரந் தீப்பிழம்பாகச்
செங்கண் மால்விடைமேல் திகழ்வானைக்
கரியின் ஈர்உரி போர்த்து உகந்தானைக்
காமனைக் கனலா விழித்தானை
வரி கொள் வெள்வளையாள் உமைநங்கை
மருவி ஏத்தி வழிபடப்பெற்ற
பெரிய கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 3

Koviloor Digital Library

குண்டலந் திகழ் காது உடையானைக்
கூற்று உதைத்த கொடுந்தொழிலானை
வண்டு அலம்பும் மலர்க்கொன்றையினானை
வாள்அரா மதி சேர் சடையானைக்
கெண்டைஅந்தடங்கண் உமைநங்கை
கெழுமி ஏத்தி வழிபடப்பெற்ற
கண்ட நஞ்சு உடைக் கம்பன்எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 4

வெல்லும் வெண்மழு ஒன்று உடையானை
வேலைநஞ்சு உண்ட வித்தகன்தன்னை
அல்லல் தீர்த்து அருள்செய்ய வல்லானை
அருமறைஅவை அங்கம் வல்லானை
எல்லைஇல் புகழாள் உமைநங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 5

திங்கள் தங்கிய சடை உடையானைத்
தேவதேவனைச் செழுங் கடல் வளரும்
சங்கவெண்குழைக் காது உடையானைச்
சாமவேதம் பெரிது உகப்பானை
மங்கைநங்கை மலைமகள் கண்டு
மருவி ஏத்தி வழிபடப்பெற்ற
கங்கையாளனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 6

Koviloor Digital Library

விண்ணவர் தொழுது ஏத்த நின்றானை
வேதந்தான் விரித்து ஓத வல்லானை
நண்ணாரினார்க்கு என்றும் நல்லவன்தன்னை
நாளும் நாம் உகக்கின்ற பிரானை
எண்ணில் தொல்புகழாள் உமைநங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
கண்ணுமூன்று உடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 7

சிந்தித்து என்றும் நினைந்து எழுவார்கள்
சிந்தையில் திகழுஞ் சிவன்தன்னைப்
பந்தித்த வினைப்பற்று அறுப்பானைப்
பாலொடு ஆன்அஞ்சும் ஆட்டு உகந்தானை
அந்தம் இல் புகழாள் உமைநங்கை
ஆதரித்து வழிபடப்பெற்ற
கந்தவார்சடைக் கம்பன்எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 8

வரங்கள் பெற்று உழல் வாள் அரக்கர்தம்
வாலிய புரம்மூன்று எரித்தானை
நிரம்பிய தக்கன்தன் பெருவேள்வி
நிரந்தரஞ் செய்த நிர்க்கண்டகனைப்
பரந்த தொல்புகழாள் உமைநங்கை
பரவி ஏத்தி வழிபடப்பெற்ற
கரங்கள் எட்டு உடைக் கம்பன்எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 9

Koviloor Digital Library

எள்கல் இன்றி இமையவர்கோனை
ஈசனை வழிபாடு செய்வாள் போல்
உள்ளத்து உள்கி உகந்து உமைநங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 10

பெற்றம் ஏறு உகந்து ஏற வல்லானைப்
பெரிய எம்பெருமான் என்று எப்போதும்
கற்றவர் பரவப்படுவானைக்
காணக் கண் அடியேன் பெற்றது என்று
கொற்றவன் கம்பன் கூத்தன் எம்மானைக்
குளிர்பொழில் திரு நாவல் ஆரூரன்
நல் தமிழ் இவை ஈர் ஐந்தும் வல்லார்
நன்நெறி உலகு எய்துவர்தாமே 11

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

40. திருவாரூர்

திருமுறை 7/51 இராகம் : மத்திமாவதி பண் : செந்துருத்தி
இறைவர் : வன்மீகநாதர் இறைவி : அல்லியங்கோதை

வலக்கண்ணில் உள்ள கோளாறு நீங்குவதற்கு

காஞ்சிபுரத்தில் இடக்கண் பார்வை பெற்ற சுந்தரர் பிறகு பல தலங்களுக்கும் சென்று திருவாரூரை அடைந்தார். அங்கு உறைந்தருளும் தியாகேசப் பெருமானை வேண்டி இத் திருப்பதிகத்தைப் பாடியருளினார். மறுகணமே அவரது வலக் கண்ணிலும் பார்வை வந்தது. இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால் வலக்கண் பார்வைக் குறைபாடு, வலக்கண் நோய் நீங்கும் என்பது திண்ணம்.

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப் போல் உள்ளே கனன்று முகத்தால் மிக வாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங்கு இருப்பீர் திரு ஆரூரீர் வாழ்ந்துபோதீரே 1

விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்தது இல்லை கொத்தை ஆக்கினீர்
எற்றுக்கு அடிகேள் என் கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாராதொழிந்தால் வாழ்ந்துபோதீரே 2

அன்றில் முட்டாது அடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே
கன்று முட்டி உண்ணச் சுரந்த காலிஅவை போல
என்றும் முட்டாப் பாடும் அடியார் தம் கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்துபோதீரே 3

Koviloor Digital Library

துருத்தி உறைவீர் பழனம் பதியாச் சோற்றுத்துறை ஆள்வீர்
இருக்கை திரு ஆரூரே உடையீர் மனமே என வேண்டா
அருத்தி உடைய அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமைப் பணித்தால் வாழ்ந்துபோதீரே 4

செந் தண் பவளந் திகழுஞ் சோலை இதுவோ திரு ஆரூர்
எந்தம் அடிகேள் இதுவே ஆமாறு உமக்கு ஆட்பட்டோர்க்கு
சந்தம் பலவும் பாடும் அடியார் தங் கண் காணாது
வந்து எம்பெருமான் முறையோ என்றால் வாழ்ந்துபோதீரே 5

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை சேருந் திரு ஆரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன் போல் மாலைப் புரிபுன்சடையீரே
தனத்தால் இன்றித் தாந்தாம் மெலிந்து தங் கண் காணாது
மனத்தால் வாடி அடியார் இருந்தால் வாழ்ந்துபோதீரே 6

ஆயம் பேடை அடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே
ஏ எம்பெருமான் இதுவே ஆமாறு உமக்கு ஆட்பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனம் காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்துபோதீரே 7

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க் கலந்து சொல் ஆகி
இழியாக் குலத்தில் பிறந்தோம் உம்மை இகழ்ந்து ஏத்துவோம்
பழிதான் ஆவது அறியீர் அடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணாது அலமந்து இருந்தால் வாழ்ந்துபோதீரே 8

பேயோடேனும் பிரிவு ஒன்று இன்னாது என்பர் பிறர்எல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதான்அன்றோ கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்கு ஆட்பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திரு ஆரூரீர் வாழ்ந்துபோதீரே 9

Koviloor Digital Library

செருந்தி செம்பொன்மலருஞ் சோலை இதுவோ திரு ஆரூர்
பொருந்தித் திரு மூலட்டானமே இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றும் கிடந்தும் உம்மை இகழாது ஏத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கு ஒன்று உரைத்தால் வாழ்ந்துபோதீரே 10

திருச்சிற்றம்பலம்

41. திருக்கச்சூர் ஆலக்கோயில்

பண் : கொல்லிக்கௌவாணம் இராகம் : மத்திமாவதி

முதுவாய் ஓரி கதற முதுகாட்டு
எரி கொண்டு ஆடல் முயல்வானே
மது வார் கொன்றைப்புதுவீ சூடும்
மலையான்மகள்தன் மணவாளா
கதுவாய்த்தலையில் பலி நீ கொள்ளக்
கண்டால் அடியார் கவலாரே
அதுவே ஆமாறு இதுவோ கச்சூர்
ஆலக்கோயில் அம்மானே. 1

கச்சு ஏர் அரவு ஒன்று அரையில் அசைத்துக்
கழலுஞ் சிலம்புங் கலிக்கப் பலிக்கு என்று
உச்சம்போதா ஊர்ஊர் திரியக்
கண்டால் அடியார் உருகாரே
இச்சை அறியோம் எங்கள் பெருமான்
ஏழ்ஏழ்பிறப்பும் எனை ஆள்வாய்
அச்சம் இல்லாக் கச்சூர் வடபால்
ஆலக்கோயில் அம்மானே. 2

Koviloor Digital Library

சாலக் கோயில் உள நின் கோயில்
அவை என் தலைமேல் கொண்டாடி
மாலைத் தீர்ந்தேன் வினையும் துரந்தேன்
வானோர் அறியா நெறியானே
கோலக் கோயில் குறையாக் கோயில்
குளிர் பூங் கச்சூர் வடபாலை
ஆலக்கோயில் கல்லால்நிழல்கீழ்
அறங்கள் உரைத்த அம்மானே. 3

விடையும் கொடியும் சடையும் உடையாய்
மின் நேர் உருவத்து ஒளியானே
கடையும் புடை சூழ் மணி மண்டபமும்
கன்னிமாடம் கலந்து எங்கும்
புடையும் பொழிலும் புனலும் தழுவிப்
பூமேல் திருமாமகள் புல்கி
அடையும் கழனிப் பழனக் கச்சூர்
ஆலக்கோயில் அம்மானே. 4

மேலைவிதியே விதியின் பயனே
விரவார் புரம்மூன்று எரிசெய்தாய்
காலை எழுந்து தொழுவார்தங்கள்
கவலை களைவாய் கறைக்கண்டா
மாலை மதியே மலைமேல் மருந்தே
மறவேன் அடியேன் வயல் சூழ்ந்த
ஆலைக் கழனிப் பழனக் கச்சூர்
ஆலக்கோயில் அம்மானே. 5

Koviloor Digital Library

பிறவாய் இறவாய் பேணாய் மூவாய்
பெற்றம் ஏறிப் பேய் சூழ்தல்
துறவாய் மறவாய் சுடுகாடு என்றும்
இடமாக்கொண்டு நடமாடி
ஒறுவாய்த்தலையில் பலி நீ கொள்ளக்
கண்டால் அடியார் உருகாரே
அறவே ஒழியாய் கச்சூர் வடபால்
ஆலக்கோயில் அம்மானே. 6

பொய்யே உன்னைப் புகழ்வார் புகழ்ந்தால்
அதுவும் பொருளாக் கொள்வானே
மெய்யே எங்கள் பெருமான் உன்னை
நினைவார் அவரை நினைகண்டாய்
மை யார் தடங்கண் மடந்தை பங்கா
கங்கார் மதியஞ் சடை வைத்த
ஐயா செய்யாய் வெளியாய் கச்சூர்
ஆலக்கோயில் அம்மானே. 7

ஊனைப் பெருக்கி உன்னை நினையாது
ஒழிந்தேன் செடியேன் உணர்வுஇல்லேன்
கானக் கொன்றை கமழ மலரும்
கடிநாறு உடையாய் கச்சூராய்
மானைப் புரையும் மடமென்நோக்கி
மடவாள் அஞ்ச மறைத்திட்ட
ஆனைத்தோலாய் ஞானக்கண்ணாய்
ஆலக்கோயில் அம்மானே. 8

Koviloor Digital Library

காதல்செய்து களித்துப் பிதற்றிக்
கடமாமலர் இட்டு உனை ஏத்தி
ஆதல் செய்யும் அடியார் இருக்க
ஐயம் கொள்வது அழகிதே
ஓதக் கண்டேன் உன்னை மறவேன்
உமையாள்கணவா எனை ஆள்வாய்
ஆதற் கழனிப் பழனக் கச்சூர்
ஆலக்கோயில் அம்மானே. 9

அன்னம் மன்னும் வயல் சூழ் கச்சூர்
ஆலக்கோயில் அம்மானை
உன்ன முன்னு மனத்து ஆரூரன்
ஆரூரன் பேர் முடி வைத்த
மன்னு புலவன் வயல் நாவலர்கோன்
செஞ்சொல் நாவன் வன்தொண்டன்
பன்னு தமிழ்நூல்மாலை வல்லார்
அவர் என் தலைமேல் பயில்வாரே. 10

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

42. திருநாகைக்காரோணம்

இறைவன் - காயாரோகணேசுவரர் இறைவி - நீலாயதாட்சி

பண் : கொல்லிக்கொளவாணம் இராகம் : நவரோஸ்

சப்த விடஸ்தலமான திருநாகைக்காரோணத்தில் சுந்தரர் பெருமானிடம் தோழமை உணர்வுடன் உரிமையாக. உணர்ச்சி பெருக்குடன் உள்ள உணவு உடுக்க உடை, இருக்க இடம் வேண்டி அற்புதமாய் பாடிய திருப்பாடல் இது.

பத்துஊர் புக்கு இரந்து உண்டு பலபதிகம் பாடிப்
பாவையாரைக் கிறி பேசிப் படிறுஆடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பு அணிந்து சே ஏறித் திரிவீர்
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கு ஒரு நாள் இரங்கீர்
முத்து ஆரம் இலங்கி மிளிர் மணிவயிரக்கோவை
அவை பூணத் தந்துஅருளி மெய்க்கு இனிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்து அருளவேண்டும்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 1

வேம்பினொடு தீங்கரும்பு விரவி எனைத் தீற்றி
விருத்தி நான் உமை வேண்டத் துருத்தி புக்கு அங்கு இருந்தீர்
பாம்பினொடு படர்சடைகள்அவை காட்டி வெருட்டிப்
பகட்ட நான் ஒட்டுவனோ பலகாலும் உழன்றேன்
சேம்பினொடு செங்கழுநீர் தண் கிடங்கில் திகழுந்
திரு ஆரூர் புக்கு இருந்த தீவண்ணர் நீரே
காம்பினொடு நேத்திரங்கள் பணித்து அருளவேண்டுங்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 2

Koviloor Digital Library

பூண்பது ஓர் இள ஆமை பொருவிடை ஒன்று ஏறிப்
பொல்லாத வேடங் கொண்டு எல்லாருங் காணப்
பாண் பேசிப் படுதலையிற் பலி கொள்கை தவிரீர்
பாம்பினொடு படர்சடைமேல் மதி வைத்த பண்பீர்
வீண் பேசி மடவார் கை வெள்வளைகள் கொண்டால்
வெற்பு அரையன்மடப்பாவை பொறுக்குமோ சொல்லீர்
காண்பு இனிய மணி மாடம் நிறைந்த நெடுவீதிக்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 3

விட்டது ஓர் சடை தாழ வீணை விடங்காக
வீதி விடை ஏறுவீர் வீண் அடிமை உகந்தீர்
துட்டர்ஆயின பேய்கள் சூழ நடம் ஆடிச்
சுந்தரராய்த் தூ மதியஞ் சூடுவது சுவண்டே
வட்டவார்குழல் மடவார்தம்மை மயல் செய்தல்
மா தவமோ மாதிமையோ வாட்டம்எலாம் தீரக்
கட்டி எமக்கு ஈவதுதான் எப்போது சொல்லீர்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 4

மிண்டாடித் திரிதந்து வெறுப்பனவே செய்து
வினைக்கேடுபல பேசி வேண்டியவா திரிவீர்
தொண்டாடித் திரிவேனைத் தொழும்பு தலைக்கு ஏற்றுஞ்
சுந்தரனே கந்தம் முதல் ஆடை ஆபரணம்
பண்டாரத்தே எனக்குப் பணித்து அருளவேண்டும்
பண்டுதான் பிரமாணம் ஒன்று உண்டே நும்மைக்
கண்டார்க்குங் காண்பு அரிதாய்க் கனல் ஆகி நிமிர்ந்தீர்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 5

Koviloor Digital Library

இலவஇதழ்வாய் உமையோடு எருது ஏறிப் பூதம்
இசை பாட இடு பிச்சைக்கு எச்சு உச்சம்போது
பலஅகம் புக்கு உழிதர்வீர் பட்டோடு சாந்தம்
பணித்து அருளாது இருக்கின்ற பரிசு என்ன படிறோ
உலவு திரைக் கடல் நஞ்சை அன்று அமரர் வேண்ட
உண்டு அருளிச்செய்தது உமக்கு இருக்க ஒண்ணாது இடவே
கலவமயில் இயலவர்கள் நடமாடுஞ் செல்வக்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 6

தூசு உடைய அகல் அல்குல் தூ மொழியாள் ஊடல்
தொலையாத காலத்து ஓர் சொற்பாடாய் வந்து
தேசு உடைய இலங்கையர்கோன் வரை எடுக்க அடர்த்துத்
திப்பிய கீதம் பாட தேரொடு வாள் கொடுத்தீர்
நேச உடை அடியவர்கள் வருந்தாமை அருந்த
நிறை மறையோர் உறை வீழிமிழலைதனில் நித்தல்
காசு அருளிச்செய்தீர் இன்று எனக்கு அருளவேண்டுங்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 7

மாற்றம் மேல் ஒன்று உரையீர் வாளா நீர் இருந்தீர்
வாழ்விப்பன் என ஆண்டீர் வழி அடியேன் உமக்கு
ஆற்றவேல் திரு உடையீர் நல்கூர்ந்தீர் அல்லீர்
அணி ஆரூர் புகப் பெய்த அரு நிதியம்அதனில்
தோற்றம் மிகு முக்கூற்றில் ஒரு கூறு வேண்டுந்
தாரீரேல் ஒரு பொழுதும் அடி எடுக்கல் ஒட்டேன்
காற்று அனைய கடும் பரிமா ஏறுவது வேண்டுங்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 8

Koviloor Digital Library

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி
மலைஅரையன்பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலி உண் பெருவயிறன் கணபதி ஒன்று அறியான்
எம்பெருமான் இது தகவோ இயம்பி அருள்செய்யீர்
திண்ணென என் உடல் விருத்தி தாரீரே ஆகில்
திருமேனி வருந்தவே வளைக்கின்றேன் நாளைக்
கண்ணறையன் கொடும்பாடன் என்று உரைக்க வேண்டா
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 9

மறி ஏறு கரதலத்தீர் மாதிமையேல் உடையீர்
மா நிதியம் தருவன் என்று வல்லீராய் ஆண்டீர்
கிறி பேசிக் கீழ்வேளூர் புக்கு இருந்தீர் அடிகேள்
கிறி உம்மால் படுவேனோ திருஆணை உண்டேல்
பொறி விரவு நற் புகர் கொள் பொற் சுரிகை மேல் ஓர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்துஅருளவேண்டும்
கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டுங்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 10

பண் மயத்த மொழிப் பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே மற்றாரை உடையேன்
உண் மயத்த உமக்கு அடியேன் குறை தீர்க்கவேண்டும்
ஒளிமுத்தம் பூண் ஆரம் ஒண் பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டுங்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீர் என்று
அண்மயத்தால் அணி நாவல் ஆரூரன் சொன்ன
அருந்தமிழ்கள்இவை வல்லார் அமருலகு ஆள்பவரே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

43.திருநொடித்தான்மலை

இறைவன் - திருக்கயிலாய நாதர் இறைவி - பார்வதிஅம்மை

திருமுறை: 7/96 இராகம் : ஆகிரி பண் : பஞ்சமம்

தன் தோழனாம் அன்பிற்கினிய தொண்டரை சீரும் சிறப்பும் பெற்ற சுந்தரரை சிவபெருமான் திருஅஞ்சைக் களத்தில் இருந்து மத்த யானையை அனுப்பி, கயிலாயத்திற்கு அழைத்திட இந்திரன், திருமால், பிரமன் மற்றுமுள்ள தேவர்கள் எல்லாம் எதிர்கொண்டு இந்த மத்தயானைகள் மேல் வருபவர் யார் என வினவிட சிவபெருமானே, இவர் நமதமர் ஊரன் என்று அன்பிற்கினிய உரிமையுடன் அழைத்துக் கொண்ட திருப்பாடல் இது.

தான்எனை முன் படைத்தான் அது அறிந்து தன் பொன்அடிக்கே
நான் என பாடல் அந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வான் எனை வந்து எதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊன் உயிர் வேறு செய்தான் நொடித்தான்மலை உத்தமனே 1

ஆனை உரித்த பகை அடியேனொடு மீளக்கொலோ
ஊனை உயிர் வெருட்டி ஒள்ளியானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலம் செய்து எனை ஏற வைக்க
ஆனை அருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே 2

மந்திரம் ஒன்று அறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்து அடியேன்
சுந்தரவேடங்களால் துரிசே செயும் தொண்டன் எனை
அந்தர மால்விசும்பில் அழகு ஆனை அருள்புரிந்த
துந் தரமோ நெஞ்சமே நொடித்தான்மலை உத்தமனே 3

வாழ்வை உகந்த நெஞ்சே மடவார்தங்கள் வல்வினைப் பட்டு
ஆழ முகந்த என்னை அது மாற்றி அமரர்எல்லாம்
சூழ அருள் புரிந்து தொண்டனேன் பரம்அல்லது ஒரு
வேழம் அருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே 4

Koviloor Digital Library

மண்ணுலகில் பிறந்து நும்மை வாழ்த்தும் வழிஅடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன் இன்று கண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள் விரும்ப வெள்ளையானையின் மேல்
என் உடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை உத்தமனே 5

அஞ்சினை ஒன்றி நின்று அலர்கொண்டு அடி சேர்வறியா
வஞ்சனை என் மனமே வைகி வானநன் நாடர்முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்டனேன் பரம் அல்லது ஒரு
வெஞ்சின ஆனை தந்தான் நொடித்தான்மலை உத்தமனே 6

நிலை கெட விண் அதிர நிலம் எங்கும் அதிர்ந்து அசைய
மலைஇடை யானை ஏறி வழியே வருவேன் எதிரே
அலைகடலால் அரையன் அலர் கொண்டு முன் வந்து இறைஞ்ச
உலை அணையாத வண்ணம் நொடித்தான்மலை உத்தமனே 7

அர ஒலி ஆகமங்கள் அறிவார் அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்எலாம் வந்து எதிர்ந்து இசைப்ப
வரம் மலி வாணன் வந்து வழிதந்து எனக்கு ஏறுவது ஓர்
சிரம் மலி யானை தந்தான் நொடித்தான்மலை உத்தமனே 8

இந்திரன் மால் பிரமன் எழிலார் மிகு தேவர் எல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை அருள்புரிந்து
மந்திர மா முனிவர் இவன் ஆர் என எம்பெருமான்
நம்தமர் ஊரன் என்றான் நொடித்தான்மலை உத்தமனே 9

ஊழிதொறுஊழி முற்றும் உயர் பொன் நொடித்தான்மலையைச்
சூழ் இசை இன்கரும்பின் சுவை நாவலஊரன் சொன்ன
ஏழ் இசை இன்தமிழால் இசைந்து ஏத்திய பத்தினையும்
ஆழி கடல் அரையா அஞ்சையப்பர்க்கு அறிவிப்பதே 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

44. சிவபுராணம்

திருமுறை 8/1 இராகம் : மோகனம்

பகைவர்களால் ஏற்படும் விரோதம், தொல்லைகள் அனைத்தும் நீங்க ஓத வேண்டிய பதிகம்.

மாணிக்கவாசகப்பெருமான் பாடியருளிய திருவாசகம் உள்ளத்தை உருக்கும் தன்மை கொண்டது. திருவாசகத்தின் முதற்பாடல் 'சிவபுராணம்' ஆகும். இது திருப்பெருந்துறை தலத்தில் பாடியருளப்பட்டது.

இத்திருப்பதிகத்தை தினமும் பாராயணம் செய்து வந்தால் வாழ்வில் அனைத்து நலன்களும் கிட்டும்; மனக்கவலை நீங்கும்; பாராயணம் செய்வோரின் இல்லமே சகல செல்வங்களுடன் திகழும் என்பது திண்ணம்.

தான் உடல் பொருள், ஆவி என்கிற மூன்றிலும் சிவபெருமானே என எண்ணி திருத்தில்லை வந்து கூத்தப்பிரானின் திருவருளையே நினைந்து மனத்தின் கண் ஒழுகி இருந்தவரின் நிலைமையை வெளி உலகிற்கு கொணர சிவபெருமானே, மணிவாசகரின் மாணிக்க வாசமான சிவபுராணம் எனும் ஞானத்தேடலை எங்கம் என்றும் எதிலும் எளிதாய் பாட வைத்த அரிய எளிய 'சிவபுராணம்' திருச்சிற்றம் உடையாள் எனக் கையொப்பமிட்டு வைக்கப்பெற்றது. உயிர் இறைவனை அடையுடம் வழியினையும் சிவபெருமானின் கருணையால் அவன்தாள் வணங்குதல் பொருட்டும் அல்லல் பிறவி அறுத்து சிவனடியே சேரும் தன்மை பற்றியும், 'சிவயோக' நிலைக்கு எல்லா உயிர்களும் பயன்படும் வழி நின்றதே சிவபுராணம்.

Koviloor Digital Library

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

நமச்சிவாய வா ஆழ்க ! நாதன் தாள் வாழ்க !
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்றுஅண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன்அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் மோய உரைப்பன்யான்

Koviloor Digital Library

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்த எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலாவிடைப்பாக வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப்பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

Koviloor Digital Library

கறந்தபால் கன்னலோடு நெய்கலந்தாற் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்து வனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆரூயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

Koviloor Digital Library

அன்பருக்குஅன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்துவினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

45. திருச் சாழல்

திருமுறை 8/12 இராகம் : மோகனம்

இறைவர் : திருமூலநாதர் இறைவி : உமையம்மை

ஊமை, திக்குவாய் நீங்கவும் சிறந்த பேச்சு வன்மை கிடைக்கவும் ஓத வேண்டிய பதிகம்

மாணிக்கவாசகப்பெருமான் பாடியருளிய இத்திருப்பதிகம் 'திருச்சாழல்' எனப்படும். மாணிக்கவாசகர் தில்லையில் ஊருக்கு வெளியே குடில் அமைத்து தங்கியிருந்தார். அவ்வேளையில் ஈழநாட்டு மக்கன் பிறவி ஊமையான தனது மகள் மற்றும் பௌத்த குருவுடன் தில்லைக்கு வந்து சேர்ந்தான். பௌத்த குரு, தில்லைவாழ் அந்தணர்களுடன் வாதம் புரியவிருந்தார்.

அன்றிரவு சிவபெருமான் தில்லைவாழ் அந்தணர்களின் கனவில் தோன்றி, தில்லைக்கு வெளியே தங்கியிருக்கும் மாணிக்க வாசகப்பெருமானைப் பற்றி எடுத்துக்கூறி அவரை அழைத்து வந்து வாதம் புரிய வைக்குமாறு பணித்தார். அதன்படி தில்லைவாழ் அந்தணர்களும் மாணிக்கவாசகரை அழைத்துச் சென்றனர்.

மாணிக்கவாசகர் பௌத்தகுருவுடன் வாதம் புரிந்தார். வாதத்தின்போது அவர் பாடியருளியதே இத்திருப்பதிகம் ஆகும். மாணிக்கவாசகப்பெருமான் வாதத்தில் வென்றார். இத்திருப்பதிகம் பாடி முடிக்கப்பட்டவுடன் ஈழ மன்னனின் மகளின் ஊமைத்தன்மை அகன்று, அவள் பேசலானாள். மன்னனும் பௌத்த மதத்தைவிட்டு சைவ மதத்தைத் தழுவலானான்.

இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால் ஊமை, திக்குவாய் முதலிய குறைபாடுகள் நீங்கும் என்பது திண்ணம்.

12

Koviloor Digital Library

பூசுவதும் வெண்ணீறு, பூண்பதுவும் பொங்கு அரவம்,
பேசுவதும் திருவாயால் மறை போலும்? காண், ஏடீ!
பூசுவதும், பேசுவதும், பூண்பதுவும், கொண்டு என்னை?
ஈசன் அவன், எவ் உயிர்க்கும் இயல்பு ஆனான் சாழலோ! 1

என் அப்பன், எம் பிரான், எல்லார்க்கும் தான் ஈசன்;
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளும் அது என்? ஏடீ!
மன்னும் கலை, துன்னுபொருள் மறை நான்கே, வான் சரடா,
தன்னையே கோவணமா, சாத்தினன் காண் சாழலோ! 2

கோயில் சுடுகாடு, கொல் புலித் தோல் நல் ஆடை,
தாயும் இலி, தந்தை இலி, தான் தனியன் காண்; ஏடி!
தாயும் இலி, தந்தை இலி, தான் தனியன் ஆயிடினும்,
காயில் உலகு அனைத்தும் கல் பொடி காண் சாழலோ! 3

அயனை, அனங்கனை, அந்தகனை, சந்திரனை,
வயனங்கள் மாயா வடுச் செய்தான்; காண் ஏடீ!
நயனங்கள் மூன்று உடைய நாயகனே தண்டித்தால்,
சயம் அன்றோ வானவர்க்கு, தாழ் குழலாய் சாழலோ! 4

தக்கனையும், எச்சனையும், தலை அறுத்து, தேவர் கணம்
தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்ததுதான் என்? ஏடீ!
தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்தருளி அருள் கொடுத்து அங்கு
எச்சனுக்கு மிகைத் தலை மற்று அருளினன் காண்; சாழலோ! 5

அலரவனும், மாலவனும், அறியாமே, அழல் உரு ஆய்
நிலம் முதல், கீழ் அண்டம் உற, நின்றது தான் என்? ஏடீ!
நிலம் முதல், கீழ் அண்டம் உற, நின்றிலனேல், இருவரும் தம்
சலமுகத்தால் ஆங்காரம் தவிரார் காண் சாழலோ! 6

Koviloor Digital Library

மலை மகளை ஒரு பாகம் வைத்தலுமே, மற்று ஒருத்தி
சல முகத்தால், அவன் சடையில் பாயும் அது என்? ஏடி!
சல முகத்தால் அவன் சடையில் பாய்ந்திலனேல் தரணி எல்லாம்
பில முகத்தே புகப் பாய்ந்து, பெரும் கேடு ஆம் சாழலோ! 7

கோலாலம் ஆகி, குரை கடல்வாய், அன்று எழுந்த
ஆலாலம் உண்டான்; அவன் சதுர் தான் என்? ஏடீ!
ஆலாலம் உண்டிலனேல் அன்று அயன் மால் உள்ளிட்ட
மேல் ஆய தேவர் எல்லாம் வீடுவர் காண் சாழலோ! 8

தென் பால் உகந்து ஆடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண் பால் உகந்தான், பெரும் பித்தன் காண் ஏடீ!
பெண் பால் உகந்திலனேல், பேதாய், இரு நிலத்தோர்
விண் பால் யோகு எய்தி வீடுவர் காண் சாழலோ! 9

தான் அந்தம் இல்லான், தனை அடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான், காண் ஏடீ!
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்த திருவடிகள்,
வான் உந்து தேவர்கட்கு ஓர் வான் பொருள் காண் சாழலோ! 10

நங்காய்! இது என்ன தவம்? நரம்போடு, எலும்பு அணிந்து,
கங்காளம் தோள்மேலே காதலித்தான், காண் ஏடீ!
கங்காளம் ஆமா கேள் காலஅந்தரத்து இருவர்
தம் காலம் செய்யத் தரித்தனன் காண் சாழலோ! 11

கான் ஆர் புலித் தோல் உடை; தலை ஊண்; காடு பதி;
ஆனால், அவனுக்கு இங்கு ஆட்படுவார் ஆர்? ஏடி!
ஆனாலும் கேளாய்; அயனும், திருமாலும்,
வான் நாடர் கோவும், வழி அடியார் சாழலோ! 12

Koviloor Digital Library

மலை அரையன் பொன் பாவை, வாள் நுதலாள் பெண் திருவை
உலகு அறியத் தீ வேட்டான் என்னும் அது என்? ஏடீ!
உலகு அறியத் தீ வேளாது ஒழிந்தனனேல் உலகு அனைத்தும்
கலை நவின்ற பொருள்கள் எல்லாம் கலங்கிடும் காண் சாழலோ! 13

தேன் புக்க தண் பணை சூழ் தில்லைச் சிற்றம்பலவன்,
தான் புக்கு நட்டம் பயிலும் அது என்? ஏடி!
தான் புக்கு நட்டம் பயின்றிலனேல், தரணி எல்லாம்,
ஊன் புக்க வேல் காளிக்கு ஊட்டு ஆம் காண் சாழலோ!14

கட கரியும், பரி மாவும், தேரும் உகந்து ஏறாதே,
இடபம் உகந்து ஏறிய ஆறு, எனக்கு அறிய இயம்பு ஏடீ!
தட மதில்கள் அவை மூன்றும் தழல் எரித்த அந் நாளில்
இடபம் அது ஆய்த் தாங்கினான் திருமால் காண் சாழலோ! 15

நன்றாக நால்வர்க்கும் நான் மறையின் உட்பொருளை,
அன்று, ஆலின் கீழ் இருந்து, அங்கு, அறம் உரைத்தான் காண் ஏடீ!
அன்று ஆலின் கீழ் இருந்து அங்கு, அறம் உரைத்தான், ஆயிடினும்
கொன்றான் காண் புரம் மூன்றும் கூட்டோடே சாழலோ! 16

அம்பலத்தே கூத்து ஆடி அமுது செயப் பலி திரியும்
நம்பனையும் தேவன் என்று நண்ணும் அது என்? ஏடீ?
நம்பனையும் ஆமா கேள்; நான் மறைகள் தாம் அறியா,
'எம் பெருமான், ஈசா' என்று ஏத்தின காண்; சாழலோ! 17

சலம் உடைய சலந்தரன் தன் உடல் தடிந்த நல் ஆழி,
நலம் உடைய நாரணற்கு, அன்று, அருளிய ஆறு என்? ஏடீ!
நலம் உடைய நாரணன், தன் நயனம் இடந்து அரன் அடிக்கீழ்
அலர் ஆக இட, ஆழி அருளினன் காண் சாழலோ! 18

Koviloor Digital Library

அம்பரம் ஆம் புள்ளித் தோல்; ஆலாலம் ஆர் அமுதம்
எம் பெருமான் உண்ட சதுர், எனக்கு அறிய இயம்பு ஏடீ!
எம் பெருமான் ஏது உடுத்து, அங்கு ஏது அமுது செய்திடினும்
தம் பெருமை தான் அறியாத் தன்மையன் காண் சாழலோ! 19

அரும் தவருக்கு, ஆலின் கீழ் அறம் முதலா நான்கினையும்
இருந்து, அவருக்குஅருளும் அது எனக்கு அறிய இயம்பு ஏடீ!
அரும் தவருக்கு, அறம் முதுல் நான்கு அன்று அருளிச் செய்திலனேல்
திருந்த அவருக்கு உலகு இயற்கை தெரியா காண் சாழலோ! 20

திருச்சிற்றம்பலம்

46. திரு உந்தியார்

திருமுறை 8/14 பதிகம் 14

விரோதிகளை அடக்கி வெற்றி பெற ஓத வேண்டிய பதிகம்.

மாணிக்கவாசகப்பெருமான் பாடியருளிய 'திருவுந்தியார்' என்னும் இவ்விருபது பாடல்களிலும் சிவபெருமானின் வெற்றி கூறப்பட்டுள்ளது. இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்து வந்தால், பகைமை எதிரிகள் விலகி முழுமையான வெற்றி கிட்டும் என்பது திண்ணம்.

வளைந்தது வில்லு! விளைந்தது பூசல்!
உளைந்தன முப் புரம் உந்தீ பற!
ஒருங்கு உடன் வெந்தவாறு உந்தீ பற! 1

ஈர் அம்பு கண்டிலம்! ஏகம்பர் தம் கையில்
ஓர் அம்பே முப் புரம் உந்தீ பற!
ஒன்றும் பெரு மிகை உந்தீ பற! 2

Koviloor Digital Library

தச்சு விடுத்தலும் தாம் அடி யிட்டலும்!
அச்சு முறிந்தது என்று உந்தீ பற!
அழிந்தன முப் புரம் உந்தீ பற! 3

உய்ய வல்லார் ஒரு மூவரைக் காவல் கொண்டு
எய்ய வல்லானுக்கே உந்தீ பற!
இள முலை பங்கன் என்று உந்தீ பற! 4

சாடிய வேள்வி சரிந்திடத், தேவர்கள்
ஓடியவா பாடி உந்தீ, பற!
உருத்திர நாதனுக்கு உந்தீ பற! 5

ஆவா ! திருமால் அவிப் பாகம் கொண்டு அன்று
சாவாது இருந்தான் என்று உந்தீ பற!
சதுர் முகன் தாதை என்று உந்தீ பற! 6

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தான் என்று உந்தீ பற!
கலங்கிற்று வேள்வி என்று உந்தீ பற! 7

பார்ப்பதியைப் பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பது என்னே? ஏடி! உந்தீ பற!
பணை முலை பாகனுக்கு உந்தீ பற! 8

புரந்தரனார் ஒரு பூங் குயில் ஆகி
மரந்தனில் ஏறினார் உந்தீ பற!
வானவர் கோன் என்றே உந்தீ பற! 9

வெஞ்சின வேள்வி வியாத்திரனார் தலை
துஞ்சினவா பாடி உந்தீ பற!
தொடர்ந்த பிறப்பு அற உந்தீ பற! 10

Koviloor Digital Library

ஆட்டின் தலையை விதிக்குத் தலை ஆகக்
கூட்டியவா பாடி உந்தீ பற!
கொங்கை குலுங்க நின்று உந்தீ பற! 11

உண்ணப் புகுந்த பகன் ஒளித்து ஓடாமே
கண்ணைப் பறித்தவாறு உந்தீ பற!
கருக் கெட, நாம் எலாம் உந்தீ பற! 12

நாமகள் நாசி சிரம் பிரமன் பட
சோமன் முகம் நெரித்து உந்தீ பற!
தொல்லை வினை கெட உந்தீ பற! 13

நான்மறையோனும் மகத்தியமான் பட,
போம் வழி தேடும் ஆறு உந்தீ பற!
புரந்தரன் வேள்வியில் உந்தீ பற! 14

சூரியனார் தொண்டை வாயினில் பற்களை
வாரி நெரித்தவாறு உந்தீ பற!
மயங்கிற்று வேள்வி என்று உந்தீ பற! 15

தக்கனார் அன்றே தலை இழந்தார் தக்கன்
மக்களைச் சூழ நின்று உந்தீ பற!
மடிந்தது வேள்வி என்று உந்தீ பற! 16

பாலகனார்க்கு அன்று பால் கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே! உந்தீ பற!
குமரன் தன் தாதைக்கே உந்தீ பற! 17

நல்ல மலரின்மேல் நான் முகனார் தலை
ஒல்லை அரிந்தது என்று உந்தீ பற!
உகிரால் அரிந்தது என்று உந்தீ பற! 18

Koviloor Digital Library

தேரை நிறுத்தி, மலை எடுத்தான் சிரம்
ஈர் ஐந்தும் இற்றவாறு உந்தீ பற!
இருபதும் இற்றது என்று உந்தீ பற! 19

ஏகாசம் இட்ட இருடிகள் போகாமல்
ஆகாசம் காவல் என்று உந்தீ பற!
அதற்கு அப்பாலும் காவல் என்று உந்தீ பற! 20

திருச்சிற்றம்பலம்

இது சில வெளியீடுகளில் காணப்பெறாது.

47. அருள் பத்து

திருமுறை 8/29 இராகம்: மோகனம் பதிகம் 29

இன்ப மணிவாசகரின் 'சோதியோ சுடரே' எனும் அருட்பாடலில் சோதியும் சுடரும் விளக்குமாய் எங்கும் நிறைந்து நிற்கும் எம்பெருமான் சிவபெருமானின் கருணையை வியந்து திருஅண்ணாமலையில் ஆதியே என்று ஆதரித்து அருள வேண்டும் என்கிற விண்ணப்பத்தினியே வைக்கும் அருள் பாடல்.

சோதியே! சுடரே! சூழ் ஒளி விளக்கே!
சுரி சூழல், பணை முலை மடந்தை
பாதியே! பரனே! பால் கொள் வெண்ணீ நீற்றாய்!
பங்கயத்து அயனும், மால் அறியா
நீதியே! செல்வத் திருப்பெருந்துறையில்
நிறை மலர்க் குருந்தம் மேவிய சீர்
ஆதியே! அடியேன் ஆதரித்து அழைத்தால்,
'அதெந்துவே !' என்று அருளாயே! 1

Koviloor Digital Library

நிருத்தனே! நிமலா! நீற்றனே! நெற்றிக்
கண்ணனே! விண்ணுளோர் பிரானே!
ஒருத்தனே! உன்னை, ஒலம் இட்டு அலறி,
உலகு எலாம் தேடியும் காணேன்;
திருத்தம் ஆம் பொய்கைத் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம்மேவிய சீர்
அருத்தனே! அடியேன் ஆதரித்து அழைத்தால்.
'அதெந்துவே !' என்று அருளாயே! 2

எங்கள் நாயகனே! என் உயிர்த் தலைவா!
ஏல வார் குழலிமார் இருவர்
தங்கள் நாயகனே! தக்க நல் காமன்
தனது உடல் தழல் எழ விழித்த
செங்கண் நாயகனே! திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம்மேவிய சீர்
அங்கணா! அடியேன் ஆதரித்து அழைத்தால்,
'அதெந்துவே !' என்று அருளாயே! 3

கமல நான் முகனும், கார் முகில் நிறத்துக்
கண்ணனும், நண்ணுதற்கு அரிய
'விமலனே, எமக்கு வெளிப்படாய்' என்ன,
வியன் தழல் வெளிப்பட்ட எந்தாய்!
திமில நான் மறை சேர் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அமலனே! அடியேன் ஆதரித்து அழைத்தால்,
'அதெந்துவே!' என்று அருளாயே! 4

Koviloor Digital Library

துடி கொள் நேர் இடையாள், சுரி குழல் மடந்தை
துணை முலைக் கண்கள் தோய் சுவடு,
பொடி கொள் வான் தழலில், புள்ளிபோல், இரண்டு
பொங்கு ஒளி தங்கு மார்பினனே!
செடி கொள் வான் பொழில் சூழ் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அடிகளே! அடியேன் ஆதரித்து அழைத்தால்,
'அதெந்துவே !' என்று அருளாயே! 5

துப்பனே, தூயாய்! தூய வெண்ணீறு
துதைந்து எழு துளங்கு ஒளி வயிரத்து
ஒப்பனே! உன்னை உள்குவார் மனத்தில்
உறு சுவை அளிக்கும் ஆர் அமுதே!
செப்பமாம் மறை சேர் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
அப்பனே! அடியேன் ஆதரித்து அழைத்தால்,
'அதெந்துவே !' என்று அருளாயே! 6

மெய்யனே! விகிர்தா! மேருவே வில்லா
மேவலர் புரங்கள் மூன்று எரித்த
கையனே! காலால் காலனைக் காய்ந்த,
கடும் தழல் பிழம்பு அன்ன மேனிச்
செய்யனே! செல்வத் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
ஐயனே! அடியேன் ஆதரித்து அழைத்தால்
'அதெந்துவே !' என்று அருளாயே! 7

Koviloor Digital Library

முத்தனே! முதல்வா! முக்கணா! முனிவா!
மொட்டு அறா மலர் பறித்து, இறைஞ்சி,
பத்தியாய் நினைந்து, பரவுவார்–தமக்குப்
பரகதி கொடுத்து அருள் செய்யும்
சித்தனே! செல்வத் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அத்தனே! அடியேன் ஆதரித்து அழைத்தால்,
'அதெந்துவே!' என்று அருளாயே! 8

மருளனேன்! மனத்தை மயக்கு அற நோக்கி,
மறுமையோடு இம்மையும் கெடுத்த
பொருளனே! புனிதா! பொங்குவாள் அரவம்,
கங்கை நீர் தங்கு செஞ் சடையாய்!
தெருளும் நான் மறை சேர் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அருளனே! அடியேன் ஆதரித்து அழைத்தால்
'அதெந்துவே!' என்று அருளாயே! 9

திருந்து வார் பொழில் சூழ் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
இருந்தவாறு எண்ணி, ஏசறா நினைந்திட்டு,
'என்னுடைய எம் பிரான்' என்று என்று
அருந்தவா! நினைந்து ஆதரித்து அழைத்தால்,
அலை கடல் அதனுளே நின்று,
'பொருந்தவா; கயிலை புகு நெறி இது காண்!
போதராய்! என்று அருளாயே! 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

48. திரு எம்பாவை

திருமுறை 8/7 இராகம்: மோகனம் பதிகம் 7

திருவாசகத்தில், மாணிக்கவசாகரின் திருவெம்பாவையின் முதல் பாடல் 'ஆதியும் அந்தமும்' ஆகிய பொருளே என்று ஆதி முதல் அந்தம் வரை சிவபெருமானே என்று மனம் உருகி, நெக்கி, நெக்கி, உயிர்களின் மயக்கத்தை போக்கி, மயக்கத்தில் இருக்கும் உறக்கத்தினை களைந்து மார்கழி மாத பொழுதில் தேவர்களும் வந்து குவியும் வண்ணம் எழுச்சி தரும் பாடல்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம் பாடக் கேட்டேயும், வாள் தடங்கண்
மாதே! வளருதியோ? வன் செவியோ நின் செவிதான்?
மா தேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த்து ஒலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே, விம்மி விம்மி மெய்ம்மறந்து,
போது ஆர் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள், கிடந்தாள்; என்னே! என்னே!
ஈதே எம் தோழி பரிசு ஏல் ஓர் எம் பாவாய்! 1

"பாசம் பரஞ்சோதிக்கு" என்பாய், இராப் பகல் நாம்
பேசும்போது; எப்போது இப்போது ஆர் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்! நேரிழையீர்!
சீ! சீ!! இவையும் சிலவோ? விளையாடி
ஏசும் இடம் ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப் பாதம் தந்துஅருள வந்தருளும்
தேசன், சிவலோகன், தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்புஆர்? யாம்ஆர்? ஏல் ஓர் எம் பாவாய்! 2

Koviloor Digital Library

'முத்து அன்ன வெண் நகையாய் முன்வந்து, எதிர்எழுந்து என்
அத்தன், ஆனந்தன், அமுதன் என்று அள்ஊறித்
தித்திக்கப் பேசுவாய், வந்து உன் கடை திறவாய்!
பத்து உடையீர்! ஈசன் பழஅடியீர்! பாங்கு உடையீர்!
புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ?
'எத்தோ நின் அன்புடைமை? எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ, நம் சிவனை?
இத்தனையும் வேண்டும் எமக்கு ஏல் ஓர் எம் பாவாய்!' 3

ஒள்நித்தில நகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக் கொடு உள்ளவா சொல்லுகோம்; அவ்வளவும்
கண்ணைத் துயின்று, அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒரு மருந்தை, வேத விழுப் பொருளை,
கண்ணுக்கு இனியானைப், பாடிக் கசிந்து, உள்ளம்
உள் நெக்கு நின்று உருக யாம் மாட்டோம்; நீயே வந்து
எண்ணிக், குறையில், துயில் ஏல் ஓர் எம் பாவாய்! 4

மால் அறியா, நான்முகனும் காணா மலையினை, நாம்
போல் அறிவோம்", என்று உள்ள பொக்கங்களே பேசும்
பால் ஊறு தேன்வாய்ப் படிறீ! கடை திறவாய்
ஞாலமே! விண்ணே! பிறவே! அறிவு அரியான்
கோலமும், நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச், 'சிவனே! சிவனே!' என்று
ஓலம் இடினும், உணராய், உணராய் காண்!
ஏலக் குழலி பரிசு–ஏல் ஓர் எம் பாவாய்! 5

Koviloor Digital Library

மானே! நீ நென்னலை, "நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன்" என்றலும், நாணாமே
போன திசை பகராய்? இன்னம் புலர்ந்தின்றோ?
வானே, நிலனே, பிறவே, அறிவு அரியான்
தானே வந்து, எம்மைத் தலையளித்து, ஆட்கொண்டருளும்
வான் வார் கழல் பாடி வந்தோர்க்கு, உன் வாய் திறவாய்!
ஊனே உருகாய், உனக்கே உறும்; எமக்கும்
ஏனோர்க்கும் தம் கோனைப் பாடு ஏல் ஓர் எம் பாவாய்! 6

அன்னே! இவையும் சிலவோ? பல அமரர்
உன்னற்கு அரியான், ஒருவன், இரும் சீரான்,
சின்னங்கள் கேட்பச், 'சிவன்' என்றே வாய் திறப்பாய்;
தென்னா என்னா முன்னம், தீ சேர் மெழுகு ஒப்பாய்;
"என்னானை, என் அரையன், இன்அமுது" என்று எல்லோமும்
சொன்னோம் கேள், வெவ்வேறாய்; இன்னம் துயிலுதியோ?
வன் நெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்,
என்னே துயிலின் பரிசு? ஏல் ஓர் எம் பாவாய்! 7

கோழி சிலம்பச், சிலம்பும் குருகு எங்கும்;
ஏழில் இயம்ப, இயம்பும் வெண் சங்கு எங்கும்;
கேழ் இல் பரஞ்சோதி! கேழ் இல் பரங் கருணை!
கேழ் இல் விழுப் பொருள்கள்! பாடினோம்; கேட்டிலையோ?
வாழி! ஈது என்ன உறக்கமோ? வாய் திறவாய்!
ஆழியான் அன்புடைமை ஆம் ஆறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை,
ஏழை பங்காளனையே பாடு! ஏல் ஓர் எம் பாவாய்!8

Koviloor Digital Library

"முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே!
உன்னைப் பிரான்ஆகப் பெற்ற உன் சீர் அடியோம்
உன் அடியார் தாள் பணிவோம்; ஆங்கு அவர்க்கே பாங்கு ஆவோம்;
அன்னவரே எம் கணவர் ஆவார்; அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்;
இன்ன வகையே எமக்கு எம் கோன் நல்குதியேல்,
என்ன குறையும் இலோம் ஏல் ஓர் எம் பாவாய்! 9

பாதாளம் ஏழினும் கீழ் சொல் கழிவு பாத மலர்;
போதுஆர் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே!
பேதை ஒரு பால்; திரு மேனி ஒன்று அல்லன்;
வேத முதல்; விண்ணோரும், மண்ணும் துதித்தாலும்,
ஓத உலவா ஒரு தோழன் தொண்டர் உளன்;
கோது இல் குலத்து அரன்தன் கோயில் பிணாப் பிள்ளைகாள்!
எது அவன் ஊர்? எது அவன் பேர்? ஆர் உற்றார்? ஆர் அயலார்?
ஏது அவனைப் பாடும் பரிசு? ஏல் ஓர் எம் பாவாய்! 10

மொய்ஆர் தடம் பொய்கை புக்கு, முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்து, உன் கழல் பாடி,
ஐயா! வழிஅடியோம் வாழ்ந்தோம் காண்; ஆர் அழல் போல்
செய்யா! வெண்ணீறு ஆடி செல்வா! சிறு மருங்குல்
மை ஆர் தடம் கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண்டுஅருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகை எல்லாம் உய்ந்து ஒழிந்தோம்;
எய்யாமல் காப்பாய் எமை ஏல் ஓர் எம் பாவாய்! 11

Koviloor Digital Library

ஆர்த்த பிறவித் துயர் கெட, நாம் ஆர்த்து ஆடும்
தீர்த்தன்; நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீ ஆடும்
கூத்தன்; இவ் வானும், குவலயமும், எல்லாமும்,
காத்தும், படைத்தும், கரந்தும், விளையாடி,
வார்த்தையும் பேசி, வளை சிலம்ப, வார் கலைகள்
ஆர்ப்பு அரவம் செய்ய, அணி குழல் மேல் வண்டு ஆர்ப்ப,
பூத் திகழும் பொய்கை குடைந்து உடையான் பொன் பாதம்
ஏத்தி, இரும் சுனை நீர் ஆடு ஏல் ஓர் எம் பாவாய்! 12

பைங்குவளைக் கார் மலரால், செங்கமலப் பைம் போதால்
அங்கங் குருகு இனத்தால், பின்னும் அரவத்தால்,
தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்,
எங்கள் பிராட்டியும் எம் கோனும் போன்று இசைந்த
பொங்கு மடுவில், புகப் பாய்ந்து பாய்ந்து; நம்
சங்கம் சிலம்ப, சிலம்பு கலந்து ஆர்ப்ப;
கொங்கைகள் பொங்க; குடையும் புனல் பொங்கப்;
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம் பாவாய்! 13

காதார் குழை ஆட, பைம்பூண் கலன் ஆட,
கோதை குழல் ஆட, வண்டின் குழாம் ஆட,
சீதப் புனல் ஆடி சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள் பாடி அப் பொருள் ஆமா பாடி
சோதி திறம் பாடி சூழ் கொன்றைத் தார் பாடி
ஆதி திறம் பாடி அந்தம் ஆமா பாடி
பேதித்து நம்மை, வளர்த்து எடுத்த பெய்வளை தன்
பாதத் திறம் பாடி ஆடு ஏல் ஓர் எம் பாவாய்! 14

Koviloor Digital Library

ஓர் ஒரு கால் 'எம்பெருமான்' என்று என்றே, நம் பெருமான்
சீர் ஒரு கால் வாய் ஓவாள்; சித்தம் களி கூர,
நீர் ஒரு கால் ஓவா நெடும் தாரை கண் பனிப்ப,
பார் ஒரு கால் வந்தனையாள்; விண்ணோரைத் தான் பணியாள்
பேர் அரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆம் ஆறும்
ஆர் ஒருவர்? இவ் வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்,
வார் உருவப் பூண் முலையீர்! வாய் ஆர நாம் பாடி,
ஏர் உருவப் பூம் புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம் பாவாய்! 15

முன்னிக், கடலைச் சுருக்கி எழுந்து, உடையாள்
என்னத் திகழ்ந்து, எம்மை ஆள் உடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து, எம் பிராட்டி திருவடிமேல்
பொன் அம் சிலம்பில் சிலம்பி, திருப் புருவம்
என்னச் சிலை குலவி, நம்தம்மை ஆள் உடையாள்
தன்னில் பிரிவு இலா எம் கோமான் அன்பர்க்கு
முன்னி, அவள், நமக்கு முன் சுரக்கும் இன் அருளே
என்னப் பொழியாய் மழை! ஏல் ஓர் எம் பாவாய்! 16

செங் கண்அவன்பால், திசைமுகன்பால், தேவர்கள்பால்,
'எங்கும் இலாதது ஓர் இன்பம்' நம் பாலதா,
கொங்கு உண் கரும் குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்கு, நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி,
செம்கமலப் பொன் பாதம் தந்தருளும் சேவகனை,
அம் கண் அரசை, அடியோங்கட்கு ஆர் அமுதை
நங்கள் பெருமானைப் பாடி, நலம் திகழ,
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம் பாவாய்! 17

Koviloor Digital Library

அண்ணாமலையான் அடிக் கமலம் சென்று இறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித் தொகை வீறு அற்றால்போல்
கண் ஆர் இரவிக் கதிர் வந்து கார் கரப்ப,
தண் ஆர் ஒளி மழுங்கி, தாரகைகள் தாம் அகல,
பெண் ஆகி, ஆண் ஆய், அலி ஆய், பிறங்கு ஒளி சேர்
விண் ஆகி, மண் ஆகி, இத்தனையும் வேறு ஆகி,
'கண் ஆர் அமுதமும் ஆய், நின்றான்' கழல் பாடி,
பெண்ணே! இப் பூம்புனல் பாய்ந்துஆடு ஏல் ஓர் எம் பாவாய்!18

உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கு அப் பழஞ் சொல் புதுக்கும் எம் அச்சத்தால்,
எங்கள் பெருமான், உனக்கு ஒன்று உரைப்போம் கேள்!
எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க!
எம்கை உனக்கு அல்லாது எப் பணியும் செய்யற்க!
கங்குல், பகல் எம் கண் மற்று ஒன்றும் காணற்க!
இங்கு இப் பரிசே எமக்கு எம் கோன் நல்குதியேல்,
எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு? ஏல் ஓர் எம் பாவாய்! 19

போற்றி அருளுக ! நின் ஆதி ஆம் பாத மலர்,
போற்றி அருளுக ! நின் அந்தம் ஆம் செம்தளிர்கள்!
போற்றி! எல்லா உயிர்க்கும் தோற்றம் ஆம் பொன் பாதம்!
போற்றி! எல்லா உயிர்க்கும் போகம் ஆம் பூங் கழல்கள்!
போற்றி! எல்லா உயிர்க்கும் ஈறு ஆம் இணைஅடிகள்!
போற்றி! மால், நான்முகனும், காணாத புண்டரிகம்!
போற்றி! யாம்உய்ய, ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்,
போற்றி! யாம் மார்கழி நீர் ஆடு ஏல் ஓர் எம் பாவாய்!

Koviloor Digital Library

49. திருப் பள்ளி எழுச்சி

திருமுறை 8/20 இராகம்: மோகனம் பதிகம் 20

மாணிக்கவாசகரின் பொன்னை எண்ணங்களில் சிவபெருமானை ஆழமாக நிறுத்தி ஆழ்ந்த உறக்கத்தில் உள்ள உயிர்களை பிறப்பு இறப்பு எனும் இருவினைகள் அகன்றும் வண்ணம் அகத்தில் பெருமானை எழுப்புவதாக எண்ணி ஐந்து கரணங்களிலும் ஒருமுகப்படுத்தி 'போற்றி என் வாழ் முதல் ஆகிய பொருளே' என்ற திருப்பள்ளியெழுச்சி எனும் பாடல்.

போற்றி! என் வாழ் முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது; பூங்கழற்கு இணை துணை மலர்கொண்டு
ஏற்றி, நின் திரு முகத்து எமக்கு அருள் மலரும்
எழில் நகை கொண்டு, நின் திருவடி தொழுகோம்
சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
ஏற்று உயர் கொடி உடையாய்! எமை? உடையாய்!
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 1

அருணன், இந்திரன் திசை அணுகினன்; இருள் போய்
அகன்றது; உதயம் நின் மலர்த் திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழ எழ, நயனக்
கடி மலர் மலர, மற்று அண்ணல் அம் கண் ஆம்
திரள் நிரை அறு பதம் முரல்வன; இவை ஓர்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே!
அலை கடலே! பள்ளி எழுந்தருளாயே! 2

Koviloor Digital Library

கூவின பூங்குயில்; கூவின கோழி;
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்;
ஓவின தாரகை ஒளி; ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்கு.,
தேவ! நல் செறி கழல் தாள் இணை காட்டாய்!
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
யாவரும் அறிவு அரியாய்! எமக்கு எளியாய்!
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 3

இன் இசை வீணையர், யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணை மலர்க் கையினர் ஒருபால்;
தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்;
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
என்னையும் ஆண்டுகொண்டு இன் அருள் புரியும்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 4

பூதங்கள் தோறும் நின்றாய் எனில், அல்லால்
போக்கு இலன், வரவு இலன், என, நினைப் புலவோர்,
கீதங்கள் பாடுதல், ஆடுதல், அல்லால்
கேட்டு அறியோம் உனைக் கண்டு அறிவாரை;
சீதம் கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா!
சிந்தனைக்கும் அரியாய் எங்கள் முன் வந்து,
ஏதங்கள் அறுத்து, எம்மை ஆண்டு அருள் புரியும்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 5

பப்பு அற வீட்டு இருந்து உணரும் நின் அடியார்,
பந்தனை வந்து அறுத்தார்; அவர் பலரும்,
மைப்பு உறு கண்ணியர், மானிடத்து இயல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா!

Koviloor Digital Library

செப்பு உறு கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
இப் பிறப்பு அறுத்து, எமை ஆண்டு அருள் புரியும்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 6

அது, பழச் சுவை என, அமுது என; அறிதற்கு
அரிது என, எளிது என; அமரரும் அறியார்,
'இது, அவன் திரு உரு'; 'இவன் அவன்'; எனவே
எங்களை ஆண்டு கொண்டு, இங்கு எழுந்தருளும்,
மது வளர் பொழில் திரு உத்தரகோச
மங்கை உள்ளாய் ! திருப்பெருந்துறை மன்னா!
எது எமைப் பணி கொளும் ஆறு? அது கேட்போம்,
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 7

முந்திய முதல், நடு, இறுதியும் ஆனாய்;
மூவரும் அறிகிலர்; யாவர் மற்று அறிவார்?
பந்து அணை விரலியும், நீயும் நின் அடியார்
பழங் குடில்தொறும் எழுந்தருளிய பரனே!
செந்தழல் புரை திரு மேனியும் காட்டி,
திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி,
அந்தணன் ஆவதும் காட்டி, வந்து ஆண்டாய்!
ஆர் அமுதே! பள்ளி எழுந்தருளாயே! 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே! உன் தொழுப்பு அடியோங்கள்,
மண்ணகத்தே வந்து, வாழச் செய்தானே!
வண் திருப்பெருந்துறையாய்! வழி அடியோம்
கண் அகத்தே நின்று, களிதரு தேனே!
கடல் அமுதே! கரும்பே! விரும்பும் அடியார்
எண் அகத்தாய்! உலகுக்கு உயிர் ஆனாய்!
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 9

Koviloor Digital Library

புவனியில் போய்ப் பிறவாமையில், நாள் நாம்
போக்குகின்றோம் அவமே; இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்றஆறு என்று நோக்கி,
திருப்பெருந்துறை உறைவாய்! திருமால் ஆம்
அவன் விருப்பு எய்தவும், அலரவன் ஆசைப்
படவும், நின் அலர்ந்த மெய்க் கருணையும், நீயும்,
அவனியில் புகுந்து, எமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆர் அமுதே! பள்ளி எழுந்தருளாயே! 10

50. திருப் பொன் ஊசல்

திருமுறை 8/16 இராகம்: மோகனம் பதிகம் 16

சீர் ஆர் பவளம் கால், முத்தம் கயிறு ஆக;
ஏர்ஆரும் பொன் பலகை ஏறிஇனிது அமர்ந்து;
நாராயணன் அறியா நாள் மலர்த் தாள், நாய் அடியேற்கு
ஊர் ஆகத் தந்தருளும் உத்தரகோசமங்கை
ஆரா அமுதின் அருள் தாள் இணை பாடி,
போர் ஆர் வேல் கண் மடவீர்! பொன் ஊசல் ஆடாமோ! 1

மூன்று அங்கு இலங்கு நயனத்தன் மூவாத
வான் தங்கு தேவர்களும் காணா மலர் அடிகள்
தேன் தங்கி, தித்தித்து அமுது ஊறித் தான் தெளிந்து, அங்கு
ஊன் தங்கி நின்று உருக்கும் உத்தரகோசமங்கைக்
கோன் தங்கு இடைமருது பாடி குல மஞ்ஞை
போன்று அங்கு அன நடையீர் பொன் ஊசல் ஆடாமோ! 2

Koviloor Digital Library

முன், ஈறும், ஆதியும் இல்லான்; முனிவர் குழாம்,
பல் நூறு கோடி இமையோர்கள், தாம் நிற்ப,
தன் நீறு எனக்கு அருளி, தன் கருணை வெள்ளத்து
மன் ஊற, மன்னும் மணி உத்தரகோசமங்கை
மின் ஏறும் மாட வியல் மாளிகை பாடி,
பொன் ஏறு பூண் முலையீர்! பொன் ஊசல் ஆடாமோ! 3

நஞ்சு அமர் கண்டத்தன்; அண்டத்தவர் நாதன்;
மஞ்சு தோய் மாட மணி உத்தரகோசமங்கை
அம் சொலாள் தன்னோடு கூடி, அடியவர்கள்
நெஞ்சுளே நின்று, அமுதம் ஊறி, கருணை செய்து,
துஞ்சல், பிறப்பு அறுப்பான்; தூய புகழ் பாடி,
புஞ்சம் ஆர் வெள் வளையீர்! பொன் ஊசல் ஆடாமோ! 4

ஆணோ, அலியோ, அரிவையோ, என்று இருவர்
காணாக் கடவுள்; கருணையினால், தேவர் குழாம்
நாணாமே, உய்ய ஆட்கொண்டருளி, நஞ்சு தனை
ஊண் ஆக உண்டருளும் உத்தரகோசமங்கைக்
கோண் ஆர் பிறைச் சென்னிக் கூத்தன் குணம் பரவி,
பூண் ஆர் வன முலையீர்! பொன் ஊசல் ஆடாமோ! 5

மாது ஆடு பாகத்தன்; உத்தரகோசமங்கைத்
தாது ஆடு கொன்றைச் சடையான்; அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டு, என் தொல் பிறவித்
தீது ஓடா வண்ணம் திகழப் பிறப்பு அறுப்பான்;
காது ஆடு குண்டலங்கள் பாடிக் கசிந்து அன்பால்,
போது ஆடு பூண் முலையீர்! பொன் ஊசல் ஆடாமோ! 6

Koviloor Digital Library

உன்னற்கு அரிய திரு உத்தரகோசமங்கை
மன்னிப் பொலிந்து இருந்த, மா மறையோன் தன் புகழே
பன்னிப் பணிந்து இறைஞ்ச, பாவங்கள் பற்று அறுப்பான்;
அன்னத்தின் மேல் ஏறி ஆடும் அணி மயில் போல்
என் அத்தன்; என்னையும் ஆட்கொண்டான்; எழில் பாடி
பொன் ஒத்த பூண் முலையீர்! பொன் ஊசல் ஆடாமோ! 7

கோல வரைக் குடுமி வந்து, குவலயத்துச்
சால அமுது உண்டு, தாழ் கடலின் மீது எழுந்து,
ஞாலம் மிக, பரி மேற்கொண்டுநமை ஆண்டான்;
சீலம் திகழும் திரு உத்தரகோச மங்கை
மாலுக்கு அரியானை வாய் ஆர நாம் பாடி,
பூலித்து, அகம் குழைந்து பொன் ஊசல் ஆடாமோ ! 8

தெங்கு உலவு சோலைத் திரு உத்தரகோசமங்கை
தங்கு உலவு சோதித் தனி உருவம் வந்தருளி,
எங்கள் பிறப்பு அறுத்திட்டு, எம் தரமும் ஆட்கொள்வான்,
பங்கு உலவு கோதையும், தானும், பணி கொண்ட
கொங்கு உலவு கொன்றைச் சடையான், குணம் பரவி,
பொங்கு உலவு பூண் முலையீர்! பொன் ஊசல் ஆடாமோ! 9

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

51. அச்சோப் பதிகம்

திருமுறை 8/51 பதிகம் 51

உயிர்கள் செம்மை நலம் அடைந்து சிவானுபவம் பெற்று என்றும் எங்கும் சிவனடியில் நிறுத்திட திருவாசகத்தின் 51ம் பாடல் மலங்களை கழித்து பெருமானின் திருக்கருணை எனக்மூகு கிட்டியது போல் யாருக்கு கிட்டும் என்று எண்ணி பாசங்களை விடுத்து தாய் சிவகை ஏற்று வந்த எம்பெருமான் சிவபெருமானின் திருவடியே சரணம் என்றி முக்தி தரும் பாடல்.

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனை,
'பத்தி நெறி' அறிவித்துப், பழவினைகள் பாறும் வண்ணம்
சித்த மலம் அறுவித்து, 'சிவம் ஆக்கி' எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளிய ஆறு, ஆர் பெறுவார்? அச்சோவே ! 1

நெறி அல்லா நெறி தன்னை நெறியாக நினைவேனை,
சிறு நெறிகள் சேராமே, 'திரு அருளே சேரும் வண்ணம்'
குறி ஒன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளிய ஆறு ஆர்பெறுவார்? அச்சோவே !2

பொய்எல்லாம் மெய் என்று, புணர் முலையார் போகத்தே
மையல் உறக் கடவேனை, மாளாமே காத்தருளி,
தையல் இடம் கொண்ட பிரான் 'தன் கழலே சேரும் வண்ணம்'
ஐயன், எனக்கு அருளிய ஆறு, ஆர் பெறுவார்? அச்சோவே ! 3

மண் அதனில் பிறந்து, எய்த்து மாண்டு விழக் கடவேனை,
எண்ணம் இலா அன்பு அருளி, எனை ஆண்டிட்டு, என்னையும் தன்
சுண்ண வெண்ணீறு அணிவித்து, தூ நெறியே சேரும் வண்ணம்,
அண்ணல் எனக்கு அருளிய ஆறு ஆர்பெறுவார்? அச்சோவே !4

Koviloor Digital Library

பஞ்சாய அடி மடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு,
நெஞ்சாய துயர் கூர நிற்பேன், உன் அருள் பெற்றேன்,
உய்ஞ்சேன் நான் உடையானே, அடியேனை வருக என்று,
'அஞ்சேல்' என்று அருளிய ஆறு ஆர்பெறுவார்? அச்சோவே ! 5

வெந்து விழும் உடல் பிறவி மெய் என்று, வினைபெருக்கி,
கொந்துகுழல் கோல் வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தம் அறுத்து, எனை ஆண்டு 'பரிசு அற, என் துரிசும் அறுத்து'
அந்தம் எனக்கு அருளிய ஆறு ஆர்பெறுவார்? அச்சோவே ! 6

தையலார் மையலிலே தாழ்ந்து விழக் கடவேனை,
பையவே கொடு போந்து, 'பாசம் எனும் தாழ்' உருவி,
'உய்யும் நெறி' காட்டுவித்திட்டு, ஓங்காரத்து உட்பொருளை
ஐயன் எனக்கு அருளிய ஆறு, ஆர்பெறுவார்? அச்சோவே !7

சாதல், பிறப்பு, என்னும் தடம் சுழியில் தடுமாறி,
காதலின் மிக்கு, அணி இழையார் கலவியிலே விழுவேனை,
'மாது ஒரு கூறு உடைய பிரான் தன் கழலே' சேரும் வண்ணம்
ஆதி எனக்கு அருளிய ஆறு, ஆர்பெறுவார்? அச்சோவே ! 8

செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரிவேனை,
மும்மை மலம் அறுவித்து, 'முதல் ஆய முதல்வன், தான்
நம்மையும் ஓர் பொருள் ஆக்கி, நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மை எனக்கு அருளிய ஆறு, ஆர்பெறுவார்? அச்சோவே ! 9

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகர் பெருமான் திருவடி போற்றி! போற்றி!
தொண்டனேன் நினையுமா நினையே! 11

Koviloor Digital Library

ஒன்பதாம் திருமுறை
திருவிசைப்பா

இடர்கெடுத்து என்னை ஆண்டுகொண்டு என்னுள்
இருள்பிழம்பு அறஎறிந்து எழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ஒளி விளங்கும்
தூயநல் சோதியுள் சோதி!
அடல்விடைப் பளாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மால் அறியாமைப்
படர்ஒளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே! 1

பாலும் அமுதமும் தேனுமாய்
ஆனந்தம் தந்துள்ளே பாலிப்பான்
போலும்என் ஆருயிர்ப் போகமாம்
புரகால காம புராந்தகன்
சேலும் கயலும் திளைக்குநீர்த்
திருஆவடுதுறை வேந்தனோ(டு)
ஆலு மதற்கே முதலுமாம்
அறிந்தோம் அரிவைபொய்யாததே. 2



Koviloor Digital Library

திருப்பல்லாண்டு

புரந்தரன் மால்அயன் பூசல்இட்(டு)
ஓலமிட்(டு) இன்னம் புகல்அரிதாய்
இரந்து இரந்(து) அழைப்பஎன் உயிர் ஆண்ட
கோவினுக்கு என்செய வல்லம்என்றும்
கரந்தும் கரவாத கற்பக(ன்)
ஆகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

சேவிக்க வந்தஅயன் இந்திரன்
செங்கண்மால் எங்கும்திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாங் குழாமாய் நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதைஎன் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே!

Koviloor Digital Library

பத்தாம் திருமுறை

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே.

உடம்பார் ஆழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேங
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயிற் பகவற்க தாமே.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே

Koviloor Digital Library

பதினொன்றாம் திருமுறை

பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் – நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் – சுடர்உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு.

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே – அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசூடர், பார்,ஆகாயம்
அப்பொருளுந்தானே அவன்.

எனக்கினிய எம்மானை ஈசனையான் என்றும்
மனிக்கினிய வைப்பாக வைத்தேன் – எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்
பெரியானைக் காணப் பெறின்.

எண் அரிய சிவஞானத்துஇன் அமுதம் குழைத்தருளி
'உண் அடிசில்' என ஊட்ட உமைஅம்மை எதிர்நோக்கும்
கண்மலர் நீர் துடைத்தருளிக்கையில் பொன் கிண்ணமளித்து
அண்ணலை அங்கு அழுகை தீர்த்து அங்கனணார் அருள்புரிந்தார்

Koviloor Digital Library

பன்னிரெண்டாம் திருமுறை

நண்ணிய தவச்சிவ யோக நாதரைக்
கண்ணுற நோக்கிய காதல் அன்பர்தாம்
புண்ணியத் தொண்டராம் என்று போற்றிசெய்து
எண்ணிய வகையினால் எதிர்கொண் டேத்தினார். 4

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணாமை உணராதேன். 5

தேடிய மாடு நீடு
செல்வமும் தில்லை மன்னுள்
ஆடிய பெருமான் அன்பர்க்கு
அவன ஆகும் என்று
நாடிய மனத்தினோடு
நாயன்மார் அணைந்தபோது
கூடிய மகிழ்ச்சி பொங்கக்
குறைவுஅறக் கொடுத்து உவந்தார்

அவனுடைய வடிவுஎல்லாம் நம்பக்கல் அன்பு என்றும்
அவனுடைய அறிவுஎல்லாம் நமைஅறியும் அறிவு என்றும்
அவனுடைய செயல்எல்லாம் நமடக்குஇனிய வாம்என்றும்
அவனுடைய நிலைஇவ்வாறு அறிநீ என்று அருள்செய்தார்.

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவ நீதி விளங்குக உலகமெலாம்.

Koviloor Digital Library

ஓம் சிவாய நம

சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் சிவாய நம ஓம்

அண்ணாமலை சிவ சிவாய நம ஓம்
அருணாசல சிவ சிவாய நம ஓம்

ஆலங்காடா சிவாய நம ஓம்
ஆரூர் அரசே சிவாய நம ஓம்

இன்னம்பர் ஈசா சிவாய நம ஓம்
இன்றெனக் கருள்வாய் சிவாய நம ஓம்

ஈங்கோய் மலையாய் சிவாய நம ஓம்
ஈங்கெழுந்தருள்வாய் சிவாய நம ஓம்

உண்ணாமலை சிவ சிவாய நம ஓம்
உண்மைப்பொருளே சிவாய நம ஓம்

ஊனம் ஒன்றில்லாய் சிவாய நம ஓம்
ஊழி ஏழானாய் சிவாய நம ஓம்

எழுத்தறி நாதரே சிவாய நம ஓம்
என்றும் இளையாய் சிவாய நம ஓம்

ஏகம்பம் மேயாய் சிவாய நம ஓம்
ஏடகத்துறைவாய் சிவாய நம ஓம்

ஐந்தெழுத்து உருவாய் சிவாய நம ஓம்
ஐயாறு மேயாய் சிவாய நம ஓம்

ஒற்றியூர் உள்ளாய் சிவாய நம ஓம்
ஒண்பொருளே சிவ சிவாய நம ஓம்

ஓண காந்தேஸ்வர சிவாய நம ஓம்
ஓலம் அடிகேள் சிவாய நம ஓம்

சிவாய நம ஓம் அபாயம் யாவும் போம்
அபாயம் யாவும் போம் உபாயம் அறிவோம்

உபாயம் அறிவோம் உள்ளமது அறிவோம்
உள்ளமது அறிவோம் சிவாய நம் ஓம்

சிவ சிவ என்போம் சிவகதி பெறுவோம்
ஹர ஹர என்போம் அவன் தாள் பணிவோம்.

A. No. 16575
LIBRARY, KOVILOOR

அச்சிட்டோர் : ஸ்ரீகைலாஸ் பிரிண்டர்ஸ், செ–2 போன் : 28611506/9444089506

Koviloor Digital Library

Koviloor Digital Library

சமயக் குரவர்கள்

திருஞானசம்பந்தர்

திருநாவுக்கரசர்

சுந்தரர்

மாணிக்கவாசகர்

சந்தானக் குரவர்கள்

மெய்கண்டார்

அருணந்தி சிவம்

மறைஞான சம்பந்தர்

உமாபதி சிவம்